
# சொக்கநாதர் தன்வந்திரியம்



சுகாதார சுதேச மருத்துவத் திணைக்களம்

சுகாதார அமைச்சு

வடக்கு கிழக்கு மாகாணம்

# சொக்கநாதர் தன்வந்திரியம்

உத்திரகாண்டம் – சௌமியகாண்டம்

பதிப்பாசிரியர்:

**ஐ. பொன்னையாபிள்ளை**

வெளியீடு:

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்
சுகாதார அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணம்

## சொக்கநாதர் தன்வந்திரியம்


| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | சொக்கநாதக் குருக்கள்,<br>மாவிட்டபுரம். |
| முதற் பதிப்பாசிரியர் | : | ஐ. பொன்னையாபிள்ளை. |
| மீள் பதிப்பு | : | மாகாண சுதேச<br>மருத்துவத் திணைக்களம்,<br>சுகாதார அமைச்சு வ.கி.மா. |
| ஆண்டு | : | 2000 - செப்ரெம்பர். |
| பிரதிகள் | : | 1000. |
| பக்கங்கள் | : | xvi - 135. |
| அட்டைப் படம் | : | ச. அ. அருள்பாஸ்கரன். |
| அச்சுப் பதிப்பு | : | பதிப்பகத்திணைக்களம், வ.கி.மா. |


## CHOKANATHAR THANVANTHIRIYAM


| | | |
|---|---|---|
| AUTHOR | : | CHOKANATHAKURUKKAL,<br>MAVIDDAPURAM. |
| FIRST PUBLISHING EDITOR | : | I. PONNIAHPILLAI. |
| RE PRINTING | : | PROVINCIAL DEPT. OF<br>INDEGENOUS MEDICINE<br>MINISTRY OF HEALTH N.E.P. |
| YEAR | : | 2000 - SEPTEMBER. |
| COPIES | : | 1000. |
| PAGES | : | xvi - 135. |
| COVER DESIGN | : | S. A. ARULBASKARAN. |
| PRINTED BY | : | PRINTING DEPARTMENT, N.E.P. |




## ஆளுநர் உரை

பழைய வைத்திய முறைகளையும், மருந்து வகைகளையும் தன்னடக்கிய அழிந்தொழிந்து கொண்டிருக்கும் கிடைக்கரிய விலை மதிக்க முடியாத புத்தகங்களை மீள் பதிப்புச் செய்யும் கைங்கரியம் வரவேற்கத்தக்கது. பாராட்டுதற்குரியது. இந் நூல்கள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு ஏனையோருக்கும் பயன்படும் முறையில் ஆவண செய்யவேண்டும்.

இவ்வாறே கிடைப்பதற்கரிய ஏனைய புத்தகங்களும் தேடிக் கண்டுபிடித்து அச்சேற வழிவகுக்க வேண்டும். இப் பணியினை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மேற்கொண்டிருப்பது சாலப் பொருந்தும்.

ஏ. கே. ஜயவர்த்தனா,
ஆளுநர்,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

## வாழ்த்துரை

சித்த ஆயுள்வேத மருத்துவ சம்பந்தமான நூல்கள் பல இலங்கையில் தோன்றியுள்ளன. அவற்றைப் பல மருத்துவ அறிஞர்கள் பதிப்பித்து வெளியிட்டுமுள்ளனர். அப்படியான நூல்களில் பரராஜசேகரம், செகராஜசேகரம், சொக்கநாதர் தன்வந்திரியம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், அமுதாகரம் என பல வைத்திய நூல்கள் அடக்கம்.

இன்று முன்பு வெளிவந்த பல நூல்கள் கிடைப்பது அரிதாகவுள்ளது. மருத்துவ நூல்களை மீள் பதிப்புச் செய்வதற்குப் பலர் ஆர்வம் காட்டுவதும் குறைவு. இந்த நிலையில் வடகிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட்டு, சித்த ஆயுள்வேத யூனானி மருத்துவ நலன்களைக் கவனிக்க என்று சுதேச மருத்துவத் திணைக்களம் சுகாதார அமைச்சில் உருவாக்கப்பட்டது.

நாட்டில் வாழும் வைத்தியர்கள் வைத்தியர் நலன்புரி சங்கங்கள், ஆயுள்வேத வைத்திய பாதுகாப்புச்சபை போன்ற அமைப்புக்கள் வைத்திய நூல்களை வெளியிடுமாறு எமக்குக் கோரிக்கை விட்டன. அதன் முக்கியத்துவத்தையும் நன்மையையும் உணர்ந்த நாமும், கௌரவ ஆளுநரிடம் வைத்திய நூல்களின் முக்கியத்துவத்தைக் கூறி சம்மதம் பெற்றோம்.



இன்று சில வைத்திய நூல்கள் வடகிழக்கு மாகாண சபையினால் மீள்பதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நல்ல பணிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்த கௌரவ ஆளுநருக்கு நாம் அனைவரும் நன்றி கூறவேண்டும்.

இப்புத்தகங்களை நல்ல முறையில் வெளியிட வேண்டும் என அயராது உழைத்த வடக்கு - கிழக்கு மாகாணசபை சுதேச மருத்துவ பணிப்பாளர் முனைவர் சு.பவானி அவர்களையும் அவருக்குப் பக்கபலமாக நின்ற சுகாதார அமைச்சின் செயலாளருக்கும் எமது பாராட்டுதல்கள் உரித்தாகுக.

புத்தகங்களைப் பதிப்பிக்க தமது பழம்பெரும் நூல்களைக் கொடுத்துதவிய வைத்திய கலாநிதி ஸ்ரீபதிசர்மா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

புத்தகத்தை அழகுற அமைத்துப் பதிப்பித்த வடகிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களத்திற்கும் எமது பாராட்டுதல்கள்.

சித்த ஆயுள்வேத மருத்துவ நூல்களாகிய இம்மருத்துவ நூல்கள் வெளிவருவதற்காக உழைத்த மருத்துவர்கள், மற்றும் அமைப்புக்கள், சுகாதார, சுதேச மருத்துவ ஊழியர்கள் யாவர்க்கும், எனது வாழ்த்துக்களும் பாராட்டுதல்களும் உரித்தாகட்டும்.

இதுபோன்று மேலும் பல வைத்திய நூல்களை வெளியிட்டு பழம்பெருமை வாய்ந்த எம் சித்த ஆயுள்வேதத்துறை மென்மேலும் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல இறைவன் ஆசி புரிவாராக.

ஜி. கிருஷ்ணமூர்த்தி,
தலைமைச் செயலாளர்,
வடக்கு - கிழக்கு மாகாணம்.
திருகோணமலை.
05.09.2000.

## කෙටුම්පත

මිනිසාගේ ජීවිතය පවත්වා ගෙන යාමේ එක් පදනමක් වන්නේ නිරෝගීභාවයයි. ඒ සඳහා ශරීරය සහ මනාව පවත්වා ගත යුතු අතර ආහාර, ව්‍යායාම මෙන්ම ඖෂධ ද ඊට උපකාරී වේ.

ආදි කාලයේ විසූ ඍෂිවරයන් සතුව වන ඖෂධ පිළිබඳව ඉතා ඉහළ මට්ටමේ දැණුමක් පැවැතුනද එය කටවහරින් පැවත ආ නිසාත්, පුස්කොළ පොත්වල හෝ සඳහන් වූයේ ඉතා අල්ප වශයෙන් නිසාත් වර්තමානයේ ආයුර්වේද වෛද්‍ය ක්‍රමය දියුණු මට්ටමකට පැමිණීමට නොහැකි වූ හේතුව ලෙස මම දකිමි. ආයුර්වේද ඖෂධ ක්‍රමය නැගෙනහිර ආසියාතිකයන්ගෙන් පාරම්පරිකව පැවත ආ සරල ක්‍රමයක් බව බටහිර රටවල වෛද්‍ය වරුන්ගේ මතය වුවද, එය ඉතා උසස් මට්ටමක පවතින වෛද්‍ය ක්‍රමයකි.

සිද්ධ, ආයුර්වේද, යුනානි යනුවෙන් ඇති මේ වෛද්‍ය ක්‍රම අනාගත පරපුර වෙනුවෙන් ආරක්ෂා කරදීම අපගේ යුතුකමක් වේ. ආයුර්වේදය පිළිබඳ ලියවුණු පොත් පත් පවා දුර්ලභ වූ අවධියක ඒ සම්බන්ධව ලියවුණු පොතක් නැවත මුද්‍රණය කිරීම ආයුර්වේදයේ වර්ධනයට මහගු සේවයක් බව මම හිතමි.

ආර්. එම්. එස්. රත්නායක,
ලේකම්,
සෞඛ්‍ය හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශ,
උතුරු - නැගෙනහිර පළාත,
ත්‍රිකුණාමලය.
**15.09.2000.**



## ஆசிச் செய்தி

ஆரோக்கியம் என்பது மக்களின் வாழ்க்கை முறைக்கான அடித்தளமாகும். உடல், உள ரீதியான ஆரோக்கியம் திருப்தியளிக்கக் கூடியவகையில் சிறப்புப் பெறவேண்டுமானால் மன இயல் போக்குகளுடன் அள்ளுண்டுபோகும் வாழ்க்கை முறையினை தவிர்த்து சகலரும் போற்றும் பக்குவமானதும், உடற்பயிற்சி கொண்டதுமான வாழ்க்கை அமைப்பைப் பேணிக் கொள்வதே ஒரேவழி. இதற்கும் அப்பால் கிடைக்கப் பெறக்கூடிய சுக வாழ்விற்கான வழித்துணை மருந்து வகைகள்.

பழம்பெரும் ஞானிகளினாலும், சித்தர்களினாலும் பாதுகாக்கப்பட்டு வந்த எமது பாரம்பரிய ஆயுள்வேத மருத்துவமுறையானது வாய்ச்சொல் வழிபடிப்பாகவும் ஏட்டுச்சுவடிகளில் எழுத்தாகவும் காணப்பட்டமையே அதன் வளர்ச்சி வேகக் குறைக்கான முக்கிய காரணியாக நான் கருதுகின்றேன். ஆயுள்வேத மருத்துவ முறையென்பது கிழக்காசிய மக்களின் வழிமுறை மருத்துவ சிகிச்சையாக தொன்று தொட்டு வழக்கத்தில் இருக்கும் மேலைத்தேசிய மருத்துவத்துறை சார் நிபுணர்களும் போற்றும் இலகுவான மருத்துவ முறையாகும்.

ஆயுள்வேதம் யூனானி, சித்த மருத்துவம் என்பவைகள் இன்றைய காலகட்டத்தில் நாளைய சந்ததிகளுக்காக பேணிப் பாதுகாத்து வைக்கக் கடமைப்பட்டவர்கள் நாங்களே. எமது அமைச்சினால் அரிதாகக் கிடைக் கப்பெற்ற ஆயுள்வேத மருத்துவ நூல்கள் மீள் பதிப்பு செய்யப்படுவதானது அம்மருத்துவ உயர் எழுச்சிக்கு நாம் வழங்கும் பாணிக்கையாகவே கருதுகின்றேன்.

ஆர். எம். எஸ். ரத்னாயக்க,
செயலாளர்,
சுகாதார சுதேச மருத்துவ அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
15.09.2000.

## வெளியீட்டுரை

சுதேச மருத்துவமான தமிழ் மருத்துவம் அல்லது சித்த மருத்துவம் மக்களின் ஆரோக்கிய நிலைமை பேணுவதற்கும், ஏற்பட்ட நோய்களை போக்குவதற்கும் பல உண்மைகளை கூறியுள்ளது. முற்காலங்களில் சித்தர்களினால் கூறப்பட்டிருந்த கருத்துக்கள் ஏட்டுச் சுவடிகளிலேயே எழுதப்பட்டிருந்தன.

பழமையான மருத்துவ ஏட்டுச்சுவடிகளை சேகரித்த ஏழாலையை பிறப்பிடமாகக்கொண்ட அமரர் ஐ. பொன்னையாபிள்ளை அவர்கள் சில அரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். ஆனால், இன்றைய காலகட்டத்தில் அந்த நூல்கள் கிடைக்கப்பெறுவது மிகவும் அரிதாகவே உள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சுகாதார சுதேச மருத்துவ திணைக்களத்தினால், பல ஆயுள்வேத வைத்திய சங்கங்கள், ஆயுள்வேத வைத்திய பாதுகாப்புச் சபைகள் போன்ற அமைப்புக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க அரிதான சித்த ஆயுள்வேத மருத்துவ நூல்கள் மீள்பதிப்பு செய்யப்படுவதானது மக்களின் இன்றைய தேவையினை அறிந்துகொண்ட ஆரோக்கியமான தொரு செயற்பாடாகும்.

முதற்கட்ட நடவடிக்கையாக திணைக்களத்தினால் மூன்று நூல்கள் மீள்பதிப்புச் செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றது. எமது மக்களுக்கான இப்பணி மேலும் தொடரும். இவ்வரிய பணிக்காக எல்லா வகையிலும் ஒத்துழைப்புக்களை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

நன்னோக்க அடிப்படையில் இந்நூல்கள் வெளியிடப்பட்டிருந்தாலும் எம்மையறியாமல் சில பிழைகள் அல்லது தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் எனவே அதனைக் கவனத்திற்கொள்வோர் மேற்கூறப்பட்டுள்ள விடயத்தைச் சுட்டிக்காண்பித்தால் அடுத்த மீள்பதிப்பு நடவடிக்கைகளின் போது திருத்தங்களை மேற்கொள்ள எமக்கு வசதியாக இருக்கும். எனவே ஆயுள்வேத வைத்தியர்கள் மற்றும் அறிஞர்கள் தமது கருத்துக்களை எமக்கு அவசியம் தெரியப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

டாக்டர். செ. குமாரவேற்பிள்ளை,
பணிப்பாளருக்காக,
மா. சு. மருத்துவத் திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
15.09.2000.



## பதிப்புரை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுதேச மருத்துவத் திணைக்களம் 1989ம் ஆண்டு தாபிக்கப்பட்டதாகும். சுதேச மருத்துவத் துறையென நாம் கூறும்போது அதில் ஆயுள்வேத வைத்தியம், சித்த வைத்தியம், யூனானி வைத்தியம் ஆகியவற்றுடன் இலங்கை நாட்டிற்குரியதான தேசிய பாரம்பரிய வைத்திய முறையும் உள்ளடக்கம். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மூன்று இனத்தைச் சார்ந்த மக்களும் வாழ்கின்றனர். சிங்கள மக்கள் ஆயுள்வேத வைத்தியத்தையும், தமிழ் மக்கள் சித்த வைத்தியத்தையும், முஸ்லிம் மக்கள் யூனானி வைத்தியத்தையும் மேலும் சித்த ஆயுள்வேத வைத்திய முறையையும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

ஒரு வைத்தியத்துறை முன்னேற்றமடைவதற்கு அந்த துறைசார்ந்த தரமுள்ள மருந்துகளும் அதனை அனுசரித்துக் கையாண்டுவரும் மக்களும்தான் முதலிடத்தை வகிக்கின்றனர். இந்த தரமான மருந்துகள் முற்காலத்தில் ஏட்டுச்சுவடிகளில்தான் எழுதிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. பின்னர் அமரர் ஐ. பொன்னையாபிள்ளை போன்ற பெருந்தகைகளினால் அரிதாகக் கிடைக்கக் கூடியதான ஏட்டுச்சுவடிகள் சேகரிக்கப்பட்டு தரம்வாய்ந்த நூல்களாக வெளியீடு செய்யப்பட்டது. ஆயினும் பெரும்பாலான நூல்கள் இன்னும் அரிதாகவே உள்ளன. சில பழம்பெரும் வைத்தியர்களின் விலை மதிப்பிட முடியாத பொக்கிஷமாகப் போற்றப்படவேண்டிய அரிதான நூல்களாகவே இவைகள் கருதப்படுகின்றன.

மேற்படி நூல்கள் சகல வைத்தியர்களுக்கும் சித்த வைத்தியத்துறை சார்ந்த மாணவர்களுக்கும் கிடைக்கப் பெறல் வேண்டுமென்பதே வடக்கு - கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாகும். அதனை நிறைவேற்றுவதற்கு ஏற்புடையதாக அரிய சித்த மருத்துவ நூல்கள் சிலவற்றை மீள்பதிப்புச் செய்வது என்ற முடிவின் பிரகாரம் அதற்கென 1999ம்

ஆண்டின் இறுதிப்பகுதியில் மாகாண திட்டமிடற் குழுவினால் நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முன்னைய மாகாண சுதேசமருத்துவப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி பூ. உரோமகேஸ்வரன் அவர்கள் இவ்விடயத்தில் மிகவும் அக்கறையுடன் மேற்கொள்ள முடியாது போய்விட்டது.

மீள்பதிப்புச் செய்வதற்கான நூல்களை துன்னாலையைச் சேர்ந்த வைத்தியர் ஸ்ரீபதி சர்மா அவர்கள் தந்து உதவியுள்ளார்கள் என்பதனை பெருமையுடனும், நன்றியுடனும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டிய கடமைப்பாடு எனக்குண்டு.

சொக்கநாதர் தன்வந்திரியம் என்ற இந்த நூல் அமரர் ஐ. பொன்னையாபிள்ளை அவர்களினால் முன்னர் அச்சிட்டு வெளியிடப்பட்டது. பல பிணிகளினது விபரங்களும் அதற்கான சிகிச்சை முறைகளும் இதில் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வாறானதொரு நூலை மீள்பதிப்பு செய்வதில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுனர், பிரதம செயலாளர், திட்டமிடற் செயலாளர், மற்றும் அனைவரும் காண்பித்த ஆதரவானது சித்த வைத்தியப் பெருமக்களினால் என்றுமே நினைவு கூரப்படத்தக்கதொரு விடயமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் என்ற முறையில் இந்த புத்தகத்தின் மீள்பதிப்பு என்ற அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தமைக்காக முதலில் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகளைத் தெரியப்படுத்திக்கொள்வதுடன், இந்த நூலை வெளியீடு செய்வதற்காக பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்புகளை வழங்கி உதவியாக இருந்த எனது திணைக்கள உத்தியோகத்தர்கள் சகலருக்கும் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்கள ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்வு கொள்கின்றேன்.

பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி,
பணிப்பாளர்,
மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.



சிவமயம்

# முகவுரை

பண்டைக்காலத்திலே யாழ்ப்பாணத்திலிருந்த வைத்திய ஆசிரியர்களால் லோகோபகாரமாக இயற்றிவைக்கப் பெற்ற சிறந்த வைத்திய நூல்களுள் இதுவுமொன்று. இந்நூல் உக்கிரகாண்டம், சௌமிய காண்டம் என்னும் இருபிரிவினையுடையது. "உக்கிரகாண்டம்" என்பது சிலபிரதிகளில் குரூரகாண்டம் என்று எழுதப்பட்டிருக்கிறது. சௌமியம்-சாந்தம் என்னும் பொருட்டு.

இருபாலைச்செட்டியா ரியற்றியதும் எம்மால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதுமாகிய அமிர்தசாகரம் பதார்த்தசூடாமணி என்னும் இரு பிரிவினையுடைய வைத்திய விளக்கம் என்னும் நூலுக்கும் இதற்கும் சிற்சிலஇடங்களிற் பெரிதும் ஒற்றுமை காணப்படுகின்றது. அதுகொண்டு இவ்வாசிரியன்மார் இருவரும் ஒரேவடமொழி வைத்திய நூலை ஆதாரமாகக்கொண்டு தத்தம் நூல்களை ஆக்கிக்கொண்டனர் என்று ஊகிக்கலாம்.

இந்நூலாசிரியராகும் சொக்கநாதரென்னும் பெயர்வாய்ந்த சைவக்குருக்கள் மாவிட்டபுரத்தில் வசித்தவர். இவரதுகாலம் இற்றைக்கு ஏறக்குறைய நூறாண்டுகளுக்குமுன் என்ப.

அன்பர்சிலரின் கேள்விப்படி கிடைத்தபிரதிகள் சிலவற்றை ஒப்புநோக்கி இயன்றவரையில் சுத்தமாக இந்நூலை வெளிப்படுத்தியிருக்கிறோம். நூலின் முதலிலே காப்புச்செய்யுள் உட்பட ஐந்துசெய்யுட்கள்வரை கிடைத்தபிரதிகளிற் காணப்படவில்லை. இனி அவைகிடைக்குமாயின் அச்சிட்டு நூலிற் சேர்த்துக்கொள்ளுவோம்.

இவ்வாசிரியர் இயற்றிய நூல்கள் இன்னும் சில உண்டென அறிகிறோம். அவற்றைவைத்திருப்போர் தயைகூர்ந்து அனுப்பிவைப்பராயின் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

ஸ்ரீ முக-சித்திரை. ஐ. பொ.

-----------------------------

## சாற்றுகவிகள்

இ·்து

சுன்னாகம், காவியபாடசாலைத் தமிழ்த்
தலைமையாசிரியரும் வித்துவானும் ஆகிய
புன்னாலைக்கட்டுவன்

### பிரஹ்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்
இயற்றியது.

பூமலி யிலங்கைப் பொற்பார் தீவின
சிரமெனத் திகழுநற் புரம தாய
யாழ்ப்பாண மென்னு மெழில்பெறு நாட்டிடை
இலங்குசடை முடிமே னலங்கொள்பிறை யணிந்த



கறையார் கண்டத் திறையோ னோருபுடை
உமையாண் மேவ நமையாள் குறிப்பொடு
வீற்றிருந் தருளு மேற்றஞ் சான்ற
நகுலத் தனிவரை யகிலந் துதிப்ப
ஒருபால் விளங்க வொருபான் முழங்குதிரைக்
கடல்கொண் டொருவேல் காதலத் தேந்தும்
செவ்வேண் மயிலிடைத் திகழ்ந்தினி தருளும்
கோயில் கொண்ட மாவையம் பதியில்
மேவி யிருந்த தேவியற் குருவாம்
சொக்க நாதத் தொல்பெரும் புலவன்
பொதியத் தருந்தவன் நிதியெனத் தந்த
வைத்திய நூலெலா மரபினி னாடி
முன்னர்ப் பதார்த்த குணமும் பின்னர்
உக்கிரஞ் சௌமிய மெனவிரு காண்டமாய்ப்
பகுத்துமிகு பிணிகள் தொகுத்தறி விதமும்
அறிந்தபின் மருந்து தெரிந்துசெய் விதமும்
அருந்து மருந்துக் கனுபா னாதியும்
நன்குதந் தொருநூல் தன்வந் திரீயமென்
றப்பெயர் புனையூஉ விப்புவி யியற்றினன்
அந்நூ றன்னை யமைபல பிரதியிற்
சிதலை யாதிச் செந்துசெய் பிழையும்
எழுதுவோர் தம்மா லெய்திய பிழையும்
பிறவுநனி நுனித்துப் பிழைதெரிந் தறிகுபு
மெய்பெறத் திருத்தி மேலவர் மதிப்ப
அச்சினி லேற்றி யருளினன் யாரெனின்
ஏழாலை யென்று பெயரெய்திய வூரிடை
வைத்திய சிகாமணி யாகி மருவிய
ஐயம் பிள்ளைமுன் செய்த தவத்தான்
முன்வந் துதித்த நன்மா ணிக்கம்
இலக்கண விலக்கிய மினிதுணர் புலவன்
சுத்தாத் துவித சைவசித் தாந்தி
சிற்றம் பலவன் நித்தம் புரிநடம்
என்று முளந்தனி லொன்றவைத் துணர்பவன்
அலக்க ணின்றி யகிலத் துயிர்கள்
தழைக்கப் புரந்த பிழைப்பில்செங் கோலுடைப்
பரராச சேகரப் பார்த்திபன் பேர்கொள்
நூன்முத லாக நுவல்வைத் தியநூல்
அச்சிற் பலதந் தருளொ டுதவினோன்
நன்னயக் குணம்பல மன்னிய செல்வன்
பொன்னைய பிள்ளையென் றிந்நிலம் புகழத்
தன்பெயர் வைத்த தகைமை யோனே

இஃது

யாழ்ப்பாணம், பரமேசுவரக்கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர்

## பிரஹ்மஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள் இயற்றியது

-------------------

சிறந்த மானுடம் பிறந்துசெறி பயனா(கு)
அறமுத னான்கின் திறனறிந் தீட்டற்கு
உடனலன் பேணலு மொருமுறை யாதலின்
மருத்துவ நூலுந் நிருத்தக வுடைத்தென
நுனித்துணர் புலவன் தனித்துணர் யோகியன்
ஆயுள் வேதத் தாருயிர் வளர்ந்து
பாயுஞ்சிந்தைப் பரவைய னமுதென
முயற்றுச் சிறிதா வியற்றற் கெளிதாய்ப்
பயனுட் பெரிதாப் பகர்பல மருந்தெலாம்
ஒருங்குவீற் றிருக்கும் ஒரு நூல் யாத்துத்
தன்வந் திரிய மெனும்பெயர் தந்தனன்
மாவைப் பதியினன் மாமுரு கிணைக்கே
பாவைப் புனைந்து பதம்பெறு பாவலன்
மிக்க கேள்விசால் சொக்க நாதன்
அத்தகு நூலை யாய்ந்தாய்ந் தறிந்து
கைப்பிழை முதலிய செப்பருங் குறைகளை
யோகியர் போல வேகியாங் குணர்ந்து
புதுவன புனையாது நிதியிது வென்ன
நானில னுவக்கத் தானினி தச்சிற்
பகுத்துத் தந்தனன் றுதிக்கெலா முரியோன்
சாரங்கனிந்த சைவசித் தாந்தத்(து)
ஈரங் கனிந்த வின்றமிழ்ச் சிந்தையன்
திருத்தகு தொண்டர் கருத்தொடு நாவினும்
பொருந்தி விளையாடும் புண்ணிய வாழ்க்கையன்
அகம்புற மருவிய வகலா நோயெலாம்
போக்கும் வைத்திய னாக்குந் திருவினன்
ஓரே ழாலையா முயர்பதி வாழ்க்கையன்
ஆரா வமுதெனு மையம் புகலுமென்
மித்திரன் பொன்னைய வித்தக மணியே

------------------------



வித்துவான் பிரஹ்ம ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்
மாணாக்கர்களி லொருவராகிய
கரணவாய் பண்டிதர்

## திரு. செவ்வந்திநாததேசிகர் அவர்கள் இயற்றியது

-------------------

அயிலேந்துங் கரதலத்துக் குமரவே
ளிருமருங்கு மழகார் மேனிக்
குயிலேந்து மொழிமடவா ரிருவருமன்
புடன்மேவக் குலவுந் தோகை
மயிலேந்து நிலைமைகொள வமர்ந்தருளு
மாவைநகர் வசிக்குங் கோமான்
புயலேந்துங் கொடையாள னிசையேந்து
நடையாளன் புனித்த தோன்றல்

தூக்கமிகுந் தமிழ்ப்புலவன் பலகலையுங்
கற்றுணர்ந்தோன் சொக்க நாதத்
தங்குபெயர்க் குருமுனிவ னகத்தியன்சொல்
வயித்தியநூற் சார்ப தாகப்
பொங்குபொருட் குணங்களுடன் பிணியுமதற்
குறுமருந்தும் பொருந்தக் கூறி
இங்கொரு நூல் செய்ததன்பேர் தன்வந்தி
ரீயமென விசைத்திட் டானே

அந்நூலின் பெருமையுட னருமைதனை
மிகநோக்கி யரிதிற் றேர்ந்தே
இந்நூலிற் பிழையிலை யென் றெவருமதித்
திடப்பதித்தே யினிதிங் கீந்தான்
எந்நூலு நன்குணர்ந்தோ னேழாலை
யூர்வாச னிணையில் சைவச்
செந்நூலின் வழியொழுகிச் சிவனடியே
சிந்திக்குஞ் சிந்தைத் தூயோன்

மக்களுடற் கூறறிந்து மருந்துதவிப்
பிணியகற்றும் வன்மையாளன்
திக்கினிசை நிறுவுமையம் பிள்ளைதவத்
துதித்தமுதற் செல்வப் பாலன்
மிக்குயருங் கீர்த்தியினான் பொன்னைய
பிள்ளையென மேவும் பேரான்
தக்கவர்கள் புகழ்புலவன் வயித்தியநன்
மணியாகுந் தகைமையோனே

--------

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ♦ | சொக்கநாதர் தன்வந்திரியம் பாயிரம் | - 1 |
| | வைத்தியனிலக்கணம் | - 4 |
| | வைத்தியர் அறியவேண்டியன | - 4 |
| | கன்ம நிவர்த்தி | - 5 |
| | நூல்வழி | - 6 |
| ♦ | பதார்த்த குணம் | - 6 |
| ♦ | சுரமூலிகை | - 14 |
| ♦ | குடிநீர் முதலியவற்றுக்குச் சிறப்புவிதி | - 15 |
| ♦ | மூலிகைப் பொதுவியல் | - 16 |
| ♦ | உக்கிர காண்டம் தலைமுதலங்க வியாதிக்கு | - 17 |
| ♦ | மேகரோகம் | - 35 |
| ♦ | ருதுவாகாத பெண்களுக்கு | - 40 |
| ♦ | மலட்டிலக்கணம் | - 42 |
| ♦ | பெரும்பாட்டுக்கு | - 46 |
| ♦ | மூலரோகத்துக்கு | - 47 |
| ♦ | கழிச்சல் | - 50 |
| ♦ | நாராயண தைலம் | - 53 |
| ♦ | கிரந்தியெண்ணெய் | - 56 |
| ♦ | முக்கூட்டெண்ணெய் | - 58 |
| ♦ | சன்னிபதின்மூன்றின் பெயர் | - 62 |
| ♦ | வாதராட்சதன் | - 73 |
| ♦ | சரக்குச்சுத்தி | - 76 |
| ♦ | சௌமியகாண்டம் | - 93 |
| ♦ | சௌமியத்தினியல்பு | - 93 |
| ♦ | மலக்கட்டுக்கு கற்கம் | - 94 |
| ♦ | வில்வாதிலேகியம் | - 103 |
| ♦ | அமுக்கிராச்சூரணம் | - 116 |
| ♦ | சந்தனாதிதைலம் | - 120 |
| ♦ | பிருங்காமிலத்தைலம் | - 124 |
| ♦ | முக்கூட்டெண்ணை | - 127 |
| ♦ | தாழையெண்ணெய் | - 128 |
| ♦ | கடுகெண்ணெய் | - 130 |
| ♦ | முகப்பாலெண்ணெய் | - 131 |
| ♦ | தாழங்காயெண்ணெய் | - 132 |
| ♦ | நன்றியுரை | - 134 |






சிவமயம்.

## சொக்கநாதர் தன்வந்திரியம்.

### பாயிரம்

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணாடு.

பரசிவன் றனது சத்தி
    பண்பினா லுருவங் கொண்டு
திருவருட் கடலாய்த் தெண்ணீர்
    செய்துமுன் றன்க ணோக்க
இருவிழி நின்று மாங்கோ
    ரிரண்டுமுட் டைகளாய்த் தோன்றப்
பருவமாம் படியம் முட்டை
    பாலநேத் திரத்தாற் பார்த்தான் 1

ஒருமுட்டை யின்க ணின்றே
    யுமையுடன் மாலு மற்றைப்
பெருமுட்டை யின்கண் பொன்னும்
    பிறங்குருத் திரனுந் தோன்றி
மருவுமா றன்னை நோக்க
    மற்றவன் மலரி லஞ்சி
விரிதர வந்து தித்தான்
    விரிஞ்சனை முகத்தி னோடும் 2

மூவரு மிவ்வா றுற்று
    முன்னின்று பரவி நிற்பத்
தாவற வவரை நோக்கிச்
    சார்ந்திடு முயிர்கட் கெல்லாம்
மேவுடல் வினைகட் கீடாய்
    விரிதரு கரண மாகி
ஓவற வளித்தல் காத்த
    லொழித்திட லுரித்தென் றோதி 3

அவர்களு மறியா வண்ண
    மருவமா யகண்ட மானான்
அவனரு ணினைந்து மூவ
    ரளவில்வல் லபங்கள் பெற்றார்
அவளகோ சங்க ளோடு
    புரியட்ட காதி தந்த
இவர்தமை நோக்கித் தேவ
    ரெழும்பசி யுற்றுச் சொன்னார் 4

எங்களுக் கசன மியாதென்
    றிரந்திடப் பிரம தேவன்
அங்கவர் தங்க டுன்ப
    மகற்றமா லுடன றைந்தான்
செங்கணான் சிவனை யுன்னித்
    தேவர்க டுயரந் தீர்க்கத்
தன்கையான் முன்னோர் கற்பந்
    தருகட றனைக்க டைந்தான்

அக்கடல் கடைந்த வெண்ணெ
யளவிலாத் திவலை யாகி
மிக்கவான் மீதெ றித்தே
விளங்குயி ருடுக்க ளாகத்
தொக்கதோர் பிண்ட மாகிச்
சுதாகரன் றோன்ற வார்வம்
மிக்கவா னவர்க டின்ன
விரைந்துடு பதியைப் பற்ற 6

விதுவுமெய் வருந்தி யஞ்சி
விண்டுவே சரண மென்ன
மதுரிபு வவனை வானோர்க்
கசனமாய் வந்தா யென்றே
பதமல ரடைந்தோன் றன்னைப்
பகர்ந்துகாற் பலத்தாற் றாக்கக்
கதுமெனப் பவள மேனி
கருகிரா வண்ண மானான 7

பின்றையு மஞ்ச லென்றே
பிதாமகன் மதியை நோக்கி
இன்றுன துயிரி றாம
லிமையவர் பசியுந் தீரத்
துன்றுமோ ருபாயஞ் சொல்வன்
சுரரெலாம் பகிர்ந்தே யுண்ண
ஒன்றோரு கலையா யீயி
லுனதுயிர் போகா தென்றான் 8

என்றபி னிந்து வென்போ
னினிச்செய லெதென் றெண்ணி
நின்றிடத் தேவர் துய்க்க
நிறைகலை குறைந்த வாற்றால்
பொன்றிடு வேனென் றஞ்சிப்
பொருந்துமோர் கலையோ டோடி
நின்றிடு மரிய மாலே
நீசர ணென்று சார்ந்தான் 9

அற்றைநாட் பிதிர்க டங்கட்
கங்கிச மாத லாலே
இன்றைநா ளொழித்தா யிந்து
விதுவுனக் கியல்போ வென்று
பற்றிய பசியி னோடும்
பரிந்துரைத் தார்க ளந்தக்
குற்றமோர் களங்க மாகிக்
குறகிய விந்து வின்பால் 10

இந்துவை யிரவி நோக்கி
யினியுனை மறைக்க மாட்டேன்
எந்தன்மண் டலத்தி லீச
னிணையடி தொழுநீ யென்ன





இந்துவும் பரவ வீச
னிரங்கியே மறைக ளெல்லாம்
சந்திர மௌலி யென்னத்
தரித்துத்தாண் டவமுஞ் செய்தான் 11

சந்தியா னடனந் தன்னிற்
றதும்பிய கங்கை நீரோ
டிந்துமண் டலத்தி லூறி
யெழுந்தமு தெங்குஞ் சிந்த
அந்தவா னந்தக் கூத்தா
லருஞ்சுதை கண்ணான் மாந்தி
இந்திரன் முதலாந் தேவ
ரின்பமுற் றார்கண் மாதோ 12

தேவர்கள் பசியுந் தீர்ந்து
செயமகா தேவ வென்ன
மூவரும் பணிந்து நிற்ப
மூக்கணா னுமையா ளோடும்
ஓவறக் கலைக ளாகி
யுகுத்ததோ டதிக ளாகிப்
பூவுல கத்து ளோர்க்கும்
புலவர்க்கும் பொசிப்பா மென்றான் 13

என்றலுஞ் சராச ரங்கட்
கிறைவியை யீன்ற தாயாய்
நின்றிடு முமையா ளீச
னின்மல வடிகள் போற்றித்
துன்றிய புல்லும் பூடுஞ்
சுரர்க்கமு தாவ தெவ்வா
றென்றுழி யவளுக் கீச
னியம்பிய தெல்லாஞ் சொல்வன் 14

ஆருதற் கன்ன கோச
மாகிய புற்காய் கந்தம்
வாருதி சூழ்ந்த விந்த
மண்டலத் தன்றி யில்லைப்
பாரத கண்டந் தன்னிற்
பன்னிய தனந்த மாமால்
ஓருயிர்க் குதவி லும்பர்க்
குள்ளநா ளுறுவ ரின்பம் 15

பெற்றிடுமங் கந்த மூலம்
பெருங்கனி காயோடன்னம்
உற்றவர்க் குதவ றானே
யுயர்பஞ்ச வெக்ய மென்ப
செற்றவ் ருயிர்க்கச் செய்தான்
றேடியே யனுபானத்தை
மற்றது மருந்தே யன்றி
மனிதர்க்கு முறுதி யுண்டோ 16

என்றர னியம்பி யிருந்து
விரவிமண் டலத்தி லுற்ற
அன்றுமண் டலத்திற் றானே
யந்தரத் தான மானான்
என்றுமிச் சரிதை கேட்போ
ரியம்புவோ ரின்ப மெய்தித்
துன்றுறார் நோய்பேய் துன்பஞ்
சுரரென வாழ்வார் தாமே 17

## வைத்தியனிலக்கணம்

வாக டங்கள் வகுத்திடு மாயினும்
மோக மின்றி மொழிந்திடு காலநோய்
ஆகமங்க மனுபோக மைந்தையும்
ஓகை யோடுணர் வோனுயர் பண்டிதன் 18

ஆயுள்வேதியர் தங்கட் கருங்குறி
தாயி னும்முயிர் கட்குத் தயவுளான்
நோய்பி றர்க்கெனிற் றன்னுட னோயென
ஆய்வ னேலவ னேயரு ளாளனே 19

குருக்கள் கோக்கள் விருத்தர் குளவிகள்
கருக்கொண் மாதர் துறந்தவர் கற்றவர்
பொருட்கொ டாதிருந் தாலுமே போற்றிடென்
றிருக்கு மோது மிதையு முணர்ந்தவன 20

மால யன்சிவன் மற்றுள தேவர்பாற்
சாலு மன்பு தழைத்திடு முள்ளத்தன்
சீல மேதினஞ் சென்றுளஞ் சிந்திப்பான்
நூலு ணர்ந்தவ னேதும் வயித்தியன் 21

மிடிபொ றாமை பிறர்பொருண் மேல்விருப்
படியி டாதவ னச்ச மதங்கெறு
மடியுஞ் சோம்பு மயக்கமு மில்லவன்
திடமு ளான்செய வேண்டுஞ் சிகிச்சையே 22

தேசபாடை தெரிந்து மருந்துசெய்
காசில் கைமுறை கற்பம் புடஞ்செபம்
ஆசி லெந்திர பேத மறிந்துசெய்
வாசி யுள்ளவ னேநல் வயித்தியன் 23

நாலு வன்னத்து ளாரு நலந்தரும்
சீல மாரனு லோமருஞ் செய்யலாம்
நூலு ரைத்த வயித்தியந் நூலிலா
மாலு டன்பொருள் வாஞ்சையிற் செய்யொணா 24

## வைத்தியர் அறியவேண்டியன

கன்ம பாகமுந் தேசமுங் காலமும்
தன்ம மும்முடற் கூறுஞ் சரிதையும்





பன்மை யாமனு மானப் படியினால்
நன்மை கண்டுபின் செய்ய நலந்தரும் 25

நாடி கைமணி போ்ந்த நரம்பினின்
றோடுங் கால்கள் கபோலத்தி லுற்றுநின்
றாடு நாள மனுபோகத் தாலறி
கேடின் மற்றதெல் லாஞ்சொலக் கேட்டறி 26

### கன்ம நிவிர்த்தி

மூன்று கன்மங்கண் முற்றிப் பிணியெனத்
தோன்றும் வன்னியிற் றூம மலைக்கண்போல்
ஊன்ற தற்குப சாந்திக ளோடதி
ஆன்ற தான மரனுக் கபிடேகம் 27

அரிவி ரும்ப வலங்கார மர்ச்சனை
பிரம தேவனை யுன்னிப் பிராமணர்க்
குரிய போசன மூட்ட லுதயத்தில்
இரவி வந்தனை செய்த லியல்பதே
முருகன் சாத்தன் வயிரவன் மும்மதக்
கரிமு கத்தன் கணங்களுக் கோதனம்
தருநி வேதனந் தத்தஞ் சமயங்கட்
குரிய தெய்வங்கட் கெல்லா முபாசனை 28

எரிபு ரந்தர னீசன் குபேரன்மால்
வருண ராசன் வருகுண பாசனன்
தரும னும்பர்க டங்களைச் சுட்டியே
புரியும் வேள்வியிற் பொங்கவி தூர்த்திடல் 29

காடு காள்பலி காகத்துக் காம்பலி
வாடி னர்க்குண்டி வந்தவ ருக்குண்டி
நீடு பாசனை நீள்கபி லைக்கறு
கோடு காருக பத்திய மாமறம் 30

மந்தி ரம்மணி மாமக மட்டகை
சந்தி பூதநாட் பக்கந் தபோதனர்க்
குந்து கின்ற வுபவாச நோன்பினாற்
சிந்தை கூர்ந்து பழிகளைத் தீர்ப்பரே 31

காற மும்புறக் கான்மலை யேறுதல்
ஊறு கங்கைப் புனலுள வாடுதல்
நீறு பூசி நிமலனைச் சிந்தித்தே
தேறு யோகினிற் சிந்தை செலுத்துதல் 32

என்று நாற்பத்தெண் ணாயிாம் மாதவர்
துன்று பேரவை கேட்கத்தொன் னாளரன்
தன்று ணைப்பதந் தாளுந்தன் வந்திரிக்
கொன்ற வோதிய தோதின் சூதனே 33

## நூல்வழி

சூத னோதிய சூத்திரத் தானமே
யாதியாக வருந்தவ ரோதிய
சாதி யான சதச்சுலோ கத்துக்கும்
பேதி யாதிந்தப் பேரருட் செந்தமிழ் 34

மந்தி ரம்மருந் தோடு மணிபல
தந்தி ரஞ்செயுஞ் சம்பிர தாயமும்
நிந்தி யாமற் குருமொழி நேசித்துச்
சிந்தை நம்பிடச் சித்திக்கு மீதெலாம் 35

பாயிரம் முற்றிற்று

## பதார்த்த குணம்

வேம்பிற் பச்சிலை வாதம் விலக்கும்பூக்
காம்பு பித்தமுஞ் சேடமுங் காதும்வேர்
பாம்புப் பல்விடந் தீர்க்கும் பழவிரை
தேம்பு மெண்ணெய் சிதைக்கும் பிணியெலாம் 36

பட்டை காய்ச்சிப் பருக மகோதரம்
விட்டு நீங்கும் விடம்வலி குன்மாம்
எட்டு மோடு மிடுநிம்பத் தெண்ணெயைத்
தொட்ட சன்னிக ளெல்லாந் தொலையுமால் 37

### வில்வம்

வில்வ பத்திரி மேகம் விலக்கும்பூ
வல்ல தாது வழியா தடக்குங்காய்
கல்லி மூழ்கக் கபோலக் கரப்பன்போம்
மல்கு வேர்பித்த வன்சுரம் போக்குமால் 38

### வாழை - பொது

வாழை யிற்கனி யுட்சுர மாற்றும்பூ
ஏழை யார்பெரும் பாட்டிடர் தீர்க்குந்தண்
டாழு முந்தி மலக்கட் டறுக்குங்காய்
சூழு மூலப்ர மேகந் தொலைக்குமே 39

### மொந்தன்வாழை

மொந்தன் வாழை முதிர்பழத் தோலினால்
சந்து பொத்திக் கடுவன் றுவிர்ந்திடும்
வெந்த காயுடற் புண்ணை விலக்குமே
கந்த நீர்கறைப் பித்தத்தைக் கட்டுமே 40

### இதரைவாழை - கதலிவாழை

இதரை வாழைப் பழத்தி லெழுபித்தத்
துதர வாயுவுட் காய்ச்ச லொழிக்கும்பூச்
சிதையு நீருணக் கொப்பந் தரித்திடும்
கதலி விக்கலுங் கக்கலுந் தீர்க்குமால் 41





### முருங்கை

முருங்கைப் பச்சிலை மந்த மொழிக்கும்பூக்
கரும்ப னார்க்குக் கணவனைக் காட்டுங்காய்
இரும்பு போல வுடலை யிறுக்கும்வேர்
பரம்பு *மூடிகப் பல்விடத் தீர்க்குமால் 42

### மாலிலங்கை - தேவதாரு

மாவி லங்கை மரப்பட்டை வேரிலை
பூவும் வாதமெல் லாத்தையும் போக்கிடும்
தேவ தாரஞ் செயித்திடுஞ் சேடத்தைத்
தாவு பித்த சுரமுந் தணிக்குமால் 43

### புங்கு - புன்னை - எட்டி

புங்கும் புன்னையும் பொன்மல ரெட்டியும்
அங்க மெங்கு மரிக்குங் கரப்பனைப்
பங்க மாக்கும் பருங்குட்டம் வாதமும்
தங்கி டாது தவிர்த்திடுஞ் சாரவே 44

### பாலை

பாலை யின்கனி தாது வடக்கும்பால்
சீல மாதரைச் சேரும் வலிதரும்
சாலும் பட்டை தகர்ந்த வுடலைமுன்
போல மைக்கும் பொலிந்த தயிலமும் 45

### மருது முதலியன

மருதி யங்கொதி மஞ்ச ணுணாவிலை
கருது வீக்கங் கரப்பன் கிரந்திநோய்
விரத வெட்டு விடங்களிற் சில்விடம்
மருதணிக்கு மிவைகளு மாறுமே 46

### இருப்பை

மதுகத் தின்னிலை மாற்றுந் தலைவலி
விதனஞ் செய்குடல் வாதம் விலக்கும்பூப்
பதன வெண்ணெய் பலவிடந் தீர்த்திடும்
முதிய வாதமுஞ் சேடமு மோட்டுமே 47

### வாகை - வஞ்சி - உவாய் - கொன்றை

வாகை வஞ்சி யுவாய்மலர்க் கொன்றைவேர்
சாகங் காயிலை பட்டை யொருசரி
ஆகுங் குட்டம் விடமரிப் பாதிகள்
போக வாய்வரு புற்றையும் போக்குமே 48

### வன்னி

வன்னிப் பத்திரி கொப்பம் வளர்க்கும்பூத்
தின்ன வெட்டை வலிகடுத் தீருங்காய்

* மூடிகம் - எலி.

பன்னு பட்டை கஷாயம் பருகவே
மன்னு மூத்திர தாரை மறிக்குமே 49

**வேலம்பட்டை முதலியன**

வேலம் பட்டை விடத்தல்பொன் வேங்கைமா
ஆல கத்திநல் லாத்தி யரசிவை
சாலுஞ் சோணித பித்தமுந் தையலார்
ஏலும் பித்தத் தெழும்பிணி தீர்க்குமே 50

**காட்டத்தி - கருவேல் - நிலவிளா**

காட்டி லத்தி கருவேல் நிலவிளாப்
பூட்டு மக்கரக் காய்ச்சலைப் போக்குநீர்ப்
பாட்டை மாற்று மலையும்பற் கெட்டியாம்
நாட்டு கொர்ப்பத்திற் புண்ணு நசிக்குமே 51

**நொச்சி முதலியன**

நொச்சி பூவிலை வேரு நுணாவகில்
நச்செ ருக்குவெட் பாலைநா ரங்கமும்
அச்ச மின்றி யகற்றிடுங் காசத்தைத்
துச்ச வாத சுரசேடந் தோமறும் 52

**காட்டுநாரத்தை முதலியன**

காட்டி னாரங்கங் கான்றை யழிஞ்சில்காற்
றோட்டி தோடை துவரை தொலைத்திடும்
காட்டுங் கண்தலை காதுக போ்லம்வாய்
மூட்டு நாசி யரிப்புமுப் பீனிசம் 53

**கச்சல்நாரத்தை, கான்றை, குமிழ், எலுமிச்சம்பழம்**

கச்சல் நாரத்தை கான்றை குமிழெலு
மிச்சை நற்கனி பீனிசம் வாய்மணம்
அச்ச மில்தலை வாயு வரிப்புவாய்க்
கச்சல் பித்தக் கலக்கமு மாற்றுமே 54

**அகத்தி**

பசிய பச்சிலை சீதம் பழுப்பினால்
நசியஞ் செய்யப் பயித்தியந் நாடிடாக்
கசியும் பூவிலை பிஞ்சுங் கறிபண்ணிப்
பொசிய கத்தி பயித்தியம் போக்குமே 55

**செவ்வகத்தி முதலியன**

செவ்வ கத்தி யிலைசிற் றகத்திசெம்
மௌவல் மாலதி கொ்ப்பம் வளர்த்திடும்
கொவ்வை வாயித முந்தியிற் புண்ணெலாம்
எவ்வ மின்றி யெடுத்திடும் வெட்சியே 56





**கான்றை முதலியன**

கொன்றை பூவர சித்தி கொவிழ்ப்பட்டை
துன்று கள்ளிக் கொழுந்து சுரபுன்னை
மன்ற லார்மலர் மாற்றுங் கிரந்திப்புண்
நின்றி டாது பவுந்திர நீக்குமே 57

**மா, ஆல், அத்தி, கொன்றை, ஈஞ்சு**

சூத மாலத்தி பட்டை துவைத்துண
மாத ருந்தி யழிகொர்ப்ப வாதைபோம்
தாது வார்துளி ரீச்சங் குருத்துணக்
காது நஞ்சுக் கொடியைக் கரைக்குமால் 58

**தித்தி முதலியன**

தித்தி யின்கனி கள்ளுச் செழுங்குருத்
தத்தின் வேர்க ளரசம் விரைபிசின்
பித்த முள்ளில வம்பிசி னாவிரை
தொத்து நீரழி வெல்லாந் தொலைக்குமால் 59

**கடலிறாஞ்சி முதலியன**

கடலி றாஞ்சி யிரண்டு கபித்தம்வெண்
மடல கத்தியு மாத்தியும் பிஞ்சுடன்
கடலை பூளை நறுவிலி யல்லிக்காய்
அடல்செய் யாவிரை யஞ்சு மகற்றுநீர் 60

**தான்றி, நெல்லி, கான்றை**

தான்றி நற்கனி மூன்றுஞ் சமன்செயும்
தோன்று நெல்லிக் கனிபித்தந் தோமற
மூன்று மொக்கு மிலைகா யொருசரி
கான்றைக் காயிலை காசத்தைப் போக்குமே 61

**கடுக்காய் - பொது**

பூவுங் காயும் பொருந்திடு மூன்றுக்கும்
மேவு மெண்ணெய் குடிநீர் விரேசனம்
யாவுஞ் செய்மருந் தெல்லா மமிர்தமாம்
நாவு முண்ணக் கடுக்காய் நலந்தரும் 62

இடும ருந்துப் பகையிளைப் பீழைநோய்
படலங் கண்ணிற் பசாடு வலிபித்தம்
உடலி லுள்ள வியாதிக ளொன்றற
அடுவ தாங்கடுக் காயமிர் தத்தினால 63

**கடுக்காயின் பேதம்**

விசையை யென்ப சுரைக்குடு கோ்க்குந்தோல்
அசைவில் காய்ச்சலொ டையு மகற்றுமேற்

பசையி லாத வுரோகிணி நாற்பட்டம்
இசையு மெல்லா வியாதிக்கு மோர்க்குமே 64

பெருங்க டுக்காயிற் கொட்டை பெருந்திடும்
தரும்ப ருப்புக்கண் ணோய்க டவிர்திடும்
பரம்பு சீவந்தி பட்டைமுன் றாகுந்தோல்
விரும்பு மேக வியாதிக மர்க்குமே 65

அபய மென்ற கடுக்கா யருந்தவே
கபம கன்றிடுஞ் சித்திகை கூடும்வாய்
சிவகு ணந்தரும் வாணிசொல் வார்த்தையாம்
சவையை வெல்லவும் வல்லபஞ் சாருமே 66

மலையி லன்றியிம் மானிலத் தியாவரே
நிலைய றிந்தவர் சித்தர் நிலைவரம்
அலைய வேண்டுவ தில்லை யதுவொன்றே
கலைகொண் ஞானந் தருங்கடுக் காய்க்குணம் 67

### சாதிக்காய்

சாதிக் காயினிற் றாது வலுப்படும்
வாத சேற்பன மாறு மகட்டினிற்
கேத மார மலத்தையுங் கெட்டியாய்ப்
போத லின்றி யடக்கும் பொருமலும் 68

### இலந்தைக்கனி

இலந்தை யின்கனி சேற்பன மென்பதும்
கலந்த வாதமுங் காய்ச்சலிற் சீதமும்
அலர்ந்த வாயு வசீரண மூன்றையும்
உலர்ந்த வாத வுவாந்தியுந் தீர்க்குமே 69

### காட்டுமாங்கனி - புனரைக்கனி

காட்டின் மாவிற் கனிகரை நீரினால்
மூட்டு மாங்கிஷ முற்றுஞ் செரித்திடும்
பூட்டு நன்மணிப் பூவந்தி யின்கனி
மாட்டுக் குள்ளடைப் பன்றனை மாற்றுமே 70

கண்ட மாலை கரப்பனில் வாய்க்குளே
மண்டு புற்றுப் புரைதுரு மாங்கிஷம்
கண்ட கட்டு வியாதிக்குங் காரமாம்
அண்ட முன்ன மரிக்கும் புணரியே 71

### கூகைமா முதலியன

கூகை மாவிலை குன்றி கருங்கொடி
வாகை வன்னி தெகிள்வரி மாங்கொடி
நாகமல்லிகை திப்பிலி யானைநோய்
போக நீக்குங் கவளம் பொசிப்பிக்கும் 72





### தும்பைமுதலியன

தும்பை சின்னி யவுரி துளசிரண்
டின்ப மேனியின் பூற லியங்குவாய்
சம்பு சாரணையுள்ளி சதகுப்பை
கெம்பு சில்விடங் கேடற நீக்குமே 73

### பருத்தி

பருத்தி யின்னிலை காய்கொட்டை வித்திற்பால்
வருத்து பித்தமுஞ் சேடமு மாற்றும்பூப்
பொருத்து பொல்லாச் சிலந்தி விடம்போகும்
பெருத்த நீர்பெரும் பாட்டையு நீங்குமே 74

### தூதுவளை

தூது பத்திரி யுண்டி தொலைக்கும்பூத்
தாது வர்த்தனை யாக்கு மதன்கனி
யோது பத்துநூ றுட்பிணி யாற்றுங்காய்
வாத பித்தமொ டையையு மாற்றுமே 75

### சிற்றமட்டி முதலியன

சித்த மட்டிநற் சீரகஞ் செம்பிளி
கொத்த மல்லி குறாசாணி கூகைநீ
றொத்த பாலை மதூக முறுங்கனி
மெத்து சீதம் வியைத்திடு மேவியே 76

### மிளகு முதலியன

மிளகு கோட்டம்வெட் பாலை யிலாமிச்சை
துளவந் துத்தி துடரி முசுட்டையும்
கிளைகொள் செச்சை நிலப்பனை நீர்விட்டான்
அளவி லுட்டண வாத மகற்றுமே 77

### குமரி முதலியன

குமரி குன்றிபொன் னாங்கண்ணி கூவிளை
சமரி தாளி பலவன் சடாமஞ்சி
கமரி யேல மிருவேலி கஞ்சமும்
திமிர மாமதி சீதளஞ் சேர்க்குமே 78

சுண்டி கோவை துவரை மருங்காரை
பிண்டி கூத்தன் குதம்பைபெருங்கரும்
பிண்டு பாலைப் கொடியிரு தாமரை
அண்டலாமதி சீதன மாகுமே 79

### மாதுளங்கனி முதலியன

மாது ளங்கனி காயிலை வாதமாம்
சீத ளைக்கனி பித்தந் தேன்றோடையும்

ஓதும் பித்த மடக்கு முதும்பர
சூதத் தின்கனி மூன்றுந் தொகுக்குமே 80

நெல்லி யொன்று நிமிர்த்திடும் வாதமாம்
புல்லு மாப்புளி யுட்டண வாதமாம்
சொல்லு சேடந் தொலைக்கும் புளியிலை
மல்கு கண்ணில் வலிபுண்ணு மாற்றுமே 81

பேர மட்டி பெருமருந் திஞ்சியும்
சேரு கின்ற சிவனார் சிறுகுமிழ்
கார வல்லி கராம்பு கழற்கொடி
ஈருங் காஞ்சுரை ரண்டுமத் துட்டணம் 82

முத்தக் காசு முசுமுசுக் கைநரிக்
கொத்த முற்க நெருஞ்சி யிரண்டுடன்
துத்தி சீந்தில் சிறுகீரை சோடுழுந்
தத்தி யாரை யிரண்டதி சீதளம் 83

பொன்மு சுட்டைபுல் லாந்தி யிரண்டுநீர்க்
கன்னி வள்ளிவெண் பூசனிக் காய் பலா
உன்னுங் கொம்மடி கக்கரி யோடுழுந்
தின்ன றீர்க்கு மிவைகளுஞ் சீதளம் 84

காக்கு றட்டை யிரண்டுக ளப்பன்னை
பூக்கும் வேலிப்பருத்தி புரோசுவாய்
ஆக்குங் கோழி யவரை யரத்தைரண்
டேற்கும் வாத மெடுக்கும துட்டணம் 85

சிவதை வச்சிரச் சீரி திராய்பராய்
கவரி கள்ளி கொடுவெலி நொச்சியும்
உவரி யுப்பிலி வேளை யிரண்டுடன்
அவுரி வாத மடக்கும துட்டணம் 86

மணித்தக் காளி மரமஞ்ச டக்காளி
பணைத்த பூத கரப்பன் பருமரம்
இணைக்கு மக்கரா வீர்கண்டங் கத்தரி
அணைக்கு முள்ளியுஞ் சேடம கற்றுமே 87

பசளி வள்ளி கவிழ்தும்பை பச்சைசரண்
டசைவில் கோரை விழல்புல் லரிசியும்
இசையு நெய்ச்சிட்டி யீரவெண்காயம்ரண்
டசைவி லாவறு கற்ப சயித்தியம் 88

காவி ளாய்வெள் ளறுகு வெண் காக்கணம்
மேவ முக்கிரா மேனிசா ணாக்கியம்
பூவி னின்பம் பொடுதலை 0 பூதலத்
தாவ ரையார்க் கதிகமா முட்டணம் 89

முடக்கொற் றான்குழி மீட்டான்முட் கத்தரி
துடக்கற் றான்கிரு மிச்சத்துரு சொல்வெதுப்
படக்கி யாமணக் காகிய பேதங்கள்
உடற்கு ளுட்டணந் தோலின்மேற் சீதளம் 90

0 பூதலத்தாவரை - நிலாவரை.





நறு*ம ணப்புநன் னாரி பிரமியும்
மருளுஞ் சுண்டைக் கொடிமஞ்சண் மாஞ்சிலும
பறள்ச டைச்சி செருப்படி பம்பையும்
அரிசி முஞ்சியு மார்க்கும துட்டணம் 91

அரிசிக் கோரை கவலையார் வள்ளியும்
வரிசை யெல்லாம் வளர்த்திடும் வாதத்தை
வரகு கம்பு பயறு வகையெல்லாம்
உரைசெய் வாதமே கொள்தினை யுட்டணம் 92

எள்ளு வேணு சிறுபய றேலமும்
அள்ளு சீரகங் கோதும்பை யல்லிவித்
துள்ள சாமை பருத்திவித் துண்பதம்
கொள்ள நன்றறி சீதளங் கூட்டுமே 93

பேய்க்கொம் மட்டிபேய்ப் பீர்க்குப்பே யத்தியும்
ஆக்கும் பாகல் பழுபாக லச்சுரை
நீக்கு மூமத்தை நீடுய ரெட்டியும்
ஆக்குங் கான்றை யலரி யதிபித்தம் 94

நந்தி யோரிதழ்த் தாமரை நல்விழா
அந்தி மல்லி யரத்தைநல் லாவிரை
குந்தி ருக்கங் குமிழ்வஞ்சி கோட்டம்பூ
வந்தி ரோகிணி மாற்றுங்கண் ணோயெல்லாம் 95

உமிரி பச்சை யெலுமிச்சை துத்தியும்
அமரி காட்டுக் கரணையங் கோலவித்
திமிர வெண்குன்றி திப்பிலி முட்டுளாய்
அமர பாணத் தரிப்பை யடக்குமே 96

குன்றி விட்டுணு காந்தி கொடும்புலி
பன்றி கோளரி பட்சி யடிக்கொடி
துன்று சுக்குச் சுகத்துக்கெல் லாம்பொது
வென்று ரைக்கு மெழுதிய வாகடம் 97

பனையின் கள்ளுனப் பாண்டு வியாதிபோம்
நினையு மப்பத நீருண வெப்புப்போம்
நனையு நுங்குண நாவின் வரட்சிபோம்
கனிய ருத்திடக் காயங் கனக்குமே 98

கொட்டை யிற்கன வாதங் கொழுங்கிழங்
கிட்ட நீர்மலக் கட்டை யெடுக்குமே
பட்ட சேடம்பரிக்குங்கண் டுபனங்
கட்டி குன்மக் கசலைசற் றாறுமே 99

தெங்கு பூப்பசுப் பாலினிற் சேர்த்துண
நங்கை பூத்து முழுகுநாட் காலமே
தங்கு பூப்புத் தரித்திடுங் கெர்ப்பமும
அங்கம் வற்று மழற்சுர வந்திக்கே 100

* மணப்பு - இலாமிச்சை.

பாளை நீர்மதம் பாலிக்கும் பச்சிள
நாளி நேரம் பழஞ்சுர நாவொட்டி
மாளு மஞ்சட்கா மாலையு மாற்றுமே
வேளை வெல்விக்கும் வெண்காயப் புளியும்பால் 101

பொதுக்குணபாடல் முற்றிற்று.

## சுரமூலிகை

### தோஷ சுரம்

சுக்குத் திப்பிலி மூலஞ் சுரர்தருச்
சிக்குஞ் செவ்வியஞ் சித்திர மூலமும்
வைக்கும் பேர்மட்டி வார்த்துநீர் காய்ச்சியே
துய்க்கத் தோஷ சுரந்தொலைந் தோடுமே 102

### சீதசுரம்

தேக்குச் செவ்வியஞ் சேர்கருஞ் சீரகம்
ஆக்குந் தும்பைவேர் திப்பிலி யைந்துடன்
வாக்கு நீர்மதுத் துள்ளியிட் டுண்ணவே
போக்குஞ் சீத சுரத்தோடு பூதமும் 103

பேரமட்டி யரத்தை பிரண்டையோ
டாருந் திப்பிலி யக்கறா காரமும்
சேருந் தேனுடன் றேக்கெறி மந்தமும்
சாருஞ் சீத சுரமுந் தவிருமே 104

### பித்தக்காய்ச்சல் பெரும்பாடு

முத்தக் காசு புடோல்முருங் கையின்காம்
பத்திப் பட்டை யருஞ்சிற்ற மட்டியும்
வத்தக் காய்ச்சிப் பருக வயிற்றிற்புண்
பித்தக் காய்ச்சல் பெரும்பாடு தீர்க்குமே 105

### கழிச்சல் காய்ச்சல்

பொன்மு சுட்டை வேர் மாம்பூ விரைவறுத்
துன்கு றாசாணி யோமம் விடயமும்
தின்னு நீருடன் றேன்றுளி யிட்டுண
மன்னு காய்ச்சல் கழிச்சலு மாறுமே 106

### பீனிசக் காய்ச்சல்

கரிய சீரகம் கான்றைவேம் பாடலும்
உரிய மஞ்சளுஞ் சுக்கும் புளியிலை
எரிய வைத்த குடிநீ ரிரைப்புடன்
அரிய பீனிசக் காய்ச்ச லகற்றுமே 107

### மஞ்சட்சுரம்

நிலத்தில் வேம்பு கடுக்காய் நிலவிளா
உலத்த சீரகத் தோடே யவித்துண





மலத்தின் மூத்திர மஞ்சணித் தேபித்தம் 108
கலத்த சங்கலி தச்சுரங் கட்டுமே

### உட்டணசுரம்

சீந்தில் பற்பட கஞ்விறு கீரைவேர்
வாய்ந்த வேல்நெல்லி வன்னியின் பட்டையும்
சேர்ந்த நீருணச் சிக்கிய மூத்திரம்
வார்ந்திடுஞ் சுர வாதையுந் தீருமே 109

### சிலேற்பன சுரம்

கண்டங் கத்தரி முள்ளி கருநிறம்
மண்டு சீரக மஞ்சிட்டி தேக்குடன்
அண்டு சித்திர மூல மவுரிவேர்
கண்ட சேற்பனக் காய்ச்சல் கழற்றுமே 110

மாவி லங்கை மரமஞ்சள் திப்பிலி
தேவ தாரு சிறுதேக்கு மேனியும்
பாவித் துண்ணப் படராடா தோடைவேர்
கோபச் சேற்பன தோஷங் குலையுமே 111

கண்ட திப்பிலி காஞ்சி கழற்கொடி
தொண்டை வேலி சுழத்திமுக் காவீளை
தெண்டி செவ்வள்ளி சேற்பன வாதமும்
கொண்ட காய்ச்சற் குளிரையும் போக்குமே 112

அரத்தை சாரடை சுக்கு மசீரணம்
துரக்கு நொச்சி துராயிவை யீழையைக
கரைக்குஞ் சேடத்தைக் கையாந் தகரைநீர்
இரைக்கு மூச்சை யெடுக்குந் துளபநீர் 113

### அத்திசுரம்

வறட்பூ லாவதன் வேரும் வகுத்திடும்
கறுப்புச் சீரக மால்காந்தி கார்துளாய்
பிறக்குஞ் சின்னி கரந்தை பெருங்குருந்
திறக்கு மத்தி சுரத்தை யெடுக்குமே 114

## குடிநீர் முதலியவற்றுக்குச் சிறப்புவிதி

குடிக்கு நீரெலரங் கூறுஞ்சுக் கெண்ணெயாய்
வடிக்குங் கற்க மிளகின்றி வந்திடா
இடிக்குந் திப்பிலி யில்லாமற் சேடத்துக்
கடுக்குங் கொண்டகண் டுஷ மரியதே 115

### பழஞ்சுரம்

சந்து குன்றி யிலாமிச்சை தண்டுளாய்
கந்த மாருங்கஞ் சாங்கோரை கார்புகா

வந்த காந்தி வருஞ்சிற்ற மட்டிவேர்
இந்த நீரு மெடுக்கும் பழஞ்சுரம் 116

**குடற்சுரம் சுரவெப்பு**

புடல்வி ளாத்திபொற் சீரகங் காந்தியும்
கடலி றாஞ்சியா வாரை கருகுவேல்
குடற்சு ரம்விடுங் கொள்ளுங் கடுகமேல்
அடுவி லாச்சுர வெப்பு மகலுமே 117

**அதிசாரசுரம்**

தாவு சுக்கு விடயமுஞ் சாதிக்காய்
மாவின் வித்து மலைதாங்கி காந்தியும்
தேவ தாருவுந் தேற்றா வவித்தநீர்
ஆவி போக்கு மதிசார வன்சுரம்
மேலி டாமல் விலக்கும் விலக்குமே 118

**இரண சுரம்**

பங்கம் பாளை பிரப்பங் கிழங்குபால்
புங்கம் வேர்புர சம்பட்டை பூவர
சங்கங் குப்பியுந் தள்ளுமுட் புண்ணினால்
அங்க நொந்த வருஞ்சுர நீக்குமே 119

**உவாந்திச் சுரம்**

மரிச மிஞ்சி வறுக்கிற் கழிச்சல்போம்
கரிய வேம்பு கராம்பு கழற்பனை
நரிப் பயற்றுடன் காந்திநா ரத்தைவேர்
எரியு வாந்திச் சுரத்ன யெடுக்குமே 120

சுர மூலிகை முற்றிற்று.

## மூலிகைப் பொதுவியல்

பிஞ்சும் பூவு மொருகுணம் பேசிடும்
பஞ்சும் பட்டையும் பத்திரி யுஞ்சரி
இஞ்சி வேரு மிலையுஞ் சரியென
வஞ்ச மின்றி வகுத்திடும் வாகடம் 121

மந்த வாந்தி மறித்திடும் வேப்பிலை
கந்து காவிளை வேர்க்குக் கழிச்சல்போம்
புந்தி வாய்கைப்புப் போமே பெரும் *பிசு
மந்தப் பூவை வறுத்துநெய் வார்த்துண 122

காவி ளாய்கறி காற்றோட்டியின்னிலை
நாயு ருஞ்சி சமூலநற் சாம்பராய்த்
தீய வெந்ததுாள் தேன்றுளி யிட்டுண
ஓய்வி லாத கழிச்ச லொழியுமே 123

* பிசுமந்தம்.





ஆடு தின்னா தலரி யவுரிவேர்
கூடு மஞ்சள் மிளகுள்ளி யிஞ்சியும்
போடு காய்ச்சிப் புசிக்க விடசுரம்
ஓடு முள்ளத் துழலையு மாறுமே 124

புளியம் பட்டைபொன் னாவிரை சுக்குவாய்
தெளியுஞ் செந்தேன் சிவநிம்பஞ் சித்திரம்
பளிதங் பள்ளி பிரண்டை பராயிவை
வளரு மொவ்வொன்று வாய விரவிடா 125

துவரை சுண்டை சொறிதவிர் கோழியின்
அவரை வெள்ளெருக் கரணை நிலாவிரை
கவரி கொண்ணொச்சி சங்கு கழற்கொடி
உவருத் தாமணி யோட்டுமுள் வாயுவை 126

வேளை யுள்ளி வசம்பு வெளுத்தனேர்
வாள மிங்கு மிளகுவாய் வச்சிரி
கோளி நீர்வெட்டி தில்லைபேய்க் கொம்மடி
மீளு மேயுடற் சூலை விலக்குமே 127

மஞ்சள் சுட்டமாச் சுக்கு வசம்புடன்
மிஞ்சு சாறடை கஞ்சா விரையிலை
அஞ்சு மொன்றா யிடித்துவெல் லத்துடன்
கொஞ்சங் கொள்ளக் குடற்கட்டி தீருமே 128

தூமைக் கட்டுத் துடைக்குமெள் ளூறுநீர்
ஆமை வெள்ளரி வித்தி னரிசிநீர்
சாமை பாண்டர் முல்லை சதகுப்பை
போமொவ் வொன்றிற் பொருமலும் வீக்கமும் 129

நிதம்ப சூலையை நீக்கிடு மஞ்சண்மா
விதங்கொள் வீக்கத்தை வீட்டு நிலாவிரை
கதங்கொள் கட்டியுங் காய்சலுந் தீருமால்
இதங்கொள் வாள மிளநீரிற் கொள்ளவே 130

**அண்டவாய்வுக்கு**

அண்ட வாத மகற்றுமு மத்தை வேர்
சுண்டை பாலிற் றுவைத்துண மும்முறை
பண்டு பத்தியம் பாலன்னங் கொள்ளலாம்
அண்டம் வற்றுமவ் வாத மகலுமே 31

## உக்கிரகாண்டம்

**தலைமுத லங்க வியாதிக்கு**

எள்ளி லெண்ணெயி லேலம மிளகுதூள்
கொள்ளச் சீரக முக்காய்தற் கோலமும்
உள்ள வாதண்டை வேர்த்தூளு மூறவை
தள்ளுங் கண்ணோய் தலைநோயு மூழ்கவே 132

தலைய ரித்து மயிரையுந் தள்ளுமேல்
அலைமு யற்புழுக் கையோ டவுரியின்

இலைகு மிழ்ப்பழஞ் சாற்றி லரைத்தெரி
நிலையெள் ளெண்ணெயி னீங்கு மயிர்வெட்டே 133

முகத்தில் வங்கு முதிர்கருங் குக்குலுச்
சிகத்துச் சீடைதே மாவித்தின் சீரெண்ணெய்
அகத்துஞ் செண்பகப் பூவகி லின்பிசின்
முகத்தில் நாக்கிற் பருக்களைத் தீர்க்குமே 134

**கண்ணுக்கு**

செண்ப கப்பூச் செழுந்துளாய் குங்குமம்
வண்கை யான்கரு வேம்பு வலம்புரி
எண்கின் பல்லெலி யெச்ச மிருகுன்றி
கண்கட் டிக்கு மருந்திவற் றென் றுகாண் 135

பீத ரோகிணி நந்திப்பூப் பேரக்கு
மாத ளங்கனி யிந்துப்பு வங்கமும்
சோதி வச்சிரஞ் சங்குசொல் லஞ்சனம்
காது திப்பிலி கண்மருந் தாகுமே 136

உப்பு வண்டிலை யூமத்தை வேப்பெண்ணெய்
தப்பி லாத தவசி முருங்கைவேர்
செப்புந் திப்பிலி சேருங்கண் பாவையை
அப்பி மூடும் படல மரிக்குமே 137

வெள்ளைக் காக்கணம் பூவித்து வேருடன்
எள்ளுப் பூத்துரி சிந்திள நீர்முலைக்
குள்ள பாலி னுரைத்துக்கண் ணுள்ளிடத்
தள்ளு மெள்ளமத் தாணித் தசையெல்லாம் 138

பச்சைக் கர்ப்புரம் பங்கொன்று பத்துக்கொன்
றச்ச மில்கடுக் காயத னுட்பருப்
புச்ச மாமுலைப் பால்வெண்ணெ யோடரை
வைச்சி டுங்கடுங் காரங்கண் ணாணிக்கே 139

புண்பொ ருத்திச் சிவந்துகண் பூளையாம்
கண்வ லிக்கு மருந்துகார் வங்கமும்
வெண்பு சாரக்குச் செம்பில் விரைந்திட
வண்பு சேர்கண் வலிகுத்துந் தீருமே 140

**புறவளையம்**

கபோல நொந்துகண் ணுள்ளுஞ் சிவக்குமேல்
உபாய மாங்கடுக் காயுடன் சீனமும்
அபாய மின்றி யரைபழச் சாற்றினால்
உபாய மாய்வெதுப் போரத்திற் பூசவே 141

குவிள்கு மிழ்மஞ்சள் குக்கிலுஞ் சீனமும்
பவள மல்லி யவினும் பரிந்தரை
கவள மாக்கண் சுற்றிப்பற் றிட்டிட
உவளுங் கண்ணீ ரொடுப்புண் ணொழியுமே 142





**அஞ்சனம்**

இந்துப் போடிடு நெல்லியி னின்கனி
தொந்தித் தோர்பங்கு துத்தத்தி னோடரை
நந்திப் பூவினீ ராலே நலந்தரும்
எந்தக் கண்ணுக்கு மேற்குமி தஞ்சனம் 143

இந்த வஞ்சன மென்று மெருமைக்கொம்
புந்து செப்பினில் வைத்திடி லுத்தமம்
சிந்து மெள்ளிடை கண்ணுக்குத் தீட்டிட
நந்தி சொன்முறை நற்கெரு டாஞ்சனம் 144

தக்க கண்கடி யாயினுந் தள்ளிடும்
மிக்க வஞ்சன மீளு மடக்கமும்
பக்கு வத்தினிற் கன்னிற் படமுனம்
அக்க ணத்தி லகலும் விடமெல்லாம் 145

பிரம ராக்கதன் பற்றிப் பிதற்றினும்
அரிய வேதாள பூத மலறினும்
கரிய கண்ணிற் கடுகள விட்டிட
உரிக னற்படு பஞ்சென லாகுமே 146

சன்னி வாதந் தனுவலி தாளடைக்
கன்ன வாதங்கண் காசங் கடுஞ்சுரம்
குன்ம மாங்கு மரகண்டனுந் தீருமென்
றுன்னு மசுவினி தேவ ருரைத்ததே 147

**நட்சத்திராஞ்சனம்**

எள்ளுப் பூவினி லெண்ப தறுபது
தள்ளுந் திப்பிலி யெம்பது சாதிப்பூக்
கள்ள மில்பதி னாறு கறியுடன்
வெள்ளைக் காக்கணம் பூவில் விரைந்தரை 148

வெள்ளெ முத்துக்கண் வெப்புடன் கூச்சமும்
உள்ள மாமுலைப் பாலி லுரைத்திடக்
கள்ள மாலைக்கண் காசந் திமிரம்போம்
நள்ளு நாளாகு நட்சத்தி ராஞ்சனம் 149

**உக்கிரகாண்டம்**
**சந்திராஞ்சனம்**

கோட்டந் திப்பிலி யிந்துகூர் வங்கமும்
மாட்டு தேற்றா மரிச மனோசிலை
காட்டு நிம்பங் கடுக்காய் வசம்பையும்
ஊட்டு மேடத்தின பாலி லுறவரை 150

வைத்துக் கொண்டுகண் வாதைக்கோ ரெள்ளிடை
வித்த கத்திட வேதனை யாதியாம்
குத்து மேற்றலை வாதையுங் கோபம்போம்
சத்தி பெற்றதாஞ் சந்திர வஞ்சனம் 151

சிந்து நாரி சிறுகாயஞ்சோன் றீயர
விந்தஞ் சீதளை வெட்டிவேர் பூசினி
நந்தி சீரகம் வெண்காயம் நாசிநா
உந்தி கண்டத் துழலையும் போக்குமே 152

**காதடைப்பு கரப்பனுக்கு**

மிளகு கன்மதம் வேளை மெதுக்குடன்
வளவ லம்புரிக் காய்மயிற் பிச்சமும்
விளையு முந்துட னாதண்டை வேரிலை
களையுங் காதடைப் போடு கரப்பனை 153

**உதட்டுரோகத்துக்கு**

முப்ப மும்முளி பத்திரி முந்திரி
அப்பை யோரிலைத் தாமரை யாவிரை
செம்புங் கீழ்நெல்லி தேற்றாச் சிறுதுளாய்
தப்பி லாவுதட் டிற்பிணி தள்ளுமே 154

**நாசிகா பீடத்துக்கு**

சேங்கொட் டைப்பாலைத் தேற்றாவிற் பூசியே
ஓங்கு வேப்பெண்ணெ யோடுறத் தேய்த்ததை
எங்க வூசிய லேற்றி யெரிபுகை
வாங்க நாசிகா பீடமு மாறுமே 155

**பீனிசத்துக்கு**

சாரஞ் சுண்டைவேர் சாம்பிரா ணீமிள
கூருன் மத்தையோ டோங்கு மெருக்கம்பால்
கார மஞ்சளாக் கிராணங் கரைத்திடும்
யாரும் பீனிசம் பற்றற மாறுமே 156

**தும்மல் நாசி யரிப்புக்கு**

நாட்டி னிற்கறி நல்லெண்ணெ யாதண்டை
கூட்டு தேற்றாவின் கொட்டை முசுக்கைநீர்
போட்டெ ரித்து முழுகத் தலையைப்போட்
டாட்டுந் தும்ம லரிப்பு மடங்குமே 157

மூக்கிற் பற்களிற் காதின் மொழிந்திடும
வாக்கி லண்டத்திற்சோணிதம் வந்திடில்
சேர்க்கக் கட்டுகற் றாழை சிரசினில்
ஆக்கி ராணஞ்செய் யானெருத் துாளையே 158

**பற்புழுவுக்கு**

கற்க ரூமத்தை சண்டங்கா ரீவிரை
வற்கு முள்ளி மனோசிலை வாய்விளங்
கற்கஞ் சேர்புகை யாரக் குடிக்கவே
பற்களிற்புழுப் பற்றற மாறுமே 159





பல்வ லிக்கும்பற் கட்டுக்குங் குத்துக்கும்
மெல்கப் பற்குத்திக் காய்குண்டை மெல்கவாம்
சொல்லு முப்புப் பராயின்பால் கூடனும்
அல்கத் தேய்க்கலா மாக்கத்தின் பாலுமே 160

கண்ட மாலைக்குத் திப்பிலி காக்கணம்
குண்டை முள்ளி குறட்டைப் பழத்துடன்
இண்டம் வேரமுக் கிராயின் கிழங்குமே
ரண்டத் தெண்ணெ யெரித்துக் குடிக்கவே 161

பாளச் சீலையிற் பாவித்து வேப்பெண்ணெய்
மீளத் துத்தந் துரிசு மிடற்றுக்குள்
ஆளுங் கட்டு வெடிக்கு மடக்கலாம்
வேளை வேருள்ளி வேம்பாடன் மேற்பற்று 162

காதின் மூலத்திற் கன்னக் கிரந்திக்கும்
ஓதும் புங்குவா யோடோதி யாவரை
சாதி தான்றி தகரை மருக்காரை
ஈதி லொன்றை யரைத்திடு பைங்குராய் 163

வசம்பின் சாறு மரள்மர மஞ்சளோ
டசும்பு பூத கரப்பன்பொண் ணாவிரை
இசங்குங் கம்பிப் பிசின்கண்ட திப்பிலி
கசங்கு மேரண்டங் கண்டக் கரப்பன்போம் 164

**நாக்குப் புற்றுக்கு**

ஏலஞ் சீரக மிந்துமா சாவிதக்
கோலங் கர்ப்புரங்கோ ரோசனை குங்குமம்
சாலுஞ் சேங்கொட்டை தான்றி சதுர்ச்சாதம்
நாலு நாவினுட் புற்றுக்கு நல்லதே 165

**அரோசியத்துக்கு**

இஞ்சி யிந்துப் புமிட்டுண வெல்லத்தை
மஞ்ச ணீரினிற் சீரக மாதளம்
பிஞ்சு தாளிச பத்திரி மேதியின்
தஞ்ச மாந்தயிர் தள்ளு மரோசியம் 166

கொத்த மல்லி யிலைவிரை கூவிளை
பைத்த நாவல் பெதரிப் பழத்துநீர்
வைத்தெ ரித்துக் குடித்திட வாந்திபோம்
கைத்த வேம்பு புடோலுங் கபித்தமும் 167

மோரு மிந்துப்பு முக்கனி யேலமும்
எருஞ் சுக்குக் கருவேப் பிலையுடன்
சேரு மீரவெண் காயமுஞ் சீயத்தின்
ஆரும் பச்சிலை யன்ன மருத்துமே 168

### விக்கலுக்கு

விக்கல் தீர்க்குந் துணிப்புகை விந்தப்பூ
வைக்கல் மாமயிற் பீலிப் புகையைவாய்
துய்க்கலாகுங் கறிப்பழுஞ் சோற்றுநீர்
கக்கல் கண்டத்திற் காய்வு மகற்றுமே 169

### அரோசிகம் மேலேப்பங்களுக்கு

சிந்துப் போடு திராய்புளி சீரகம்
வெந்த நீரிஞ்சி வீட்டு மரோசிகம்
மந்திப் போடு வருமேப்ப மாறவே
தொந்தித் துண்ணலாஞ் சுக்கும் பிரண்டையும் 170

### கொட்டாவிக்கு

பொள்ளு மேநெடுங் கொட்டாவி மென்மேலும்
தள்ளச் சுக்கு மிளகையுஞ் சப்பிப்பார்
உள்ள மந்தத்தி லுண்டாகி லூறுதேன்
வெள்ளை வெண்காயங் கட்டி விழுங்கவே 171

### அரோசிகத்துக்கு

உப்பு வேப்பிலை யிஞ்சி யுலுவாவும்
செப்பு நாரத்தை சீய மெலுமிச்சை
கைப்பி லாத கருவேம்பு கான்றைமா
அப்பை யின்னிலை போக்கு மரோசிகம் 172

### விற்புருதிக்கு

கன்ன மூலத்திற் கட்டி வெடித்திடில்
துன்னு விற்புரு தீயென்று சொல்லுவர்
அன்ன தற்கு மருந்தா மணக்கெண்ணெய்
வன்னி மூலம் வசம்புவேம் பாடலே 173

### இருமலுக்கு

சிங்கி சுக்குச் சிறுதேக்குத் திப்பிலி
சங்கு முள்ளி தக்காளிப் பழத்துடன்
புங்கு குன்றி புளியாரை நெய்யென
எங்குஞ் சொல்வ ரிருமலைப் போக்கவே 174

நீடு மாதளை நெற்பொரி சர்க்கரை
கோடு திப்பிலி யக்கராக் கோட்டமும்
சாடு நெய்யினிற் சாரித்துத் தின்னவே
பாடு கண்டத் திருமலும் பற்றறும் 175

அரத்தை கோட்ட மதிமது ரம்மிள
குரைத்த பூசினிக் காயினுட் சாற்றினில்
கரைத்து நெய்யிட்டுக் காய்ச்சி விழுங்கினால்
இரத்தங் கண்ட விருமலுந் தீருமே 176





சித்த மட்டிக் குடிநீரிற் சீரகம்
ஒத்த பன்றிநெல் லுள்ளரி சீயிட்டுப்
பத்து நாட்கஞ்சி காய்ச்சிப் பருகிடில்
அத்திக் காய்ச்ச லிரும லகலுமே 177

### கண்டக்கரப்பனுக்கு

முசுமு சுக்கை முருக்குத் துளவமும்
பசிய நொச்சி யிலைமுள்ளி பாகலும்
கசியில் கான்றை கடுகு மிளகுடன்
இசையுங் கண்டங் கரப்பனுக் கேற்குமே 178

### சயரோகக் குணம்

நெஞ்சு காய்ந்துகண் ணுட்குழி நீடியே
வஞ்ச மாய்ச்சுரம் மாலையிற் றோன்றவே
மிஞ்சி னான்மிக மேலே யிருமலும்
துஞ்சு றாதெனிற் சொல்சய ரோகமே 179

### பூசினிநெய்

சிற்ற மட்டி சிறுகாஞ்சி சீந்திலும்
பைத்த முள்ளி கொடிப்பாலை வேலியும்
வைத்த தாருச் சிறுதேக்கு வண்ணோச்சி
அத்தி கீழ்நெல்லி யாடாதோ டையின்வேர் 180

கண்டங் கத்தரி மால்காந்தி வட்டுவேர்
கொண்ட தோரொன் றிரண்டு பலங்கொடு
விண்ட வேயிடி யெண்படி நீரிட்டுத்
தண்ட மூன்றுநாட் டான்றழ லூறவை 181

வற்ற வோர்படி வாங்கியந் நீரினால்
உற்ற ரைக்குஞ் சரக்கை யுரைக்கக்கேள்
பற்று முப்பழந் திப்பிலி மூலமும்
சற்றுச் சீர மிரண்டு சடாமாஞ்சில 182

சித்த ரத்தை சிறுதேக்குச் செல்வியம்
சத்தி சிங்கிக்காய் நாகம்பூச் சாதியின்
பத்தி ரீவெள்ளைப் பாலை கராம்புடன்
கொத்த மல்லிதேற் றாவிரை கூகைமா 183

இந்துப் புப்பச்சைக் கர்ப்புர மேலமும்
மூந்து தாளிச பத்திரி முந்திரி
சந்தி லுப்பைப்பூப் போஞ்சி னற்கனி
அந்த வான்மிள கக்கறாக் கோட்டமும் 184

ஓரொன் றோர்கழஞ் சுள்ளுற வைத்தரை
ஈரஞ் சேர விதில்விடு சாறுகேள்
கோரை நீரல்லி செங்கழு நீர்க்கிழங்
கோரு முற்பல மோர்மூன்று தாமரை 185

பருத்தி மாதளை கற்றாழை பற்படாம்
சுரத்து முள்ளி நெய்ச்சுட்டியுஞ் சுண்டியும்
விரைத்த தாளி பிரமி விழுதியும்
புரக்குந் தூது வளைதுளாப் பூளையும் 186

முசுமு சுக்கைவல் லாரை முருக்கிலை
பசுவின் பால்கரு வேம்பூசிப் பாலையும்
அசைகு நிஞ்சாவோ டந்தரத் தாமரை
இசைபொன் னாங்காணி யீர்மணித் தக்காளி 187

குப்பை மேனி கரந்தை குறட்டையும்
செப்புங் கையாந் தகரை சிறுகீரை
தப்பி லோரொன்று தானோ ருழக்காக
ஒப்பில் சாறெலா மொன்றாகச் சேர்த்துப்பின் 188

பழுத்த பூசினிச் சாறு படியுநால்
வழுத்து மாநெய் படிரெண்டு வார்த்துவை
அழுத்த மாமிர தத்தினல் யோகத்தில்
வழுத்திப் பிள்ளையை நெய்யை வடித்திடே 189

வடித்த நெய்யை யிருபோ தொருவாரம்
கடுத்த பத்துநா ளாரப் புசிக்கவே
விடுத்துக் காய்ச்ச லிருமலும் விட்டுப்போம்
தொடுத்த காச சயமுந் தொலையுமே 190

பாண்டு வீக்கம் பயித்திய மக்கரம்
மாண்ட காய்ச்சல் வயிற்றெரி வாயுவும்
காண்ட நீர்க்கடுப் புட்டணக் கட்டிநீர்
மாண்ட நெய்மூல வெட்டையு மாறுமே 191

கோழை நீரழி தாகங் குலைந்திடும்
வாழு நெஞ்சடை வாதம் வழலைக்கட்
டாழுங் கண்டத் தரிப்பு மெரிப்பும்போம்
நாளும் பூசினிக் காய்நெய் நலந்தரும் 192

### காதுக்கட்டுக்கு

காதிற் கன்னத்திற் கட்டி வெடித்துள்ளே
வாதை கொண்டு சிவந்திடில் வாய்விளங்
கோது முள்ளி வலம்புரிக் காயுமுந்
தேத நண்டோ டெரித்தெண்ணெய் குத்திடே 193

### கூவைக்கட்டுக்கு

கண்டம் வீங்கிக் கனத்து வலித்திடில்
கொண்ட கூவைக்கட் டெனறதைக் கூறுவார்
தண்டப் பூசுசெஞ் சந்தன நத்தையோ
டண்ட முக்கிரா வேரு மரைத்துமேல் 194

### மாந்தைக்கு

கள்ள மாகக் கழுத்துக்குக் கீழ்நெஞ்சில்
கொள்ளும் வாதை யுரைசற்றுங் கூறோணா





ஒள்ளு மாந்தை யிதற்கு மருந்துள்ளி
தள்ளும் வேப்பெண்ணெய் தண்டுரி செனபரே 195

### நிட்கண்டவாயுவுக்கு

அஞ்சப் பந்துபோலேறிமுச் சாடொணா
நெஞ்ச டைத்திடு நிட்கண்ட வாயுவாம்
கொஞ்ச மாக வெடியுப்பு வாய்க்குள்ளே
செஞ்சப் போட்டுடன் சேரநீர் குத்திடே 196

### நிஷ்கண்டவாய்வுக்கு

தொண்டை கம்மியே சொல்லுரை கேட்கிலா
தண்டு நாட்பல வாதி லதற்குப்போ்
கண்ட தாகி கணைசிங்கி சர்க்கரை
மண்டு முப்பழ மாதளை மாற்றுமே 197

### மார்புவலிக்கு

மார்புக் குள்வலி மாற்றிட வேயெவச்
சாரஞ் சுக்குநீ ருப்பைந்து சாரடை
சேரு மிங்கு தெசமூலந் தேவர்தம்
தாரு முட்டி யரத்தைநெய் சர்க்கரை 198

### நாவரட்சிக்கு

நாவ ரட்சி தவிர்ந்து நசையுநீர்
மேவுஞ் சீந்தின் மதுர மிளகுமா
பூவின் மாதளை சந்து புடோல்கரும்
பேவு முட்டா னிளநீ ரெலுமிச்சை 199

### முலைக்கட்டுக்கு

உள்ளி சீவந்தி சீந்தில்வே ரூர்மிள
கள்க ருஞ்சீ ரகம்மணிப் பூவந்தி
விள்ளு நெய்காய்ச்சி வெற்றிலைக் காம்பிட்டே
அள்ளிப் பூச வகலு முலைக்கட்டு 200

### இதயசல்லியம்

முதுகி னெஞ்சின் முதிர்ந்து வலிக்குமேல்
அதிக விக்க லடைப்புநா ளாகுமேல்
இதய சல்லிய மென்ப ரிரைப்பும்போம்
கொதிகொ ளாட்டுப்பால் காஞ்சொறி வேர்கொள்ளே 201

நத்தைச் சூரி நெருஞ்சி நரளைதேன்
முத்தக் காசு மிளகிரு சீரகம்
கொத்த மல்லி யரத்தைகார் கோலமும்
சித்த சல்லியந் தீர்க்குஞ் சதுர்ச்சாதம் 202

தோள்ந ரம்பிற் சுருட்டி வலிகுத்து
நாளு நிற்கி லதற்குநாய் வேளையாம்
வேளை வச்சிரி வெள்ளுள்ளி மஞ்சள்கார்
கோலஞ் செந்திராய் கூட்டிமேற் பூசிடே 203

### கைக்குழித்தாமரைக்கு

கைக்கு ழைச்சினிற் கட்டெனக் காணுஞ்சற்
றுக்கு நெஞ்சு வலிக்குஞ் சுரம்வரும்
கைக்குட் டாமரை யென்பர் கடினமாய்த்
துய்க்க வேப்பெண்ணெய்த் துள்ளி பெருங்காயம் 204

### உட்குத்துக்கு

விலாவிற் கண்டத்தின் மேலும் பிடரிலும்
நிலாவி யுட்குத்து நிற்கி லதற்குக்கேள்
கலாப வாயு சிறுகாஞ்சி கார்புகா
மலாரி யங்கு மரமஞ்ச ளாகுமே 205

### வரள்வாயுவுக்கு

விலாவெ லும்பினின் மார்பின் முதுகினில்
சலாகை போற்குத்திச் சற்றுமூச் சாடொணா
திலாகு மெங்கு மிதுவரள் வாயுவாம்
புலாருஞ் சுக்குப்பால் காஞ்சிவேர் போக்குமே 206

### காசத்துக்கு

இதயத் துள்ளே யிறுகிய சேடத்தைக்
கதனஞ் செய்திடு காசமென் றோதுவர்
பதன மேலவாப் பண்ணவும் வேணுமேல்
அதனம் வேப்பெண்ணெய் சேம்பாடா தோடையே 207

தூரிசு சுத்தித் துரையோர் பணவிடை
கருமணித் தக்கா ளிச்சாற்றோர் கடுகிடை
இரும லீழை யிளைப்புக்கு மேனிச்சா
றருமை நெஞ்சின் லையெலாம் வாங்குமே 208

கொட்டைப் பாசிநீர்க் குள்ளே மிளகுதூள்
இட்ட ருந்தலா மிங்குநெய் கொள்ளலாம்
கட்டு முப்பஞ்சி லொன்று கஷாயத்தில்
இட்ட ருந்தலா மேற்குமி தீழைக்கே 209

கரிய பூமத்தை வேரிலை காய்ந்தபின்
உரிய தாகும் புகையிலை யோடுறும்
சுருளை வாய்வைத்துத் தூமம் பருகிடில்
அரிய மந்தார காச மடங்குமே 210

### தூதுளம்பழநெய்

அமுக்கி ராமுள்ளி யங்கோலந் தக்காளி
சிமக்குந் தூது வளம்பழஞ் சேர்ந்தநெய்





அமைக்குஞ் சர்க்கரை திப்பிலி யக்கரா
இமைக்கு மீழைக் கிதுவோ ரிலேகியம் 211

காக மாசி கருநொச்சி வெண்ணொச்சி
வாகை கொட்டைக் கரந்தை வசம்பிஞ்சி
நாக மல்லி கொடிப்பாலை நற்குன்றி
ஆகு மேனியா டாதோடை யின்சாறு 212

பிரமி கையாந் தகரை பிரண்டையும்
கரிய வேம்பு துளாய்கண்டங் கத்தரி
கிரந்தி நாயக முள்ளி கிலுப்பையும்
பெருந்து ளாய்கொட்டைப் பாசி பெருமரம் 213

மணலி சின்னி குறட்டை மருக்காரை
புணரி சீந்தி நிலாவிரை பூசினி
சிணுகி முட்டான் கிழங்குநீ ரோருழக்
கிணுகி யாநெய் படியிதி லேயிடு 214

அழுந்து தூது வளம்பழ மோர்படி
பிழிந்த சாறொடு பின்விரை தள்ளியே
புழுங்கப் பிட்டவித் துப்புரை சாறெலாம்
விழுந்தெ டுத்துநெய் யோடுற விட்டிடே 215

சிங்கி மஞ்சள் சிறுதேக்குத் திப்பிலி
தங்கு தாளிச பத்திரி சாதிக்காய்
எங்கு மேல மிலவங்க நாகம்பூத்
துங்க பத்திரி சொல்லிரு சீரகம் 216

ஆனைத் திப்பிலி யிந்துப் பரத்தைரண்
டுன மஞ்சிட்டி வெட்பாலை யுள்ளியும்
மோனச் செவ்வியந் திப்பிலி மூலமும்
கானத் தேற்றாக் கறுவாக் கடுக்காயும் 217

மிளகு கோட்டங் கடுகக் கராமிளிர்
பளிதங் குங்குமம் ரோசினை பட்சிநீ
றொளிரு மோம மதுர மிவையொவ்வொன்
றளவ தோர்கழஞ் சாட்டிக் கஷாயங்கேள் 218

கொன்றை கீழ்நெல்லி கூமகாடு வேலிவேர்
மன்றல் நாரி பருத்தி மருக்காரை
துன்று நொச்சி துரோணங் கறிமுள்ளி
பன்றி நாய்வேளை பார்சிற்ற மட்டிவேர் 219

குப்பை மேனி குறட்டையா டாதோடை
செம்புங் கான்றை சிவதை சிறுபன்னை
வெப்ப டக்கி வியங்கண்டங் கத்தரி
ஒப்பி லோரொன் றொருபலம் வாங்கியே 220

இடித்து நீரெண் படிவிட்டுக் காய்ச்சியோர்
படிக்கு வற்றுநீர் வார்த்தரை கற்கத்தைக்

குடிக்கு நெய்யினின் மூன்று கொதியிட்டு
வடிக்கப் பிள்ளையை வாழ்த்திநல் லோரையில் 221

அந்தி சந்தி யருந்த வரைப்படி
கந்த மாருநெய் பன்னிரு நாட்குள்ளே
சிந்தை நோவுட னீளையுந் தீருந்தன்
வந்தி ரிக்குச் சிவன்சொல் மகாகிர்தம் 222

**சேடவிரேசனம்**

பெண்ணை வெற்றிலைச் சாற்றிற்பே ராமணக்
கெண்ணெய் காய்ச்சி மிளகுதூ ளிட்டுணத்
தண்மு டக்கொற்றான் சாரடை ரோகிணி
பண்ணுங் கீழுறப் பற்றிய சேடத்தை 223

உந்தி யின்க ணுறவலி யுப்பிசம்
வந்தி டும்புளித் தேப்பம்வா யூறலும்
மந்த மாமதில் வந்திடு நோய்பல
முந்தச் செய்வரு வாந்திக்கும் பேதிக்கும் 224

எந்த நோயு மெழுமுந்தி மந்தத்தால்
அந்த மந்த மசீரண நால்வகை
கந்த மாமலக் கட்டுக் கழிச்சலாம்
உந்தி யின்க ணிரைச்சலுண் டாகுமே 225

**உட்டணகெந்தி**

வயிறு வற்றி வலியின்றி யுண்கொணா
உயரு மேப்ப முதரத்தில் வாயுவாய்
அதிரு மோசையு மாகிப்பன் னாணின்றால்
உயர சீரண முட்டண கெந்தியாம் 226

அபினி யிந்துப்புச் சுக்கச மோதகம்
கபம கற்று கருவாழை யின்கனி
உபய வேரண்டத் தெண்ணெயோ டுண்டிடில்
நிபமி லுட்டண கெந்தியு நீங்குமே 227

**மேலேப்பம் தாகத்துக்கு**

எரியு முந்தியி லேப்பமுந் தாகமும்
பொரிய ரிசிமாப் போலே வருமெனில்
அருவ ருக்கு மதற்குவேப் பீர்க்குறும்
கரிய வேம்பச மோதகங் காயமே 228

**மந்தக் கழிச்சலுக்கு**

மந்த மாகி மலமு மறித்திடா
துந்தி வற்றியு முப்பிக் கழிந்திடில்
அந்த மந்தத்துக் காகு மருந்துகேள்
வெந்த சுக்கு வசம்பு விடயமே 229





**விஷ அசீரணம்**

வயிறு வற்றி வலியும் பொறுக்கோணா
வியர்வு மாகு மிதுவிஷ சீரணம்
மருவு மூச்சு மடங்கி வருமிது
துயர்செய் வாதத்திற் றோன்றில சாத்தியம் 230

ஆகி லும்மதற் காகு மருந்துகேள்
பாகு தேங்காயின் பாலினோ் வாளத்தை
ஓகையாய்க் கொஞ்ச முண்ணக் கொடுக்கலாம்
தாகங் காணிற் சதுர்ச்சாத நீகொடு 231

தூம நச்சியஞ் சொன்னதெல் லாஞ்செயப்
போம கன்று முரைப்பர்போர் மந்தத்தால்
ஆம நெக்குள தோஷம தாகிலும்
தாம திக்கொணா தெண்ணிச்செய் சாதனம் 232

கள்ளிப் பாலினிற் காட்டா மணக்கம்வித்
துள்ளி யேரண்டத் தெண்ணெயோ டுண்ணலாம்
தள்ளி டாமலந் தங்குமேற் சாதனம்
மெள்ளக் காக்கணம் வேர்வாளங் கூட்டுமே 233

**அட்டகுன்மத்துக்கு**

அட்ட குன்மத்துக் காகு மருந்துகேன்
மட்டெ வச்சாரங் காசிடை வாயினில்
இட்டு வெந்நீ ரிருகால் விழுங்கிடக்
கெட்ட குன்மக் கிலேசஞ்சற் றாறுமே 234

**அட்டசூரணம்**

கடுகு சுக்கச மோதகங் காயமும்
வடுவில் சீரக முப்பும ரீ சமும்
நடுவு திப்பிலி நாலிரண் டோரள
வடவ றுத்ததூ ளட்டகுன் மத்துக்காரம் 235

**தூமகெந்திக்கு**

தூம கெந்தியாய்த் தோன்று மசீரணம்
போமெவ் வாறெனிற் பேய்ப்புடோல் புங்கம்வேர்
ஓம மோடுறக் காய்ச்சிநீ ருள்ளுற
ஏம ரத்தை கராம்புத்தூ ளிட்டுணே 236

**கரும்பித்தம்**

பித்த வாயு பிரண்டு வலித்தெனில்
வைத்த நெஞ்சி லெரிப்புவா யூறலும்
மெத்த முட்டுச் செமிபாட்டின் மேவிடின்
கத்த குங்கரும் பித்தநீர் கண்டிடே 237

அசீர ணத்தினி லக்கினி மந்திக்கும்
பசியி லாது புசித்தது மந்திக்கும்
இசையும் வாயுமே லேறிடிற் குன்மமாம்
அசையும் வாயு வதோமுகங் கிராணியாம் 238

பங்கம் பாளைமாங் கொட்டைப் பருப்புடன்
தங்கு மாதி யதிவிட யஞ்சரி
இங்கு தேற்றா விரையுள்ளி யெள்ளெண்ணெய்
மங்க வார்த்து வறுத்ததூள் மாற்றுமே 239

### நாரங்க லேகியம்

குன்ம மெட்டுக்குங் கூறு மருந்தினில்
நன்மை யாகிய நாரங்க லேகியம்
வன்மை யாய்ச்செய் வகையை யுரைக்கக்கேள்
தொன்மை யாஞ்சுக்குத் தூளொரு நாழியே 240

நாழி கல்லுப்பு நாழிவெள் ளுள்ளிப்பல்
நாழி மஞ்சள் மிளகுத்தூள் நாழியே
நாழி மல்லி கடுக்காய்த்தூள் நாழியே
நாழி யோமங் கடுகுத்தூள் நாழியே 241

நாலு நாலாய் நவில்கின்ற நாழியால்
ஏலம் வெண்பசு மூத்திர மேந்தியே
கோலுந் தூளெலாங் கொட்டிக் கொதியிட்டு
வாலு நாரத்தங் காயாறு வாங்கியே 242

அரிந்து போடுதேங் காயாறு மப்படிப்
பரிந்து போடு பசுவினெய் யாமணக்
கருந்து மெண்ணெயெள் ளெண்ணெ யுழக்கதிற்
சொரிந்து கள்ளிப்பால் சொல்லுழக் கிட்டுவை 243

முருக்குக் கையான் றகரை மொழிந்திடும்
எருக்கு நொச்சி பிரண்டையு மேனியும்
கருக்கு வேளை யிரண்டு கழற்கொடி
பொருக்குக் காக்குறட் டானும் பொடுதலை 244

ஓரொன் றோருழக் காகச்சா றுள்ளிடு
சேரு கின்ற சரக்குத்தூள் செப்பக்கேள்
சீர கம்ரண்டு திப்பிலி யிந்துப்புச்
சாருஞ் சேங்கொட்டை காயஞ் சதகுப்பை 245

கடுகு ரோசினை தான்றி கழற்பருப்
படரும் வேட்பாலை யேல மிலவங்கம்
கடல்வி ளங்கம்வசம் போரோர் கழஞ்சுகொள்
துடர நன்றாகத் தூளா யிடித்திடே 246

சிவதை கீழ்நெல்லி சித்திர மூலமும்
சுவைசெய் சாரடை சொல்லு மமுக்கிரா
இவைய ரைப்பலந் தூள்பண்ணி யிட்டெலாம்
நவப தத்திற்செய் நாரங்க லேகியம 247





குன்ம மெட்டுக்குங் கூறனு பானங்கேள்
வன்ம மாமிஞ்சிச் சாற்றினில் வாதம்போம்
சொன்ன சேற்பன தோஷந்தேன் றொட்டுணப்
புன்மை யன்றிது போக்கிடுங் குன்மத்தை 248

எட்டு நாளுணச் சூலை யெரிகுன்மம்
விட்டு நீங்கு மகோதர வீக்கமும்
கட்டுந் தூமை யுடைக்குங் கசடறும்
விட்டுப் போங்கும்ப காமாலை வேரறும் 249

மண்ட லங்கொள மாறுங் குடல்வாதம்
சண்ட பானுவாங் குன்மத்த மத்துக்கே
அண்டர் தேடு மமுதமி தொன்றெனப்
பண்டி தர்க்குச் சிவன்முன் பகர்ந்ததே 250

### குன்மத்துக் கெண்ணெய்

குன்மத் துக்கெலாங் கூறிடு மெண்ணெய்கேள்
கன்னி வேம்பாடல் கற்றாழஞ் சாற்றினில்
உன்னு மோரள வெண்ணெயி லூரவை
மன்னு செவ்வியம் வெட்பாலை மஞ்சளே 251

செண்ப கங்கருஞ் சீரகஞ் சித்திரம்
பண்பு சேருநன் னாரிவேர் பாலினால்
வண்பு சேர வரைத்துப் பதத்திலே
எண்மை யால்வடித் தெண்ணெய் முழுகலாம் 252

### இதுவு மது

மலத்தைக் கட்டி மறித்திடும் வாதத்தால்
நிலைத்த குன்ம மதற்கு நிவிர்த்திகேள்
கலத்த காவிளாய் வேர்தருங் காக்கணம்
தலத்திற் சாரடை தங்கடு ரோசனை 253

தெங்கின் பாலி லரைத்துக் கரைத்தெலாம்
மங்கு பேரா மணக்கெண்ணெய் வார்த்ததைப்
பொங்கி டாமல் வடித்துப் பொசித்திடத்
தங்கி டாமலங் குன்மந் தணியுமே 254

### உள்ளியாமணக் கெண்ணெய்

உள்ளி யாமணக் கெண்ணெ யுரைக்கக்கேள்
தள்ளுஞ் சூதக வாயு தழற்குன்மம்
உள்ளி யாறு பலமுரித் தேயரை
தெள்ளு மேரண்டத் தெண்ணெயிற் சேர்த்துவை 255

படியெண் ணெய்க்குப் பகருஞ் சரக்குக்கேள்
கடுகு ரோசினை கார்க்கருஞ் சீரகம்
படுக முற்சிப் பருப்புப் பலமரை
சுடுபெ ருங்காயந் திப்பிலி சுக்குமே 256

வராக னேன்றிடை வைத்தரை நீரினால்
பராவு வேரிலை யோர்சரி பாக்கள
விராவு தேங்காய்ப் பாலிற்கரைத் தெண்ணெயில்
சிராவி யேவடி செப்பக்கேள் வேரிலை 257

ஆம ணக்குக் கழற்சிபொன் னாவிரை
தூம ணத்தழு தாழை முடக்கொற்றான்
தோமில் சாரடை வேளையுந் தும்பையும்
ஓம் முத்தா மணியுமொன் றாவிரை 258

கள்ளி வேர்பட்டை கான்றையு மப்படி
உள்ளி யாமணக் கெண்ணெ யொருதினம்
கொள்ளக் காலமே கூறுமா ழாக்கெண்ணெய்
தள்ளுஞ் சீதமும் வாதந் தழற்குன்மம் 259

மலடு தீரு மறித்திடுஞ் சூதகம்
அலரும் பூப்பு மரிவையர்க் காடவர்க்
கிலகு போகமு மெண்ணும் வலிதரும்
உலகி லீதுள்ளி யாமணக் கெண்ணெயே 260

## உதரவாயு

உதர வாயுவென் றோதுவ துந்தியில்
சிதறி டாது புரளுஞ் செரித்திடா
விதனஞ் காட்டும்பின் கைகள் வெளுத்திடும்
கதன நீரை மலத்தையுங் கட்டுமே 261

கட்டு கின்ற மலநீர் கனத்துடல்
இட்ட நீரை நரம்பினி லேற்றிடும்
மட்டி டாமற் பரந்திடு மஞ்சணீர்
உட்டணத்துடன் சீத முதிக்குமே 262

கையுங் காலுங்கனன்று கடுத்திடும்
வெய்ய வுண்டி விரும்பிடு முண்கொணாப்
பையப் பையவே பாண்டுவந் தீண்டுமுன்
உய்யச் செய்மருந் தோதுவன் கேட்டியால் 263

## உப்புச்சூரணம்

உப்புச் சூரண மல்லாம லொன்றினால்
வெப்புச் சூலை வியாதி விலக்கொணா
தப்பி லாதென்று தோல்தசை சாருநீர்
அப்பு றஞ்செல வுப்பொன் றகற்றுமே 264

இந்துப் பும்வெடி யுப்பு மெடுத்திடும்
சந்துப் புங்கடற் றன்படு கல்லுப்பும்
நந்துப் புந்நவச் சாரமுஞ் சூடனும்
இந்த வெண்காரத் தோடே யெவச்சாரம் 265

சுத்தி செய்தபின் னோர்பலந் தோமிலா
வித்த கத்தூரி சோர்கழஞ் சுள்ளுற





வைத்த ரைசுத்தி செய்திடு வாளமும்
பத்துக் கொன்று பரிவுடன் சேர்த்தரை 266

அரைத்த சூரண மாதபங் காயவை
விரைத்த சாதிக்காய் திப்பிலி வேர்க்கொம்போ
டுரைத்த முப்பழ மோடிரு சீரகம்
கரைத்த வக்கரா காரங் கராம்புடன் 267

பறங்கிப் பட்டை பருமர மஞ்சளும்
இரங்கு ரோகணி யுள்ளியீர் காயமும்
தரங்கு மோம மிளகு சதகுப்பை
கறங்கு கோட்டங் கடுகோர் கழஞ்செடே 268

எடுத்த தெல்லா மிடித்து வடித்த தூள்
அடுத்த வுப்புத்தூ ளோடே யரைத்திட
விடுக்குஞ் சாற்றி லவித்ததை யுஞ்சொல
எடுக்குந் தூது வளை துளா யிஞ்சியே 269

பேய்க்கொம் மடிக்காய் பீர்க்கிலைச் சாற்றிலும்
சேர்க்கச் சாற்றுக்கோர் நாழிகை சேர்த்தரை
ஆர்க்க நன்றா யடிக்கடி காய்ந்தபின்
கூர்க்க வேயரை கூறுங் கஷாயத்தில் 270

மாவி லங்கை புரசுடன் வாகையும்
தாவி னெல்லி நுணாநிம்பந் தன்பட்டை
மேவு கொன்றை சிறுகாஞ்சி வேருடன்
பாவு சாரடை கீழ்நெல்லி பார்விளா 271

குப்பை மேனி குறட்டை பிரண்டையும்
செப்பு கின்ற சிவதை நெரிஞ்சியும்
தப்பி லாச்சத்தி சாரடை காவிளை
வெப்ப கற்றுமுக் காவிளை கான்றைவேர் 272

இடித்துக் காய்ச்சி யிறக்கிய நீரினால்
அடுத்த வோர்படி யாகவே வார்த்தரை
எடுத்துப் பின்னையுங் காயவைத் தேயெடு
தொடுத்த பேருப்புச் சூரண மென்றுசொல் 273

பருத்திக் கொட்டைப் பிரமாண மோர்வேளைக்
கருத்த முன்ன மகட்டினி னோயெலாம்
துரத்துஞ் சூரியன் காண்பனி போலவே
வருத்த நீக்கு மகோதரம் போக்குமே 274

## வாதாசன சூரணம்

உரைத்த பாரதஞ் சத்திசெய் தோர்பங்கு
அரத்த கெந்தகம் ரண்டிடை காந்தநால்
இரத்த மாகு மிரும்புத்தூ ளெட்டிடை
அரைக்கக் கையாந் தகரைச் சாற்றுநாள் 275

இந்தச் சூரண மெண்ணெயில் வெண்ணெயில்
தொந்தித் துண்ணலாஞ் சுக்குநீர் குன்மத்தை
நிந்தித் துத்தள்ளு நீடனு பானத்தால்
வந்த வாயுவைத் தள்ளும்வா தாசனம் 276

இஞ்சிச் சாற்றி லிடுமந்த வாந்திக்கு
மஞ்சட் சாற்றின் மகோதர வீக்கம்போம்
நஞ்சுக் கெல்லாங் கடுக்காய்த்தூணலல்லது
மிஞ்சு சன்னிக்கு வேப்பெண்ணெய் தேனுமே 277

நீர டைப்புக்கு நீடும் வெடியுப்போ
டார்கொ டிக்கள்ளிச் சாற்றி லதையிடு
மோரி லேயிடு விக்கற்கு முன்சுட்ட
கோவி னீர்மஞ்சட் காமாலைக் கொக்குமே 278

மஞ்சட் காமகலை மாற்று மனுபானம்
செஞ்சுஞ் சீயக்கா யின்னிலை சேர்த்தரை
கொஞ்சம் பாக்கள வாறுநாட் கொள்ளப்பாற்
கஞ்சி யுப்பிலை பத்தியங் காத்திடே 279

சீயக் காயை யிடித்துநீர் சேர்த்துவை
காய வெய்யிலி லூறுங் கஷாயத்தில்
காயுஞ் சர்க்கரை கற்கண்டி லொன்றிடு
நோயும் பித்த சலத்தையு நூறுமே 280

மஞ்சட் காமாலை தோடம் வருவிக்கும்
மிஞ்சி டாமுன் மருந்துசெய் மேதியின்
தஞ்ச மாந்தயி ராவின்பால் தப்பினால்
அஞ்சின் மேற்றயி ராகாதென் றோதுமே 281

குமரி கீழ்நெல்லி வேர்முத்தக் காசுகூர்
அமரி முற்கமு மாகுமுற் கூற்றுக்கு
நிமிரு நாள்மிக நிற்கிற்கா மாலைக்கே
அமருங் கையான் றகரைவல் லாரையே 282

பாண்டு வீக்க மலசல பந்தமும்
காண்ட கும்மல சோடண காந்தியும்
தூண்டி முன்செய் கஷாயங்க ளுக்குச்சொல்
பூண்ட வெண்காரம் போடு பொரித்ததூள் 283

முள்ளி சாரடை மூக்குறட் டைசுரை
தள்ளு வீழி பிரமி தளிர்முன்னை
எள்ளு நாயுரு வீயிரு நீர்முள்ளி
வள்நெ ரிஞ்சியு நீரை வடிக்குமே 284

சேம்பி ரண்டு சிறுகீரை சீதளை
பாம்பி னட்சியும் பன்றித் தகரையும்
மாம்ப முக்கொன்றை மஞ்ச ணுணாவிஞ்சி
தாம்பு சர்க்கரை சாரங்க ணீர்தரும் 285





வயிற்றில் வீக்கம் வடிக்கு மிதிலொன்று
கயக்கச் சுக்கிட்டுக் காய்ச்சிக் குடிக்கலாம்
நயக்குஞ் சித்திரப் பாலாவி நன்னாரி
கயக்கும் வெள்ளரி கக்கரி வித்துமே 286

## மேகரோகம்

உதரத் திற்பசி யோடு முளத்தினில்
கதன மர்தரைக் காமித்துச் சேர்கிலா
ததன மாகச்சேர்ந் தாயினு மாரும்வெப்
பதனி லுள்ளநீர் நஞ்சா யடங்குமே 287

மேக ரோக மிதில்வரு மேனியில்
தாகங் குன்மஞ் சலரோகஞ் சந்தியில்
ஆகும் மந்த மழற்சுர மங்கத்தில்
மேவும் விக்கல் விரணமும் வீக்கமும் 288

கடுப்புக் குத்துடன் கைகா லெரிப்புப்பின்
இடுப்புக் கூனி யிடிந்துபுண் போலுமாம்
அடுத்த மேக மதிகமா முன்னமே
தடுக்கச் சொல்லுவன் சஞ்சீவி மூலிகை 289

### பித்தமேகத்துக்கு

பித்தத் தாலெழிற் கூவிளை பேய்ப்புடோல்
சித்தி மாதளை யாவிரை சீரகம்
கொத்த மல்லி யிதிற்கொடு வேலிவேர்
பித்த மேகந் தவிர்க்கும் பெருகவே 290

தான்றி தாளிச பத்திரி சாதிக்காய்
தோன்று தேங்காய் துவரை துளசியும்
ஈன்ற மேதிப்பா லேல மிலவங்கம்
ஆன்ற போகத் தழலை யவிக்குமே 291

மேக வாதம் விலக்குவெண் ணொச்சியும்
காக மாசி களப்பன்னை கார்புகா
நாக மாமர மஞ்ச ணரிக்கொன்றை
தாக மாலதி சதுப்பெருங் கள்ளியே 292

திருகு கள்ளி சிவதை பிரப்பம்வேர்
கருகு மூமத்தை கையான் றகரையும்
எரியெ ருக்குக் கொடுவேலி யீதிலொன்
றரிய மேகக் கடுப்பை யவிக்குமே 293

பொடுதல் பொன்னா விரைபுங்கு 0பாளமும்
வடமென் சேங்கொட்டை வாய்விளங் கம்விழால்
கடுகு ரோசனை கான்றை கடுக்காயும்
இடுக மேகத்துக் கேற்கும்புண் ணாறவே 294

தகரங் குன்றி சதகுப்பை வெட்பாலை
அகில்ம னோசிலை வேம்பாட லப்ரகம்

0 கோளமுமென்றும் பாடம்.

நகரங் கெந்தக மால்நாரி நாகமும்
மிகுநன் னாரியு மேகத்துக் கேற்குமே 295

### சிலேற்பனமேகத்துக்கு நெய்

மேகஞ் சேடத்திற் கூடி மெலிந்துடல்
ஆக மெங்கும்புண் ணாயினுங் குய்யத்தில்
வேகங் கண்டு வெடிக்கினுங் குத்தினும்
போக நெய்யொன்று சொல்லுவன் புந்தியால் 296

ஆவி னெய்படி காய்ச்சி யதனுளே
காவு மாரச கர்ப்புரங் காற்கழஞ்
சோவி லாத பெருங்காயமோர்கழஞ்
சேவு நாற்கழஞ் சின்கொடு வேலிவேர் 297

வெந்நீர் விட்டு விழுதா யரைத்தெலாம்
தின்ன வாறு பணியாரம் போற்செய்து
பன்னு நெய்யிற் பதத்தினில் வேகவைத்
துன்னு நெய்யுடன் மூன்றுநா ளுண்ணலாம் 298

நேர மொன்றுக் கரைப்பணி யாரநெய்
சாரத் தின்கத் தினமூன் றதற்குமேல்
ஆரச் சொன்மறு பத்திய மூன்றுநாள்
சேரக் கஞ்சியைத் தேய்த்து முழுகப்பின் 299

இப்ப டித்தின மாறு பிரிந்தபின்
தப்பி லுப்புடன் சங்கிலை கூட்டியே
வெப்புக் கொள்ள வறுத்திடு வெள்ளுப்பை
அப்பிற் கூட்டலா மாறுநாண் மட்டுமே 300

முறிகி ரந்திப்புண் முற்று முலர்ந்திடும்
முறுகு மண்டவா தத்தையு மோட்டிடும்
சொறிசி ரங்குடன் கள்ளிப்பூத் துத்திப்பூத்
தறுநு ணாக்காய்க் கிரந்தியுத் தள்ளுமே 301

நீர்க்கக் கட்டு முகசிங்கி நீர்க்கடுத்
தீர்க்கு மேபடர் தாமரை செப்பொணாப்
பார்க்குள் வாரா பகந்தர மென்பதும்
தீர்க்குங் குட்டம் பவுந்திரந் தீர்க்குமே 302

ஆட வர்க்கு மரிவையர் தங்கட்கும்
கூடொ ணாமலே குய்யத்திற் புண்வரில்
தேடு வேலிநெய் தின்னுமின் றின்னுமின்
பாடு கண்டக் கரப்பனும் பற்றறும் 303

### பலாதகிரசாயனம்

மதன யுத்தில் மைந்தர்க்கு மாதர்க்கும்
அதன மாகியவ் வங்கத்திற் புண்வரில்
விதனந் தீர்திடச் சொல்லுவன் வெண்டுமேல்
இதுபல் லாதகி யென்றர சாயனம் 304





சேங்கொட் டைபலம் நாற்பது தேடியே
வாங்கு நீர்புளி யின்னிலை வார்த்தவி
ஓங்கு கொட்டை முகஞ்சீவி யுள்ளபால்
வாங்கி வைத்துக்கொள் வட்டகை யுள்ளுற 305

வைத்த பாலி லிடுவகை சொல்லக்கேள்
உய்த்த வெட்பருப் போர்படி தூளதாய்ச்
சத்த ரைத்திடு கையாந் தகரையின்
செய்த்த வெள்ளறு கோடு செருப்படி 306

சேரச் சடைக்கஞ்சாச் சின்னி யிருபலம்
சாரத் தூள்செய் சரக்கையுஞ் சொல்லக்கேள்
சீர கம்ரண்டு திப்பிலி மூலமும்
கார்பு காக்கனி மூன்று கடுத்திரயம் 307

கடிய வாய்விளங் கம்பறங் கிப்பட்டை
தடுகி ரந்தி தகரங் கழஞ்சிரண்
டிடுக தூள்செய் திதிலிடு வேருங்கேள்
கொடிய வேலி நிசிகொட்டைப் பாசியே 308

இயங்கம் வேரு மிடித்து வடிகட்டி
வயங்க வைந்து வராக னிடையிடு
பயங்கொள் வெல்லம் பலம்பத்து முன்னிடு
வயங்கு பாரத சிந்தூரம் வைத்திடே 309

சிந்து ரத்தி னிறையோர் கழஞ்சென
முந்து சாத்திர மோதுங் கடுகமென்
றிந்த லேகிய மென்று மிழகவே
சிந்து மெள்ளெண்ணெய் சேரமட் டாய்விடே 310

விடுக சப்புப் புளிப்பின்றி வேண்டிய
படிய ருந்து மருந்திரு போதும்பார்
நொடியி லாயிர நோய்களை நூறிடும்
படியி லீதுபல் லாதகி லேகியம் 311

மேக காசஞ் சயத்தொடு மேகத்தால்
ஆகும் புண்க ளனேகமு நாவினில்
தாகஞ் செய்யுந் தவிராத் தழும்புபோல்
ஆக நாவி னறளையுந் தீர்க்குமே 312

மூற்கிற் கண்ணினின் மார்பின் முகத்தினில்
பூக்கும் புண்படிற் பொல்லாதென் றோதுவர்
வாக்கிற் பல்லி னகங்களில் வாய்க்குள்ளே
தீர்க்கச் சேங்கொட்டை லேகியந் தின்னவே 313

### மேகரோகத்துக்குப் போதுமருந்து

எள்ளும் பாலும்பா லாவி யிலையுமாய்
மெள்ள வேகவை குண்டை விரைமெத்தக்
கொள்ள லாந்தின மோர்கொட்டை கற்பமாம்
தள்ளு நோய்பல வீரியந் தங்குமே 314

கடிவி ஷங்கள் கரப்பன் கிரந்திப்புண்
உடலுள் வாயு வுபத்திர வங்கள்போம்
படரும் தேமற் பரப்பு மரிப்பும்போம்
இடரி லாக்குண்டை யொத்திடிற் றின்கலாம் 315

### தூரிசெண்ணெய்

அசகு ணிப்புண்ணுக் காற்றுந் தயிலங்கேள்
இசையு மெள்ளெண்ணெ யீருழக் கோரள
வசைவி லாநவச் சாரமொ டார்சூடன்
இசையு மார்துரு சைந்து வராகனே 316

பொடித்தெ லாமொன்றாய்ப் போட்டுத் துளாவியே
அடுத்த பக்குவத் திற்காய்ச்சி யாறவை
குடிக்க லாம்மேலும் பூசிக் குளிக்கலாம்
மடுக்குஞ் சென்மக் கிரந்திப்புண் மாறுமே 317

### வண்டு கடி

காதிற் காலி லரையிற் கடுவனென்
றோது வாரொழி யாச்சொறி யூன் றண்ணீர்
மோதி நாறு மறையுமுண் டாகுமேல்
ஈது வண்டு கடியென் றியம்புவர் 318

### மெழுகுசேர்வை

தெங்கி னெண்ணெ யுழக்கினைச் சேரவே
அங்கி தன்னி லழலுறக் காய்ச்சியே
பங்கு வெண்மெழு கிட்டுப் பதத்திலே
பொங்கி டாம லிறக்கிப்பின் போடுதூள் 319

துரிசு துத்தம் வராகனொன் றேசொலும்
அரிய பாரத மப்படிச் சேர்த்தரை
உருகி யேமெழு காறமுன் றூவியே
முரு(க்)கி லைச்சாற்றி லூற்றிமேன் மூடிவை 320

வைய தாறி யுறைந்திடும் வெண்ணெய்போல்
பைய வேதொட்டுப் பூசப் படர்ந்திடும்
குய்ய ரோகம்புண் கூடவே யாறுதற்
கைய மில்லை யருமருந் தாகுமே 321

காசு போலப்புண் கோசத்திற் கண்டிடில்
ஆசி லாரச கர்ப்பூர மற்பமாய்
ஊசு மூமத்தஞ் சாற்றி லுரைத்துடன்
பூச வாசியாம் கோசப்புண் ணேசியே 322

நரம்பி னீர்கொண்டு துன்னி நசையிலா
திரும்பு போல விருக்கு மரக்குட்டம்
அரும்பிக் குத்து மழலு நரம்பிலே
வருந்திச் சேங்கொட்டைப் பாலிட்டு வாங்கலாம் 323





### காரம்

காரஞ் சொல்லக்கேள் கற்சுட்டுக் கர்ப்பூரம்
சேர மஞ்சள் சவுக்காரஞ் சேர்த்தரை
சாரும் வீரமுஞ் சாரித்து வெண்ணெயில்
பாரும் போடப் பறக்குஞ்சீப் புண்ணெலாம் 324

பிளவைக் கட்டுப் பெரும்புற்றுத் தீர்ந்திடா
தளறு போல்வெழுத் தாறாத புண்களும்
இளகிக் காயவு மேரண்டத் தெண்ணெயில்
பளிதஞ் சூடன்வேம் பாடல்சுண் ணாம்பிடே 325

பழுக்கக் கட்டு மருந்து பகர்வன்கேள்
கழற்சி மாதளை சீந்தில்காட் டாமணக்
கெழி லெருக்கம்பூ வின்பவ ளக்குன்றி
குழற்ப னிச்சை குறிஞ்சாக் குருவிச்சை 326

ஓதிபொன் னாவிரை கற்றாழை யொன்றிதில்
அதிக நீரி லவித்துக்கட் டுவநாயம்
விதன நீங்கும் பழுக்கும் வெடித்திடும்
அதன விக்கமு மாறும்புண் ணாறுமே 327

விளிம்பு கட்டி விரிந்துநீர் பாய்ந்திடும்
குளிர்ந்து கெண்டைக்காற் குள்ளே திருவடி
பழம்மி ளகுடன் மாவிலங் கம்பட்டை
அழுங்க வேயிடி கட்டவி ழாறுமே 328

சொறிசி ரங்கு தொலைத்திடுங் கெந்தகம்
கறுவற் சீரகங் கம்பிப் பிசினதில்
மறுவில் வேப்பெண்ணெய் வார்த்துப்புண் மேலிடத்
தறுகும் புண்ணெலாந் தான்றமும் பாகுமே 329

### பட்டாணித்தைலம்

எட்டுச் சேங்கொட்டை வெட்டியெள் ளெண்ணெயில்
இட்டுப் பொன்னரி தாரத்தூ ளிட்டெரி
முட்டி யெண்ணெயிற் பற்ற முதிர்ந்தெரி
கட்டி நீரிற் கவிழ்த்திடு பாயமாய் 330

தொட்டுப் பூசி யரப்பை யுடம்பெலாம்
இட்டு நீரிற் குளிர்க்கச் சிரங்கெலாம்
விட்டுப் போமிது வேதம் வுளம்பிய
தட்டில் லாதபட் டாணித் தைலமே 331

### கரலேபனம்

இரதங் கெந்தக மேலங்கிருமியைச்
சரதங் கொல்லியைத் தேங்காய்ப்பால் தன்னிலே
அரையப் பாலெண்ணெ யான வுடனதில்
மருவ வெண்மெழு கிட்டுடன் மத்தியே 332

உள்ளங் கையி னொருகணஞ் சாதிக்க
மெள்ளத் தேகத்தி லூறிச் சிரங்கெலாம்
தள்ளு நாண்மூன்றிற் சற்று மறித்திடாக்
கள்ள மில்கர லேபனங் காணிது 333

### நிதம்ப சூலைக்கு

நிதம்ப சூலையை நீக்க மருந்துகேள்
கதங்கொள் மாதர்க்குக் காணுமந் நோய்மிக
அதன மாகி ரடைத்திடும் பூப்பையும்
விதன நாபிக்குக் கீழே விளைந்திடும் 334

கர்ப்பம் போலாங் கருவைக் கெடுத்திடும்
அற்ப வுண்டியு மாமதற் கோதக்கேள்
முப்பழத் தொடு காயமு முக்கடு
கொப்பில் பேய்க்கொம் மடிக்காய் தனில்விரை 335

மஞ்சள் சுட்டமா வோர்பலம் வைத்தரை
செஞ்ச நல்லெண்ணெய் சேர்த்துக் குழப்பியே
அஞ்சு காசிடை யுள்ளி யசமோதம்
எஞ்ச விட்டுப் பதத்தி லெரித்துவை 336

பத்து நாட்டின்னப் பத்திய முப்பொன்றாம்
கைத்தல் பால்புளி யாகாது காரமாம்
சுத்த மாதர்க்குச் சொல்லிரு துப்படும்
புத்தி ரர்ப்பெறப் போகம் விரும்புமே 337

## ருதவாகாத பெண்களுக்கு

பருவ மாகிய பாவைய ராயினும்
இருது வில்லா ளிருசியென் பாரந்தத்
தெரிவை யர்க்குத் திரண்டே யிருதுவாய்
மருவ நல்ல மருந்தையுஞ் சொல்லக்கேள் 338

செம்ப ரத்தம்பூத் திகழ்மேதி யின்றயிர்
அம்பு போல்விழி யாருக் கருத்திப்பின்
கம்பி யாகுங் கரிய வளையிலோ
டின்ப மாவி லிடுபனங் கட்டியும் 339

எண்ணெய் குத்திக் குழைத்தெழு நாட்குளே
உண்ண முன்பூப் புடைக்கு முதரத்தில்
தண்ணொண் றில்லாத் தழற்போ லழன்றிடில்
உண்ண முன்போ லுரையெரு மைத்தயிர் 340

### இதுவுமது

வேறு முண்டு மருந்து வினவிக்கேள்
ஏறு கொம்பை யிடித்துப் பிழிந்தசா
றூற வேகடு கோர்பலம் வைத்தரை
கூறு மஞ்சள் பனங்கட்டி கூட்டியே 341





தின்ன மாதர் திரண்டு மடந்தையாய்
மன்ன வேகரு வன்னி யிலையும்பால்
தென்னம் பூவர சேயபுல் லூரியும்
மன்னுவெண் ணெய்மணித் தக்கா ளிச்சாறு 342

### காகமலடிக்கு

காக வந்திக்கு கர்ப்பத்திற் சொல்லிய
பாகு செய்யும் பருவத்தைச் சொல்லக்கேள்
காக மாசி கருநொச்சி பீச்சுளாய்
வேக வுள்ளி குழிமீட்டான் வேம்பாடல் 343

கள்ளிப் பாலுங் கடுங்காயுங் கூட்டியே
வெள்ளைத் தேங்காய்ப்பால் விட்டரைத் தேயிதை
மெள்ளக் காய்ச்சியவ் வெண்ணெய் மிதக்கவே
கொள்ள நாலாநாட் கொர்ப்பமுங் கொள்ளுமே 344

### சென்மவந்திக்கு

வயிற்றி னிற்கரு வாராத வந்திக்கும்
மயக்கு தூமையு மைபோற் கருகியே
இயக்க மாகு மிவள்கொர்ப்பங் கொள்ளவே
0 பயத்தி னாவற்பூப் பட்டை யரைகொடு 345

### மரணவந்திக்கு

மரிக்குங் கொர்ப்ப மடந்தைக்கும் வந்திக்கும்
அரிக்குஞ் சின்னி யவுரி மருட்சாற்றில்
எரிக்க நாபியிற் குத்தியே பூப்பிடில்
அரைத்து வேப்பிலை பாலொ டருந்தலாம் 346

### மலட்டுக்குப் பொதுமருந்து

வந்திக் கெல்லாம் வகுத்திடு மெண்ணெய்கேள்
நந்திப் பூவிலை யோரிதழ் நன்னாரி
இந்துப் போடுள்ளி வேப்பெண்ணெ யிற்காய்ச்சிக்
குந்தி மூழ்கி மறுநாட் குடிக்கலாம் 347

### கரப்பனெண்ணெய்

வேரி யங்குவெட் பாலை விளங்கமும்
ஈர வெண்காய மிண்டு மரமஞ்சள்
கூரும் வேம்பாடல் குமரி குறட்டையும்
சேருஞ் செவ்வள்ளி சின்னி கழற்கொடி 348

மணலி மூக்குறட் டைமணித் தக்காளி
துணருந் தூது வளைபேய் மருட்டியும்
புணரி கோழி யவரை யவுரியும்
கணையுத் தாலமனணி கம்பிப் பிசின் றுளாய் 349

மாவி லங்கைவெண் ணோச்சி வசம்புடன்
கோவை பாளை வெடிப்பான் குழிமீட்டான்

0 பயம் - பால்.

பாவு பூத கரப்பான் பருந்துளாய்
ஓவி லாதிவற் றோன்றறத் தேடுமே 350

இந்த வேரு மிலையுஞ் சரக்குமே
வந்த சாற்றி லரைத்து வடித்தபின்
இந்த வாமணக் கெண்ணெ யெடுத்துணச்
சிந்தி டாக்கெர்ப்பஞ் சேர்ந்திடிற் பத்தியம் 351

## மலட்டிலக்கணம்

போக வந்திக்குப் போகஞ் சுகந்தரா
தேக யோனி யிறுகி வரண்டிடும்
காக வந்திக்குத் தேகங் கனத்திடும்
சாகும் வந்திக்குச் சாருந் தலைவலி 352

கெர்ப்பந் தங்குமூன் னாக்கிள ரெண்ணெயை
அற்ப மாகவே யாரலா மூன்றுநாள்
தப்பில் பூப்புத் தொறுந்தொறுஞ் சாருநாள்
முப்ப துக்கொரு காலாக மும்முறை 353

கிரந்தி ளெண்ணெயுங் கேட்குங் கரப்பனை
அருந்த லாங்கெர்ப்பம் வந்தா லழிந்திடா
மருந்து மந்திர தான மனத்தினிற்
பொருந்தச் செய்யிற் புதல்வருண் டாகுமே 354

பூத வந்திக்குப் பூப்புத் தொறும்புலால்
வாத நாறு மலட்டு மயங்கியே
மாதப் பூப்புங் கணக்கினில் வந்திடா
மாத மிஞ்சியுந் தாழ்ந்துமே வந்திடும் 355

ஓது மஞ்சன நச்சிய முண்மையாய்ச்
சாதி மூலி மருதோன்றி தண்டுளாய்
வேதிப் பேயை மருட்டிவேர் கட்டியே
காத லன்னுட னென்றுங்கண் டுங்கவும் 356

கண்வெ ளுத்து முலைக்கண் கறுத்திடும்
உண்மை யாய்க்கெர்ப்ப முண்டான நாண்முதல்
கண்ணின் மாத விடையுங்கண் டாற்கெர்ப்ப
வண்ண வந்தி யவட்குக் கழுதைப்பால் 357

பால ருந்துநாட் பத்திய முப்பிலை
சீல மாதர் தெருண்டநாட் கொள்ளலாம்
பால்மு லைக்கண்ணிற் பாயுங் கருக்கெடும்
மூல காந்தி முதிருமவ் வந்திக்கே 358

மானின் கொம்பை யரைத்து மதனசஞ்
சீவி யெண்ணெ யுழந்தெட் பருப்புத் தேன்
கான மல்லிகை நெற்பொரி கார்புகாத்
தான்சி லாசத்துத் தள்ளு மலட்டையே 359





### விஷமவந்திக்கு

விஷம வந்திக்கு வேகங் குடலிலே
தழும்பு புண்ணதிற் சோணிதந் தங்கிடா
விழும்பின் சேர்ந்திட வேதனை நீங்கியே 360
அழுந்து சுக்கில கெர்ப்பம தாகுமே

### முகிழவந்திக்கு

முகிழ வந்திக்குத் தூமை மிகுமுலை
நெகிழு மத்தலைக் கண்ணுங் கறுத்திடா
திகழும் யோனிவாய் மேலே யிறுகிடில் 361
புகலும் வேப்பெண்ணெய் பூசிப் புணர்ந்திடே

வயிற்றிற் பூப்படு நாளில் வலித்திடும்
மயக்கும் போகத்தி லாசையு மின்றெனில்
நயக்குங் கெர்ப்பமந் நாளிலுண் டாதற்கே 362
கயக்கு மெண்ணெயுண் டக்காளிச் சாற்றுடன்

### பகந்தரவந்திக்கு

பூப்பு மூத்திரம் போம்வழி போமதை
ஆப்புப் போல வடைத்திடு மாடவர்
சேர்ப்புக் கேராத் தெரிவையைத் திண்ணமாய்ப் 363
பார்ப்பர் சொல்லும் பகந்தர வந்திக்கே

அதற்கு முள்ளுக் கருந்துவ தார்நிம்பம்
இதக்கும் பட்டை யிடித்து மிளிரவே
பதக்கு நீர்வற்றக் காய்ச்சிப் பதத்திலே 364
விதத்தி லுள்ளி விளங்கமுங் கூட்டியே

அருந்த லாகுமவ் வங்கத்திற் புண்பட்டால்
நெருங்கு வெண்காரஞ் சேங்கொட்டைப் 0பாவினை
ஒருங்கு சேர்த்துத் துரிசிட் டொருதிரி 365
நெருங்க வைத்திட நீங்கும் பகந்திரம்

### புணர்ச்சி மலட்டுக்கு

''நடன் வீரியம் போகிக்கு முன்படில்
தெரிவை கெர்ப்பத்திற் சிக்காமற் கக்கிப்போம்
பருவ மாயதைப் பார்த்து மறியலாம் 366
தெரிவை யர்க்குந் தெரியும் விதனத்தால்

### தாது வலுவுக்கு

கோட்ட மேலங் குளிருங்கஞ் சாவிரை
காட்டிற் பேய்க்கருப் பஞ்சாறு கராம்புடன்
ஆட்டி யேயரைத் துண்டிடி லாடவன் 367
கூட்ட மொத்திடுங் கெர்ப்பங்கொள் வாளவள்

கோச நொந்து சுரங்கிமின் குய்யத்தில்
ஆசை யின்றிப் படவே யழிந்திடில்

0 பால்நிசி என்றும் பாடம்.

ஏசு மாது மிருவர்க்கு மின்பமும்
மோச மாகு மதற்கு மொழியக்கேள் 368

அரும வின்கழஞ் சந்நீரி லுள்ளவித
திருமு ருங்கைக்குள் ளிருபத்து நாலுநாள்
மருவ வைத்துப்பின் வாங்கி மடந்தையை
மருவும் வேளையின் மாந்திப் புணர்ந்திடே 369

இளக யோனி யிடவே யிடங்கணம்
இளமின் னார்க்கு மிதமும் விருப்பமும்
உளம தற்பினுண் டாமட மின்றியே
புளக மேறப் புணர்வரப் பூவையர் 370

கலப்பை யின்கிழங் கோடுவெண் காரமும்
உலப்பில் வன்மிகத் தூறு மதுவுடன்
புலப்பில் பூசிப் புணரப் பொருந்தாதாள்
கலப்பில் காந்தனைக் காமனென் றெண்ணுவாள் 371

**மதனகாம ரசாயனம்**

மதன காம ரசாயன மாமதை
இதம தாயுப தேசிப்ப னென்றுநன்
றதன மாகு மரிவையர் போகத்துக்
கதுந புஞ்சகத் தன்மை யகற்றுமே 372

காமப் பூவுங் கராம்பு கசகசா
வாமைச் சீடைப் பருப்புவன் கன்மதம்
ஓம மேல மிலவங்கம் வெள்ளுரம்
தாமக் குங்குமப் பூவுஞ் சமபாகம் 373

சாதிக் காயிதற் கெல்லாஞ் சரிகஞ்சா
மோது வித்து முருங்கையின் மொச்சையின்
காது கின்ற கவிகோழிக் காய்விரை
மாத ளம்பழ வித்து மதுாகப்பூ 374

அரசொ டத்தி கருவேம்பொ டாதண்டை
பரவு தும்பை பறங்கிக்காய் வித்துடன்
உரிய வெள்ளரி பூசனி வித்துயர்
நரிப்ப யற்றுடன் முற்க நறுங்கொள்ளே 375

பூனைக் காலி கடலைபொற் சீரகம்
கானக் கொள்வெட்டான் பாகற் கனிக்கொட்டை
வானத் தேமாம் பருப்புவன் மூங்கில்வித்
தூன மாவர சாலத்தி யல்லிக்காய் 376

இதுகள் சொன்னத் திரட்டி யிடித்ததுாள்
இதற்கெல் லாம்ரட்டி யெள்ளுப் பருப்புத்தூள்
இதற்கி ரட்டியாம் வெந்தயங் கோதும்பை
இதற்கி ரட்டி யிடித்த வுழுந்துத்தூள் 377

சர்க்கரை யுஞ்சரி பங்காகக் கூட்டியே
பக்கு வத்திற் குழம்புபோற் காய்ச்சியே





துய்க்குந் தூது வளைப்பூப் பலமஞ்சு
சிக்கி ருப்பூப் பலம்பத்துச் சேர்த்திடே 378

கூவி ளம்பூக் குமரி கவலைப்பூப்
பாலில் வேகவை பார்த்துப் பதத்தினில்
ஓவி டாது வறுத்தே யுலரவை
ஆவ தெல்லா மதனுடன் சேரவே 379

தெங்கின் காய்ப்பாலிற் சேரவெல் லாத்தையும்
பொங்க விட்டு வறுத்துப்பொற் சீரகம்
இங்கு வுள்ளி கடுகிடு வெந்தயம்
தங்கு மீரவெண் காயநெய் தாளித்தெ 380

நெய்யி னாலே யிளகிய லேகியம்
பையப் பத்துநாட் டின்னவே பாலனாய்
மையன் மாதர் பலரை மருவுசான்
பொய்யின் மாரன் பொசித்த விருத்தனே 381

தாது வர்த்திக்குந் தங்கிடுங் கொ்ப்பமும்
மாதர் மேன்மனம் பற்று மதப்பட்ட
போதகத்தின் வலிமை பொருந்துவான்
மோது காம ரசாயன முண்டவன் 382

பக்க மொன்று பரிவுட னுண்டிடில்
தக்க மேனி தளர்ச்சி தவிர்ந்திடும்
மிக்க தேகத்தில் வெட்டை வியாதிபோம்
துய்க்க மண்டலஞ் சுந்தர னாவனே 383

மேகக் காய்ச்சல் கழிச்சலும் வீக்கமும்
தாகங் கண்ணில் வெப்புந் தளர்ச்சியும்
வேக நீர்க்கட் டிருமல் விலாவலி
ஆகு நோய்பல வக்கணந் தீருமே 384

காம சீவன மென்று கரைதலால்
வாம மாதர்க்கு மாமி தருந்தலாம்
தூமை யால்வரு குற்றமுந் தோமறும்
காம னென்னக் கணவரைக் காண்பரே 385

ஈத ருந்துநாட் பத்திய மேதெனில்
தாது வார்புளி யொன்று தவிர்ந்திடல்
ஏத மின்மிள குள்ளிநல் லிஞ்சிநெய்
ஓது பாலிளந் தோய்ச்சற் றயிருண்ணே 386

**வேறு**

**கறி**

முருங்கைப் பிஞ்சை முரித்துப் * பாலேடுடன்
நெருங்கக் காய்ச்சிநெய் சர்க்கரை நெற்பொரி
ஒருங்கு தூவிக் கறிகாய்ச்சி யுண்டிடில்
விரும்ப மாதர்க்கு வேளென லாவனே 387

* பாலொடுற என்றும் பாடம்.

கூவி ளைப்பூ முளிப்பூ விலைகுளிர்
ஆவி ணெய்யெரு மைத்தயி ராட்டுப்பால்
மேவு 0மெண்ணெய்கள் வித்துப் பருப்புகள்
மாவு முண்க வலியாம் மனிதர்க்கே 388

வலிமை யுண்டெனில் வியாதி வருத்திடா
வலிமை யாலே வரும்போக போக்கியம்
வலிமை கொர்ப்பம் வருவிக்கு மாதர்பால்
வலிமை செய்யு மருந்தை யருந்தவே 389

### இரத்தப் பிரமியத்துக்கு

வெட்டை மிஞ்சி யிரத்தம் விழுந்திடில்
பிட்ட வித்த புளியிலைச் சாற்றினில்
இட்ட வீரவெண் காயச்சா றிட்டதில்
சுட்டி டுஞ்சிலா சத்துத்து ளிட்டுணே 390

### சீழ்ப் பிரமியத்துக்கு

தெந்தம் போலவே சீயின்பின் மூத்திரம்
வந்தி டின்னது மாற்ற மருந்துண்டு
பந்த மாகப் பயிரி பசளைசந்
துந்து நெய்வெண்ணெ யெண்ணெயொ டுண்கவே 391

### மேகப்பிரமியத்துக்கு

வலித்தி டாமல் வருகிலெந் நேரமும்
கலிக்கு மாகிற் கலங்கிய வெட்டயைப்
பெலத்த மேகப் பிரமிய மென்பரால்
விலக்க வேயதை வெல்லு மருந்துகேள் 392

தேற்றா வின்னித்துத் தெங்கினீ ருறவை
வார்த்த ரைப்பலம் வைத்தரை வங்கத்தின்
நீத்த பற்கம் பணவிடை நேரமும்
பார்த்துப் பத்துநாட் பத்தியத் தோடுணே 393

சோணி தத்துளி நீர்க்குமுன் றோன்றிடிற்
கான மேதி கறந்த வுடனதில்
ஆணி யப்பளக் கார மரைத்ததுள்
பாணித் துக்குடித் தால்வெட்டை பற்றறும் 394

## பெரும்பாட்டுக்கு

மடந்தை யர்க்குப் பெரும்பாடு மாற்றவே
இடங்கொள் யோனிக்கு ளெள்ளெண்ணெ யிட்டுவை
அடங்குஞ் சோணித மார்நரி முறகச்சா
றுடங்கு வாழைப்பூச் சாறுணத் தோமறும் 395

கண்ணெ ரிப்புடன் கால்கை யெரிப்புமாய்
நணுணு மோங்காள நாவிற் கசப்புமாய்

0 வெண்ணெய்கள் என்றும் பாடம்.





உண்கொ ணாப்பெரும் பாடுறு மாதர்க்குப்
பண்ணும் பேய்ப்புடோல் பாலூசிப் பாலையே 396

முரங்கைக் காம்பு மலைதாங்கி முந்திரி
இரங்க மேல மிலவங்க மாசிக்காய்,
நரந்த நார நறுந்தாளி யீதிலொன்
றொருங்கக் காய்ச்சி யருந்தலாம் பாலுடன் 397

### நீர்க்கட்டு சலதாரைப் புண்ணுக்கு

அடைப டுஞ்சிறு நீர்க்குச் சதாவேரி
புடல்பொன் னாங்கணி சீந்தில் புளியாரை
படிவி கோச்சுரி முந்திரி பற்படாம்
துடரி சுண்டிநீர்த் துவாரப்புண் ணாற்றுமே 398

## மூலரோகத்துக்கு

மூல ரோக முதிர்ந்தா லபானத்தை
நாலு பக்கமுங் காய்ச்சு நவின்றதி
சீலச் சோணிதஞ் சிந்து மலத்தையும்
சூலை யாக்குஞ் சொறியு மெரியுமே 399

கருணை முள்ளங்கி சாரடை கற்றாழை
மருள்க ருவேம்பு மணலி சிவதைவேர்
நரளை கொட்டைக் கரந்தைநல் வாளமும்
விரலி வேரும் விலக்கிடு மூலத்தை 400

காட்டி லுண்டாங் கருணைக் கிழங்கையும்
மாட்டி வைபுளி யின்னிலை வார்த்தவி
பூட்டிப் பின்னும் புளியிலைச் சாற்றுடன்
ஈட்டி யீரவெண் காயச்சா றிட்டவி 401

கூட்டி நனறா யவித்துக் குழைந்தபின்
நாட்டி நல்லவ ரையிலை யிட்டவி
போட்டு வெய்யிலிற் காய்ந்தபின் பொற்புறத்
தீட்டி யேயிடி தெள்ளி யெடுத்திடே 402

எடுத்த தூள்பத்துக் கொன்றா யிதினுடன்
துடர்ந்த சீரகஞ் சுக்குக் கடுக்காய்த்தூள்
மடங்க வேரண்டத் தெண்ணெயில் மத்தித்தே
அடங்க வுண்ணழன் மூல மகலுமே 403

பிரண்டை மோரிற் புளியிலை யிட்டவி
இருண்ட வெய்யிலிற் சேரவே காய்ந்தபின்
இரண்டுக் கொன்று கடுக்காய்த்தூ ளிட்டிடி
திரண்ட சர்க்கரை சேர்த்துண மூலம்போம் 404

கட்டி மூலத்தைக் காய்ந்து மலம்வரா
இட்ட மூல மிளகவே கேடிலாக்
கொட்டை யான கரந்தை கொடுவேலி
இட்ட வேரண்டத் தெண்ணெய் குடிக்கலாம் 405

சொறியு மூலந் தொலைத்திடு முள்ளங்கி
நறளை நெய்யிற் பொரித்துண நாலுநாள்
மரளு மாமணக் கெண்ணெயு மத்தித்தே
உறவ பானத்திற் பூசலா முண்ணலாம் 406

சிவதை வேரைப்பால் சேர வவித்துப்பின்
அவமி லாதிடித் தாறு பலத்துடன்
தவல ரும்பழ மூன்றுடன் சர்க்கரை
சவிசெய் யுரொகணி சாறடை வேருமே 407

வெருகு வெண்கிழங் கோர்பலம் வெண்ணெயில்
கருக வேகுங் கருணைக் கிழங்குடன்
மருவ மத்தித்துப் பத்துநாண் மாந்தினால்
அருகிற் புண்ணுடன் மூலமு மாறுமே 408

மூல சோணித முற்றிக் கழிந்திடில்
கால மேகறக் குங்கரு மேதியின்
பாலி லேயெலு மிச்சம் பழச்சாறு
சீல மோடுணத் தீருங் கடுப்பெலாம் 409

நந்தி மாதளம் பிஞ்சு நரிப்பய
றுந்து மஞ்ச ணுணாக்கா யுழுந்துமா
வெந்த சுக்கச மோதம்வெண் மோரெண்ணெய்
வந்த மூலக் கடுப்புக்கு மாற்றிதே 410

**கிரகணிகபாடம்**

இலவு வேம்பு கருவேம்பி தின்பிசின்
அலகி லாதி யதிவிட யஞ்சுக்கு
மலரைத் தாங்கி குறாசானி மாங்கொட்டை
புலைப ருப்பெண்ணெய் போக்குங் கிராணியே 411

**மாம்வித்துச் சூரணம்**

மாவின் வித்தை வறுத்தது௱ ளின்னுடன்
மேவுஞ் சாதிக்காய் மீளுங் கராம்புடன
தாவி லோமமுந் தான்கருஞ் சீரகம்
மேவு திப்பிலி தேனிற்கொண் மிஞ்சிடா 412

**மாம்வித்து லேகியம்**

இலவோடத்தி கருவே லிருவிளா
விலகு நிம்பம் விடத்தல்வெட் பாலைமால்
குலவு பூலாக் குறட்டைநல் லாவிரை
நலவல் மாதளை நாவல் நறுவிலி 413

சுண்டி கீழ்நெல்லி சொல்பொன் முசுட்டையும்
பண்டு துத்தி கழற்சிபா வட்டையும்
முண்டி சாரடை மூக்கிரட் டைபுங்கு
கண்டங் காலி பொடுதல் கஷாயத்தில் 414





வைத்த ரைக்கு மருந்தின் வகையைக்கேள்
முத்தக் காசு புளிக்கொட்டை மூடுதொல்
குத்த மில்லாக் குறாசானி குக்கிலும்
கத்தக் காம்பு கராம்புகா சுக்கட்டி 415

அதிவி டையங்கடுக் காயச மோதகம்
மதுரந் திப்பிலி சுக்கு வசம்புடன்
கதகஞ் சாதிக்காய் கம்பிப் பிசினிவை
இதம தாய்வறுத் திட்டரை தூளதாய் 416

இந்தத் தூளுக் கிருமடங் காமிரக்
கந்த மார்கனி வித்தின் பருப்புத்தூள்
இந்தக் கற்கத்தை யெள்ளெண்ணெய் காய்ச்சியே
மந்த மாம்பதந் தன்னில் வறுத்தெலாம் 417

வறுத்தி றக்கியே வைத்தபின் வாரிதில்
திறத்த லேகியந் தேனுடன் சேர்த்ததை
அறத்தி னோடு மருந்தரை மண்டலம்
உறைத்தி டாததி கார மொழிக்கவே 418

கிராணி யெண்வகை வெப்புக் கிளர்பசி
இராம லுந்தி யிரைச்சல் கழிச்சலும்
அரோச கத்துட னார்மூல வாயுவும்
வராம னீக்கிடு மாவித்தி லேகியம் 419

**கிராணிகபாட மாத்திரை**

வெள்ளை வங்கமு நாகமு மேகமாய்ப்
பள்ள வம்மியிற் பாரதஞ் சேர்த்தரை
உள்ள தெல்லா மொருசரி வேளையின்
தள்ளு றாவிலைச் சாற்றோரு சாமமே 420

வில்லை தட்டி விளம்பு முமிப்புடம்
மெல்ல விட்டுப்பின் மீள விதனுடன்
நல்ல தாகச் சிலாசத்து நாலுபங்
கல்க 0 நாய்வேளைச் சாற்றி லரைத்திடே 421

எடுத்த வில்லை யெருவிற் புடமிடு
படுத்த பால்போல் வெளுத்திடும் பார்த்தெடு
அடுத்த தூளுக் கறுபங் கதிகமாய்த்
தொடுத்துச் சேர்க்கு மருந்தையுஞ் சொல்லக்கேள் 422

சித்த ரத்தை கராம்பிரு திப்பிலி
முத்தக் காசு விடயம் முதிர்மிள
கொத்த பங்கு வறுத்தெலா மொன்றாகப்
பத்த பாவட்டைச் சாற்றிற் பரிந்தரை 423

பங்கம் பாளை பகர்மா தளம்பழம்
சங்கி லைசத்திச் சாரணை வெற்றிலை
அங்க மாக வரையரை நாழிகை
கொங்கு சேருங் குளிகையுங் குன்றியே 424

0 நல்வேளை என்றும் பாடம்.

குன்றி மாத்திர மோரிற் கொடுக்கவே
ஒன்று நீர்ப்பா டுதரக் கிரகணி
நின்றி டாமலே நீங்கு மிதுமனம்
கன்றி டாத கிராணி கபாடமே 425

**கருவேப்பிலைத்தூள்**

வேகங் கொண்டு விழுநுரை விண்ணுடன
போகச் சூரண மொன்று புகலக்கேள்
மோகச் சுக்கச மோதநற் சீரகம்
தாகந் தீர்க்குங் கருவேப்பின் றண்ணிலை 426

கறியுப் போடு கடுகுநாய் வேளையின்
மறுவில் வித்துடன் வெந்தய மோர்மட்டாய்
வறுபொ டித்ததூள் வார்த்தெண்ணெ யோடனனம்
செறிய வுண்கவே தீருங் குடற்கொதி 427

உப்பி யுப்பிக் கழியு முதாவர்த்தம்
அப்பை யின்கொடி யார்கரு வேப்பிலை
செப்பு மிங்குநெய் சேர்ந்திடு மோர்க்குழம்
புப்பி முக்கு முதாவர்த்தந் தீர்க்குமே 428

**வாதக்கழிச்சலுக்கு**

ஓசை யின்றி யுதரஞ் சுருங்கியே
வாச மின்றி வருவ தறிந்திடா
தேசு நீரா யெடுக்குங் கழிச்சலும்
மோசஞ் செய்யாமன் முன்னே மொழியக்கேள் 429

முருக்குச் சாரடை மோதம் பிரண்டைகுந்
துருக்கந் துத்தி துடரியா தண்டையும்
வெருக்க மிஞ்சி வசம்புடன் வெந்தநீர்
கருக்கு வாதக் கழிச்சலைப் போக்குமே 430

**பித்தக்கழிச்சலுக்கு**

வேம்பு மூன்று ...ளாவொதி யின்னிலை
காம்பு முள்ளி கராம்பு வறுத்தநீர்
தேம்பு தேனிட்டுக் கொள்ளவே தீருமே
சோம்பு பித்தர்க்குத் தோன்றுங் கழிச்சலே 431

**சிலேற்பனக் கழிச்சலுக்கு**

சித்த ரத்தைதேற் றாவிரை திப்பிலி
வைத்த வுள்ளி மிளகு மலைதாங்கி
மெத்தி டாமல் வறுத்துநீர் விட்டுண
வைத்த சேடத்தில் வந்த கழிச்சல்போம் 432

## எலும்புருக்கிக்கழிச்சலுக்கு

கறுத்து முக்கிக் கழிந்த நிலத்திலே
பறித்தி டாதெண்ணெய்ப் பற்றுப்போற் பற்றுமேல்





ஒறுக்கு மீதென் புரக்கியென் றோதுவார்
திறத்திற் காணுமுன் செய்யு மருந்துகேள் 433

புங்கம் வேரைத் துருவிப் புரளவே
மங்கச் சற்று வறுத்துப் பிழிந்ததில்
இங்கு வெள்ளுள்ளி யிஞ்சி யிவற்றொன்று
தங்கு சோணித சாரந் தவிர்க்குமே 434

கண்கு ழிந்துபற் காட்டிக் கருகியே
பண்கு ரற்கம் மிப்பதறி வலியுடன்
உண்கொ ணாத வுவாந்திக் கழிச்சல்போம்
மண்கு ளவிம ணலும்வ றுத்தநீர் 435

அரிசி சுக்குக் காரம்பொ டரும்விழால்
கருகி டாமல் வறுத்துநீர்க் கஞ்சியாய்ப்
பருக லாகும் பசித்துக் கழித்திடில்
எருமை மோரினி லிப்படிக் காய்ச்சவே 436

**வாதசூலைக்கு**

வாதஞ் சந்தில் வருமது வாயுவாம்
ஓதங் காலை யுதறாம லூருவை
மோதி வீங்கும் வெடிக்கு மொழிந்திடும்
வேது வக்கம் வெதுப்புமுன் செய்யவே 437

கான்றை காவிளை கொன்றை கழற்கொடி
மாண்ட வேலிப் பருத்தி மருதணி
பாண்ட வர்முல்லை தில்லைபற் பாவட்டை
ஆண்ட மாவி லங்கையங் கோலமும் 438

வேளை வாத மடக்கியின் வேதுநீர்
நாளும் வார்த்துக் கழுவ நலந்தரும்
மீளும் வாதப் பிடிப்பும் விதனமும்
மாளு மேகப் பிடிப்பு மகலுமே 439

ஆட்ட டம்புட னாமணக் கார்நொச்சி
பூட்டு நாடிச் சுருக்கையும் போக்கிடும்
கூட்டு கோவைக் கொடிகஞ்சாங் கோரையும்
மாட்டு மேகப் பிடிப்பெலா மாற்றுமே 440

**வக்கம்**

வக்கங் காய்ச்சிப் பிடிக்கும் வகையைக்கேள்
நிக்கு நொச்சி கழற்கொடி நீரெட்டி
தைக்கு முள்ளி தழுதாழை யின்னிலை
வக்க மொத்திட வாதம் விலக்குமே 441

தூாம வக்கமுஞ் சொல்லுமு பாயத்தால்
ஆம தற்கொரு பாயை யடரவே
தாம மாய்ப்புகை சாரச் சுருட்டியே
தூமந் துய்க்கப் புளியப் புறணியில் 442

நாள யந்திரத் தாலு நவின்றிடும்
மீளு நச்சுப் புகையான் மிளிர்துடை
வாளைக் கட்டுடன் வாதமுஞ் சீதமும்
வேளை கண்டு வெதுப்பிடத் தீருமே 443

**கடிகைக்கு**

கடிகைக் கட்டுக் கரைக்கவோர் சேலையில்
கொடிய வேலி மிளகுங் குமுறவே
இடிபின் பொட்டளி யெண்ணெயி லொத்திடப்
படுமச் சூட்டினி லாறுங் கொதிவலி 444

ஓடு காய்ச்சிக் கடிகையி லொத்திட
ஆடு வீக்கம் வழிந்திட வாமணக்
காடு மெண்ணெய்தொட் டந்த நரம்பினில்
போடு பற்றுப் பொடுதலும் வேளையும் 445

புரைத்துக் கட்டுப் பொசிந்துபுண் ணாறொணா
திருக்கு மாகி லிதற்குப் புரையெண்ணெய்
சரக்குக் கேளுந் தகரம் பெருமரம்
இரக்கும் புங்கு மிருதாரு சிங்கியே 446

கரிய சீரகங் கம்பிப் பிசின்கணி
உரிய வெண்ணெயிற் காய்ச்சியே யாறவிட்
டரிய புண்புரை யிட்டுமே லப்பினால்
பருகி லும்புரை பற்றற மாறுமே 447

துடைந ரம்பிற் றுடங்கிக் குறங்கினில்
அடரும் வாதமல் லாது வராததற்
கிடைய தூநாயம் வேதுவொ டுண்கலாம்
எடுபி சுமந்தத் தெண்ணெ யிலையுமே 448

**விஷமூங்கி லெண்ணெய்**

வேம்பி னெண்ணெய் மிளிரா மணக்கெண்ணெய்
தேம்பு மெள்ளெண்ணெய் சேர்சரி யாகவே
சாம்பி ராணிவேம் பாடல் சதகுப்பை
ஓம்பு மோம முயர்கரப் பான்பட்டை 449

எட்டிக்கொட்டை யிதன்பட்டை யுள்ளியும்
வட்டு வேரும் வசம்புகம் பிப்பிசின்
தட்டை யார்விஷ மூங்கி றழுதாளை
சட்டி யெண்ணெயிற் சாரக் கரைத்திடே 450

விடுக வீதில் விஷமூங்கிற் சாறுடன்
கடிய காக்கணங் கான்றை பொடுதலை
கொடிய வேலிவேர் கூட்டிட வாதமும்
விடுமே பூசி வெதுப்பவு முண்கவும் 451

வாத சூலை வருத்தி முடக்குமேல்
வேது வெட்டியின் பட்டையை வெட்டியே





நாத மாம்வகை யெண்ணெய் நரம்பினில்
ஒதப் பூசி யுருவிப் பிடித்திடே 452

**நாராயண தைலம்**

முன்னங் கால்முழந் தாள்தோள் கணைவிரல்
பன்னுஞ் சூலை பருத்துச் சுருங்குமுன்
வன்னி யெண்ணெயாம் வார்த்திடு மஞ்செண்ணெய்
சொன்ன வாதங்க ளெல்லாந்தொலையுமே 453

புங்கு வேம்பு கடுகு புகன்றிடும்
தெங்கி லுப்பை யிவையெண்ணெய் சேரவே
சங்கங் குப்பி சதகுப்பை சாறடை
புங்கம் பாலெட்டிக் கொட்டையும் பட்டையும் 454

தில்லை சுட்டிடு சாம்பர் செறிந்தநீர்
மல்க விட்டரை மஞ்சள் பெருங்காயம்
அல்கும் வேம்பாடல் செவ்வள்ளி யாதண்டை
சொல்லுஞ் சண்பகங் கஸ்தூரி சூடனும் 455

வடித்த வெண்ணெயை வார்த்துமேற் பூசியே
அடுத்து மும்முறை யார்கடும் பத்தியம்
பிடித்துத் தின்னப் பெரியநா ராயணன்
எடுத்த தைல மிளக்கிடுஞ் சூலையை 456

பருத்தி வாத மடக்கி பருசொச்சி
மருத்து மாவி லங்கைமர மஞ்சள்சா
றிரைக்கு மேரண்டத் தெண்ணெயுங் குன்றியின்
பருப்புப் பத்துப் பலமிட்டுப் பூசிவை 457

வைத்த பின்வேது வார்த்துக் கழுவிடு
ஒத்தும் போடுபின் னுவநாயங் கட்டிவை
பத்து நாளிப் படிச்செயச் சூலையும்
வத்திப் போம்வாத வாதையுந் தீருமே 458

கால தேசமுங் கன்மமு நன்றெனில்
சூலை யெல்லாமி தொன்றே தொலைந்திடும்
மாலொ டேன்மருந் தென்று மறுத்தவன்
பாலொ டன்னம் பசிக்குப் புசித்திடான் 459

**பெருவியாதிக்கு**

பெருவி யாதியென் றொன்று பெரிதுமெல்
விரல்க டோறும் வெடித்துப்புண் ணாகியே
கருகுங் கால்கை குறைந்திடுங் கன்மத்தால்
வரும தற்கு மருந்துண்டு சொல்லக்கேள் 460

எட்டி குன்றி யிலவு மருதணி
கொட்டை முந்தரி கூவைமா வேம்பிதின்
பட்டை மஞ்சள் பருமரம் பாலையும்
நிட்ட பூத கரப்பனீ ரெட்டியே 461

இயங்கு சேங்கொட்டை யேரண்ட மஞ்சிட்டி
பயங்கொள் சின்னி பருந்துளாய் பாதிரி
மயங்கு கஞ்சா மனோசிலை மாஞ்சிலும்
வயம்பு கெந்தகம் வானவர் தாருவே 462

இன்ன தெல்லா மிதற்கென் றெடுத்ததில்
முன்ன ரோது முதிர்காஞ்சிக் கொட்டையைத்
துன்ன பாலிற் சுவறவே வெந்தபின்
தின்ன லாங்கொஞ்சஞ் சேர்ந்தபின் றின்னலாம் 463

கற்ப மாமிது கால்கை வருத்தமும்
முற்ப டுந்நரம் பெல்லா முதிர்ந்திடும்
சொற்ப மாகுஞ் சுகந்தருந் தொல்வினை
அற்ப மாகி லகலு மரும்பிணி 464

உள்ளங் கால்கை விழியுகிர் நாவினுள்
கொள்ளு நோய்களுங் குண்டை யருத்தப்போம்
அள்ளு மேபெரும் பாதமும் வாதமும்
கொள்ளக் காஞ்சிரக் கொட்டையுங் குண்டையும் 465

ஆறொ ணாதகால் கைமுத லங்கப்புண்
ஈறு காய்ச்சிநீ ராலேசீ யோட்டமும்
மாறு மாறாத புண்களு மாறவே
சோறுஞ் சூடனுங் கட்டத் தொலையுமே 466

முருக்குப் புங்கு புகையிலை மூன்றிலொன்
றிருக்குஞ் சாற்றிற்கர்ப் பூரமோ டோண்டத்
துருக்கு மெண்ணெய் கிருமித்துரு வொட்டடை
மரிக்கும் புண்புழு மாறுமப் பாய்ச்சலும் 467

**புண்புகை**

திருகு கள்ளியு மஞ்சட் டுள்சேர்த்தடைத்
தொருக லசத்தி லூதும் புகைபடக்
கருகும் புண்களிற் கண்டிடுங் கீடங்கள்
மரிக்கும் புண்களு மாறுநீ ரோட்டமும் 468

நாபி சூத மனோசிலை நாகமும்
கோபி கெந்தகங் குக்கி லரிதாரம்
சாயந் தீர்மஞ்சள் சாதிலிங் கப்புகை
நீப மான்கள்ளி நீக்கிடும் புண்ணெலாம் 469

**பூச்சு**

பிடரி யுச்சி முதுகு பிளவையுக்
கிடர்செய் தான மிவைகளிற் றோன் றினும்
அட்ரு நீரழி வன்றியே தோன்றினால்
தடவத் தீருஞ் சதுரக் களியின்பால் 470

சதுரக் கள்ளிப்பால் தடவிச் சரிபுங்கா
மதனிற் கொட்டைகல் லுப்புப் பிரண்டையும்





அதிக மாமணக் கெண்ணெய்சுண் ணாம்பிவின்
நிதமும் பூச நிணத்தைக் கரைக்குமே 471

**காரம்**

பெருக்கக் கட்டுப் பிளவை யுடைப்புறில்
நெருக்கிப் புண்கணீர் பாயினுங் காயினும்
உருக்கி யுள்ளநீ ரொன்றாக வோடவாய்
அரிக்கக் காரமொன் றாங்கதற் கேற்கவே 472

வேக மாந்துரி சொன்றுற வேமுக்கால்
ஆகும் பொன்னரி தார மரைதுத்தம்
பாகம் பாதமாம் பாரதம் பற்றவே
மோக மாகு முருக்கிலைச் சாற்றரை 473

அரைத்துச் சீலையி லப்பிடப் புண்ணின்வாய்
கரைக்கு மூன்றுநாட் கண்டுங் கரைத்திடா
திருக்கு மாகி லிதிற்சது ரக்கள்ளி
உருக்கும் பாலையு மூட்டிமேற் போட்டுவை 474

பழுக்கு மேரண்டத் தெண்ணெயை வார்த்துமைப்
புழுக்கை சுட்டரை போடு புறப்பற்றும்
பழுக்குஞ் சீயெலாம் பற்றறப் பாய்ந்தபின்
துழக்கற் றாறாத் துவரெண்ணெய் சொல்லக்கேள் 475

**துவரெண்ணெய்**

புங்கு மல்லிகை பொன்முசுட் டைகணை
சங்கின் வெரோதி யாவிரை சன்மலி
மங்கு மாலர சத்தி மருதணி
கொங்கு சேர்மலர்க் கொன்றை நறுஞ்செச்சை 476

மருது நாவல் மருக்காரை வீரையும்
அரிய வஞ்சி யடப்பமரப் பட்டை
நரியின் கொன்றை குழிமீட்டான் றுத்திவேர்
தெரியும் பாவட்டை தேற்றாத் திரணிவேர் 477

புரசு பாலை நுணாசெங்கத் தாரிபூ
வரசு வாகை காட்டாத்தி யழிஞ்சிவெள்
ளுருவை சூரை சுளுவை யுயர்சமி
கரிய வேற்பட்டை கானக் குருந்தின்வேர் 478

காட்டின் முந்திரி யீச னிலந்தைகாற்
றோட்டி நீலி துவரை துடரிவேர்
வாட்டு பூலா வரட்பூலா வீதெலாம்
தீட்டு புண்க ளனைத்தையும் தீர்க்குமே 479

ஈதிற் சிற்சில தொடுக்க வெடுத் திடித்
தோது நீர்விட் டுறவற்றக் காய்ச்சியே
பேத மாகப் பிழிந்த கஷாயத்தில்
சாத னஞ்செய் சரக்கையுஞ் சாற்றக்கேள்

சிங்கி சீனந் திகழ்கருஞ் சீரகம்
பங்கு வேம்பாடம் பட்டை மரமஞ்சள்
மங்கு பூத கரப்பன் மயிற்றுத்தம்
தங்கு மாசிக்காய் தான்றி கடுக்காயும் 481

காசுக் கட்டி களிக்கத்தக் காம்புடன்
ஆசில் வெண்குந் துருக்க மரேணுகம்
வாசச் சூடன் வசம்பு வருபுழு
நாசி யெண்ணெயி னாட்டி வடித்திடே 482

தொட்டுப் பூசவே புண்க டொலைந்துபோம்
வெட்டுக் காயஞ் சிலந்தி வெடித்தனல்
சுட்ட புண்புரை தூருஞ் சொறிந்திடும்
கட்டுப் புண்ணெண்ணெய் காணமுன் றீருமே 483

### விற்புருதி

உச்சி காதடி சந்தி லுறுப்பின்மற்
றச்ச மாங்கட் டமுந்திச் சிவந்திடில்
பச்சைப் பாலர்க்குத் தோன்றிடிற் பார்த்தவர்
வெச்ச தாமுடல் விற்புரு தீயென்பர் 484

### கிரந்தியெண்ணெய்

கொடிய வேலிசெவ் வள்ளிகூர் மல்லிகை
கடிய கம்பிப் பிசின் கருஞ்சீரகம்
அடரும் வேம்பாட லாமணக் கெண்ணெயில்
சுடவெ ரித்துக் குடிக்கச் சுகந்தரும் 485

அவுரிச் சாற்றில் வசம்பச மோதகம்
சிவதை வேம்பாடல் திண்கருஞ் சீரகம்
நவம தாமுள்ளி நன்றா யரைத்தடை
சுவறு மேரண்டத் தெண்ணெய் சுகந்தரும் 486

கெர்ப்ப மாத ரருந்திற் கிரந்திபோம்
உற்பவித் தாறு மாதமட் டுண்ணலாம்
உப்பி லாம லுதரச் சிசுப்பிறந்
தெப்ப கற்கு மினிதாய் வளருமே 487

### படர்தாமரைக்கு

பெரும ருந்துபேய்ப் பீர்க்குவிரைசிவ
னரிய வேம்பொ டனிச்சையங் கோலவித்
துரிய காரகி னீர்வெட்டி யூர்ப்பன்றி
விரைநி லாவிரை வீட்டும் படர்சொறி 488

### குட்டம் தேமலுக்கு

காரெள் சேங்கொட்டை கற்க மரைசரி
சேரெள் ளெண்ணெயிற் சர்க்கரை சேர்த்துவை
சூரி யன்பிட மானபின் றுய்த்திடில்
தீரும் வெங்குட்டஞ் செங்கருந் தேமலும் 489





தகரப் பச்சிலை செவ்வியத் தானகம்
அகில்கச் சோல மருங்கிரு மிச்சத்துரு
நிகழ்க முஞ்சுக்கு நெல்லிக்காய்க் கெந்தகம்
மிகவு மெண்கழஞ் சாகு மிகுத்தரை 490

கோழி பன்றி குறுநரி நாய்வண்டு
தாவில் கோளரி பூனை புலிதந்தி
மேஷி மீதி லொருமூலிச் சாறுமே
நாழி ரண்டெண்ணெய் தேங்காய்ப்பா னாழியே 491

இட்டெ ரித்து வடித்திடு மெண்ணெயெ
விட்ட மூலியின் பேரால் விளம்புவர்
தொட்டுப் பூசவே தொக்குறு தாமரைக்
குட்ட மாதி கொடும்பிணி தீருமே 492

### குய்யப்புண்ணுக்குப் புகை

குய்யப் புண்ணுக்குக் கூறும் புகையைக்கேள்
ஐய மில்லா முருக்கரி தாரமும்
மையில் பாரத மத்தும்வெண் குக்கிலும்
செய்யவே புகை கட்டிடத் தீருமே 493

### நகச்சுற்றுச் சிலந்திக்கு

நகச்சுற் றுக்கு நரம்பிற் சிலந்திக்கும்
புகலு மஞ்சள் புகையிலை வெற்றிலை
இகலு நிம்பத்தி லெண்ணெய் பெருமருந்
தகல நன்றாய் வறுத்துக்கட் டாறுமே 494

### வெட்டுக்காயத்துக்கு

வெட்டுக் குத்து விரணத்திற் காயங்கள்
கட்டு மாறக் கசடறச் சொல்லுகேன்
சுட்ட வெண்ணெயிற் றோய்சரம் பற்றிடில்
இட்டெ லுமிச்சங் காயெண்ணெ யொற்றிடே 495

மிளகு மஞ்சள் வசம்பு மிளிர்சுக்கும்
அளவி யொன்றா யதன்மேற் பழந்துணி
இளகி டாமலே பந்தாக்கி யிட்டெரித்
தளவு தூள்வெட்டு வாய்க்கு ளடக்கிவை 496

அவுரி கஞ்சா வலரிப் பழுப்புடன்
கவிவெ ளுத்தல் சுழற்கொடி காய்ப்பருப்
புபய மூங்கி லிலையுள்ளி சுண்டைவேர்
அவைய வெற்றிலை வெட்டுப்பு ணாற்றுமே 497

### பொரிமருந்து

பொரிம ருந்து புதுப்புண்ணுக் கெள்ளெண்ணெய்
மருவ லாமஞ்சள் சுக்கசமோதமும்
வெருகு சின்னி துரோணம் விளாவிலை
கரிய சீரகங் கொட்டைக் கரந்தையே 498

பொடுதல் சாணாக்கி பொன்னா விரையிலை
கடலி றாஞ்சி கருநொச்சி கார்மரள்
அடல ழிஞ்சி லவுரிகாட் டாத்தியும்
துடரி யீதெலாஞ் சொன்னது வெட்டுக்கே 499

### பூச்சு

விராலி வேப்பங் கொழுந்து விடத்தலும்
அரிச னத்துட னேயரை வெச்சுநீர்
மருவப் பூசிட மாறுமெள் ளெண்ணெயை
உரிய கத்தரிக் காய்ச்சாற்றி லுண்ணவே 500

### நெருப்புச்சுட்டபுண்ணுக்கு

நெருப்புச் சுட்டவந் நேரத்தில் வேப்பெண்ணெய்
திருப்பக் காய்ச்சிச் சுவறவே காய்ச்சிடில்
பரப்புப் புண்படா தாழ்ந்து துகள்படில்
உருப்ப வாத்தி யரசிலைத் தூளிடே 501

தெங்கி னெண்ணெய் கடுக்காய்செங் கத்தாரி
தங்கு தான்றி தகரங்கஞ் சாவெள்ளைக்
குங்கி லீயமுங் கூகைநீ றேலமும்
புங்கம் பாலும் புலவு தவிர்க்குமே 502

அறுந்த காது முதலான வங்கங்கள்
குறைந்தி டாது கிளுவை குருந்துடன்
சிறந்த சாணாக்கி சீதை யொதிமருந்
துறைந்த வார்மிள கூறுமன் போலவே 503

அங்கரோகம் முற்றும்.

## முக்கூட்டெண்ணெய்

எள்ளி லெண்ணெயோ டேரண்டத் தெண்ணெயும்
உள்ள வேப்பெண்ணெ யோர்சரி விட்டதில்
விள்ளு நொச்சி யிலங்கை பருத்தியும்
வள்ளுத் தாமணி வாத மடக்கியே 504

குரட்டை கோழி யவரை குளுமுள்ளி
சிறுத்தி டுந்துளாய் சிறுதூது பத்திரி
இறுத்த சாறுக ளோரொன் றுழக்காகும்
கறுத்தச் சீரகங் கம்பிப் பிசினுமே 505

விடாத வெப்புச் சுரந்தோடம் வீக்கமும்
அடாது காச மரிப்புக் கரப்பனும்
விடாது குத்து வலிவிற் புருதியும்
அடாது மூழ்கிட வாரோக் கியந்தரும் 506

வாத சேடத்தில் வந்த சுரத்துக்கும்
சேதஞ் செய்கின்ற சீத சுரத்துக்கும்
மாதம் பக்கம் வருஞ்சுரம் விட்டுப்போய்ச்
சூது செய்யுஞ் சுரங்களுந் தீருமே 507





### சன்னிக்கு எண்ணெய்

தும்பை நொச்சி சொறிசிறு காஞ்சொறி
பம்பு வேலிப்பருத்தி மருதணி
செண்ப கப்பூச் சிறுதேக்குச் செவ்வியம்
சம்பங் கித்தரு சாரடை வேரிலை 508

வெம்பு வாய்புங்கு வேம்பாடன் மஞ்சிட்டி
வம்பு வாத மடக்கி மரமஞ்சள்
கொம்ப ரக்குக் குதிரைக் கிழங்குடன்
பம்பு முக்கடு பார்விளா வேரிலை 509

இதுக ளோரொன் றிரண்டு கழஞ்சுகொள்
அதிகங் கம்பிப் பிசினஞ்சு பங்கதால்
கொதிசெய் வேப்பெண்ணெ யிற்றூவிக் கொண்டதைச்
சதிசெய் சன்னீ தவிரும் பொருத்தவே 510

இந்தத் தூளை யிடித்து வடிகட்டிச்
சிந்தி டாமல்வை தேவையாம் வேளைக்கே
எந்தச் சன்னிக்கு மேற்கு மிடுமுனம்
தொந்தித் தேறிய தோட சுரமும்போம் 511

### ஆக்கிராண சூரணம்

பேய்ப்ப லவ்வன் பிரண்டை பெருமருந்
தார்ப்புச் சுக்கு மிளகச மோதமும்
வேப்ப ரப்புக் கராம்புவெண் ணொச்சியும்
மூப்புச் சாரமு மூக்குத்தூள் சன்னிக்கே 512

மூடு சன்னிக்கு மூக்கினிற் கண்ணினில்
போடு நச்சிய மஞ்சனம் போடவே
ஆடு நாடி யடங்கினு மாடுமே
ஓடு சன்னி யுயிர்ப்புமுண் டாகுமே 513

### அஞ்சனம்

தும்பஞ் சாற்றிற் றுவரம் பருப்பரைத்
தம்பு போல்விழி யாரவி டஞ்சனம்
கெம்பி டாமற் கிடந்திடு சன்னியும்
வம்புப் பேயு மடங்கிவிட் டோடுமே 514

கருது தோலெடுக் குங்கருஞ் சீரகம்
இரதஞ் சுத்தித்த திந்துப்புத் திப்பிலி
ஒருபெ ருங்காய மொண்கடு கோர்சரி
அரைது ரோணத்தி லஞ்சனஞ் செப்பில்வை 515

கடிய சன்னிக்குங் கார்விட மேறினால்
இடுகண் ணுக்கு ளிறங்கும் விடமெலாம்
படமுன் னோடும் பசாசு பயித்தியம்
இடுக வெற்றிலைச் சாற்றி லுரைத்திதை 516

கடுகு திப்பிலி வெண்காரந் தாளகம்
அடரு மிந்து கடுக்கா யதன்பருப்
புடன்க ராம்பு மொருசரி நந்திச்சா
றிடுகண் ணோயுடன் சன்னிக்குமேறுகுமே 517

வாளுந் திப்பிலி வங்க மனோசிலை
மாளும் பாரதஞ் சுக்குடன் மத்தித்துத்
தாளுஞ் சாரடை வெற்றிலைச் சாற்றிடக்
காள கூட விடமுங் கலங்குமே 518

அசட்டுப் பேய்க்கு மலட்டும் பயித்திய
வசத்துக் கெல்லாங் கலிக்கம் வலியதாம்
இசைக்குஞ் சுக்கு மிளகிலுப் பைப்பருப்
பசைக்கும் வெற்றிலைச் சாற்றிட வஞ்சனம் 519

வாத சன்னி வலிய சுரம்வலி
சீதங் கொண்டு நடுக்கிச் செறிசுர
பேதம் பீனிசம் பித்த பைத்தியம்
பூதந் தன்னையும் போக்குங் கலிக்கமே 520

**சன்னிக்கு பூநாகத்தைலம்**

சன்னி மூடித் தளர்ந்து மறந்துசொல்
கொன்னி நாவுங் குளறி நடுங்கினால்
வன்னி பூநாக மான்மத மேதியின்
பன்னு கோமயம் பாரதம் வேப்பெண்ணெய் 521

கார மஞ்சு விடமஞ்சு சாறிடும்
கோர மஞ்சு மொன்றாகவே கூட்டியே
பாருள் நாகத் தைலமெய் பற்றுற
நீரார் சன்னிக ளெல்லா மகலுமே 522

படங்கொ ணாக விடத்தாற் பகருயிர்
அடங்கி நிற்கி லறியலா மிந்தெண்ணெய்
துடங்கிக் காய்ச்சிச் சுரரெனச் சென்னியில்
நடுங்க வேவிட நல்லுயிர் மீளுமே 523

**பந்ததைலம்**

இரதங் கெந்தக மிங்குலி கத்துடன்
மருவு முள்ளி மரீசமுந் தூள்செய்து
சருவிச் சிலை சதுரக் களியின்பால்
வெருவ வேயெரி வேப்பெண்ணெய் சிந்தவே 524

இந்த வெண்ணெய் சிரத்தினில் வைத்திட
வந்த சன்னி வலிப்பு மடங்கிப்போம்
வந்த தொன்றுந் தெரியா மனோனமாய்
உந்து கால்கை யுழன்றுயிர் மீளுமே 525

**அண்டத்தைலம்**

கோழி யண்டங் குதிரைக் குழம்புடன்
வாழு மானிடர் மாமயிர் கஸ்தூரி





காழ கன்மதங் கம்பிப் பிசின்சிலை
ஏழும் வேப்பெண்ணெ யோடெரி சன்னிக்கே 526

கொதிசெய் யெண்ணெய் குதிரை வலிப்புக்காம்
இதரஞ் சேர்த்தே யிழுக்கு நரம்பெலாம்
அதிரக் கீறி யடுத்துண்டை கட்டினால்
விதன வில்வலிச் சன்னிவிட் டோடுமே 527

**உண்டை கட்ட**

சூதங் கர்ப்புரந் துத்தமுஞ் சூடனும்
சாதி லிங்கமும் வெற்றிலைச் சாற்றினில்
சோதித் தேயிடு தோலினிற் கீறியே
வாதை செய்யும் வலிவிட மாறுமே 528

பங்கம் பாளை பழுபாகல் வெற்றிலை
சங்கங் குப்பி தழுதாழை தும்பையில்
இங்கு மஞ்ச ளிதனோ டிரதத்தைத்
தங்கு தோலின்மேற் சன்னிக்குச் சாதியே 529

இதம தாகச்செ யிந்த விதங்களால்
மதியி னாலு மணிமந் திரங்களால்
விதியை வெல்லவும் வேதம் விளம்பிடும்
அதுவுஞ் சித்தரை யாய்ந்தே யறியலாம் 530

சித்தர் தேவர் மனிதர் தைத்தியர்
ஒத்த பேரா லுரைத்த வைத்தியம்
பத்தி யோடிந்த நாலையும் பண்ணினால்
தத்து மில்லைத் தரணக்குண் மாந்தர்க்கே 531

மந்தி ரம்மணி கற்பங் குளிகையால்
வந்தி டுந்நல் வயித்தியஞ் சித்தமாம்
சிந்து ரம்பற்பந் தெய்விக மானிடம்
உந்து மூலிகை யாலென்று மோதுமே 532

இந்த மூன்றுக்கு மேற்பட் டெழுந்தநோய்
அந்தஞ் செய்யுமென் றாய்ந்தே யறிந்தபின்
நிந்தி யாமனீ டாசுரஞ் செய்யலாம்
புந்தி யாலதைப் போதிப்பன் கேட்டியால் 533

**ஆசுரவைத்தியம்**

கட்டிச் சோணிதங் கக்க நரம்பினில்
வெட்டி வாங்கல் விரணம் படக்கடும்
முட்டி காய்ச்சி முதிர்ந்தகூ டேற்றுதல்
தட்டல் குத்தல் சலாகையிட் டாய்தலே 534

கட்டு வம்புகை யுண்ணல் கலிக்கமோ
டிட்ட நச்சிய மூக்கினி லேற்றுதல்
தட்டல் கீறல் தடவல் பிடித்தலோ
டெட்டு மாசுர மென்பர் முனிவரே 535

அண்ட பானத் தசுத்தக் குழலிட்டு
மண்டி வாய்வைத் துறிஞ்சியே வாங்குதல்
பண்டி வீங்கும் பருங்கும்ப காமிலை
உண்ட நீருசி குத்தியே வாங்குதல் 536

கழலை கட்டி யரிந்து களைந்திடல்
அழலக் காய்ச்சி யரையாப்புக் கட்டுகள்
சுழலக் கோலாற் சுடுதல் துவாரித்து
வழுவி லாது புரைத்தோலை வாங்குதல் 537

பெருவ லிக்கு விடமணி பெந்தத்தில்
எரிமுக் கூட்டி லிருகுதி நாடியில்
கருகக் காய்ச்சி மனங்கலங் காமலே
சிரசி னிற்சுடத் தீரும் வலியெலாம் 538

நாவி னின்று நவிலாம லுண்ணாக்கு
மேவு மாகில் விரலி லனாமிகை
தாவு மூலை நலம்பினிற் சாரவே
ஆவ தாண்பெண் வலமிட மாகுமே 539

கண்க ரித்து வலித்துநீர் காணிடில்
வண்ண வக்கண் புருவக் கடைநரம்
பண்ண வேசுட லஞ்சாம லூசியால்
சண்ணு ரித்தல் கபோலத்திற் சுட்டிடல் 540

வாத நீருடன் சோணிதம் வாங்கலாம்
பாதந் தன்னின் முழந்தாளிற் கீழ்ப்பறள்
ஓதங் கெண்டை நரம்பினி லூசியால்
பேதஞ் செய்யவே பீரிட்டு வாங்குமே 541

விலாவின் முன்கை விரனரம் பாய்ந்ததில்
நிலாவு மூசி நிசித நரம்புக்குள்
உலாவு மோரெள் வயிற்றிலோ ரங்குலம்
கிலேச மிஞ்சிடிற் கெண்டம தாகுமே 542

கட்ட சாத்தியங் கண்டுசெய் கைமுறை
மட்டு மாத்திரை தப்பின் மரணமாம்
தொட்ட தோடம் வராமலே தோமறத்
திட்ட மாயறிந் தேசெய் தெயித்தியம் 543

## சன்னிபதின்மூன்றின் பெயர்

பத்து மூன்றெனச் சன்னி பகர்வதாம்
வித்த கத்ததன் பேரும் விளைந்திடும்
ஓத்த குற்றங் குணமுயா் காலமும்
தத்து முண்மையிற் சாற்றிடுஞ் சாத்திரம் 544

சந்தி கத்துட னந்தக னுத்தகன்
சிந்தை விப்பிரம சீதள காத்திரன்
தந்தி ரீகன் றகுகண்ட குச்சிதன்
கெந்து கெம்பிரன் கீழ்புகு நேத்திரன் 545





இரத்த விட்டி யெழும்பிர லாபகன்
வருத்த பந்நியாச னென்று வகுத்தபோ்
உரைத்த பத்துடன் மூன்றுக்கு முள்ளதாம்
கருத்துங் காட்டுங் குணமுங் கழறுவேன் 546

### அபந்நியாச சன்னி

கேள பந்நியாச னென்னுங் கிளர்சன்னி
மீளுஞ் செய்மருந் தான்மிகுந் தாற்றலை
தாளுந் தந்தங் கடுக்குந் தவித்துடல்
தோளுங் கையுஞ் சொறியு மறந்திடும் 547

கையி ரண்டு மடங்காமற் காரியம்
செய்வ தென்னத் தெரிக்கு மிருந்திடும்
பைய வார்த்தை பகருங்கண் மூத்திரம்
செய்ய தாகுந் தெரிந்துகொ ளிக்குணம் 548

### சிகிச்சை

இந்தச் சன்னிக் கிடுமருந் திஞ்சிநீர்
வந்த வுள்ளி வசம்பு மரமஞ்சள்
நந்த ரேணுகம் வேம்பாட னாரங்கம
கந்த மெட்டி கழற்கொடி கன்மதம் 549

சுக்குச் செவிவியஞ் சொல்லு மரத்தைரண்
டர்க்கம் வேலி யவுரி யிலங்கைவேர்
உய்க்கும் பேர்மட்டி யுன்னுங் கஷாயமாம்
மிக்க சன்னிக ளெல்லாம் விலக்குமே 550

### முசுற்றுமுட்டைத் தயிலம்

முசுறு வாரண முட்டை வறுத்ததில்
பிசற வேப்பெண்ணெய் சூதம் பெருங்காயம்
இசையச் சேர்த்துச் சிரசி லிடவுடன்
அசைவில் சன்னி யனைத்து மகலுமே 551

### பிரலாப சன்னி

பேசு மிஞ்சிப் பிரலாப சன்னியின்
ஏசங் கண்ணீர் வராம லெழுந்தழும்
கூசு மூத்திர நேத்திரங் கூறுநா
ஆசி லாதென்றும் போலே யமருமே 552

ஈது பித்தத் தெழிலதற் கேற்கவே
ஓது தும்பை கடுக்காயொ டிஞ்சியும்
சாதி தேக்குச் சதகுப்பை தண்டுளாய்
ஈதெ லாமிதற் கேற்குமுன் சொன்னதும் 553

### இரத்திட்டி சன்னி

இரத்த விட்டி யெனுஞ்சன்னி யீண்டினால்
பருத்தி டும்முகம் பல்வழி சோணிதம்

வருத்தி யேவரும் வாடுமெய் வாந்திக்கும்
அரற்றுங் கத்துங் கழலு மழலுமே 554

செவியஞ் சித்திர மூலக் கஷாயத்தில்
அவிய மில்வாத ராக்கத மாரப்போம்
துவர்க டுக்கனி தும்பைவேர் கூட்டியே
அவித்த நீருண வாறும்வா யக்கரம் 555

**புக்கநேத்திர சன்னி**

புக்க நேத்திர மென்று புகன்றதும்
ஒக்குங் கண்க ளுருட்டி விழிக்கொணா
மிக்க தெல்லாமுன் சொன்னதே மேவிடும்
வைக்கச் சாரடை வாத மடக்கியே 556

காயம் வெண்காரங் கான்றை கவிழ்தும்பை
நாயு ருஞ்சியு வாய்நரிக் கொன்றைவேர்
தேவ தாரு சிறுதேக்குஞ் சேர்க்கலாம்
காயுங் கொம்புத் தைலமுங் காக்குமே 557

**கெம்பீரசன்னி**

கிளர வேவரு கெம்பீர சன்னியும்
குளற லன்றி மொழியுங் குதித்திடும்
உழலு மோடு முடன்று சிரித்திடும்
வளரு மஞ்சும்வலிமையுங் காட்டுமே 558

***சிகிச்சை***

இந்தச் சன்னிக் கிதர தைலத்தைக்
தொந்தித் தேயிடு சூடுறக் கண்கணீர்
சிந்த வஞ்சனஞ் செய்முழுங் கால்கையைப்
பெந்தித் தேவைத்துப் பின்செ யவுடதம் 559

**கர்ணிகசன்னி**

கன்ன காரமென் றோதுங் கடுஞ்சன்னி
துன்னு காதினிற் சொல்வது கேட்கிலாப்
பன்னும் வேறுறப் பார்த்ததற் கொத்திட
முன்ன முக்கூட்டி லெண்ணெய்மு தண்டமே 560

**கண்டகுச்சசன்னி**

கண்ட குச்சிகம் வந்தாற் கடினமாம்
விண்டி டாமல்விலகு முரைத்தலைக்
தொண்டை கட்டுமுன் சொன்னதெல் லாமுமாம்
அண்டர் தாமு மரித் தென் றறைவரே 561

அறையி னும்மருந் தார வறைகுவன்
இறலி யிஞ்சி யிருமது வேரண்டம்
மறள்ம னோசிலை மஞ்சள் வசம்பெண்ணெய்





நறுமென் கஸ்தூரி நாபி யிவைகளால்
குறையு மேகண்ட குச்சித சன்னியே 562

**சீதகாத்திரசன்னி**

சீத காத்திரந் தேர்மயிர்க் கூர்ச்சுடன்
வாதை யோடுடல் வாட நடுங்கியே
மோதி வீழு முனங்குங் கொதியெண்ணெய்
காது கண்ணிற் கலிங்கமும் போடுமே 563

**சித்தவிப்பிரமசன்னி**

சித்த விப்பிர மத்துக்குச் செய்குணம்
தத்தி யுள்ளந் தடுமாறுஞ் சாரவே
நித்தி ரைக்க ணிமிட்டித் திடுக்கிடும்
கத்து மோடு மிதுகட் டசாத்தியம் 564

இதற்கு மேற்கு மெரிமுசுற் றெண்ணெயும்
உதக்கு முத்தாக முள்ளும் புறம்பிலும்
கதக்குங் காய்ச்ச லொழியாமற் காய்ந்திடும்
இதற்கு வாயினிற் சோணித மாகுமே 565

**அந்தகசன்னி**

அந்த கன்னென நோய்க்குப்பே ராவதென்
முந்தக் கண்ணு முகமும் பயங்கரம்
சிந்தப் பல்லைக் கடிக்குஞ் சினத்திடும்
முந்தி யோடிய தூக்குண மூடியே
வந்த வந்தகன் போலவே வந்திடும் 566

ஆல காலத் தைலத்தை யாரவே
சீல மில்சனி யந்தகன் றீர்ந்திடும்
நீல கண்ட நிறுவிட நாவிநேர்
வால பாரதம் வேப்பெண்ணெய் வைத்திடே 567

**சந்திகசன்னி**

சந்தி கத்துக்குச் சாற்றுங் குணங்குடல்
வெந்தி டுஞ்சந்தி பந்தத்தில் வேதனை
வந்தி டும்மற்ற தெல்லாமுன் போலவாம்
பந்த மாறாகக் கிடக்கும் பதறிடா 568

இங்கு சுக்குர-மீசுர மூலிகை
மங்கு திப்பிலி மாவிலங் கம்பட்டை
சங்கி லைசெவ் வரத்தை சதகுப்பை
பொங்கக் காய்ச்சிப் புசித்திடத் தீருமே 569

**சன்னிவாதம்**

சன்னி வாதம தாவது சாற்றக்கேள்
துன்னு தேகத்திற் சூடு மிகுந்திடாப்

பன்னு சீதள மற்பம் படவரும்
மன்னு நீர்படு வன்னிபோற் சீறியே 570

அதிக முட்டண மற்ப சயித்தியம்
இதுகள் தொந்தித் தெழுஞ்சன்னி யென்றறி
மதியி னாலே மருந்துசெயமுன்கையில்
பதியு நாடி பதறி யடங்குமுன் 571

தாகஞ் சத்தி கடுப்புத் தலைக்கனம்
ஆக நோங்கண் கரங்கா லழன்றிடும்
போகம் பால்புளி யுப்பையும் போக்கினால்
வேகம் தீரும் விலகிடுஞ் சன்னியே 572

இந்தக் கற்பத் தியம்பிய மூலிகை
வந்தி டாமற் சிலதுவந் தாலுமே
நிந்தி யாமலே நீயதைக் கொண்டுசெய்
தொந்தியாமற் சுகந்தரு நோயெலாம் 573

### சன்னிகளின் நாட்கணக்கு

ஏழு தாந்திரி புக்குண னெட்டுநாள்
சூழ பினாய னென்றுசொ லந்தகன்
தாழும் பத்துப் பதின்மூன்று தான்கண்டன்
ஏழி ரண்டு பிரலாப னெட்டுநாள் 574

வீழு தாக்க னிருபது விப்பிரன்
காழுங் கன்னிகன் மாதக் கணக்கினில்
தாழுஞ் சன்னிக டாநிற்கு நாளிதே 575

### சன்னியில் அசாத்தியம்

கண்டகுச்சி யபினாய னுத்தாகன்
மண்டு மந்தகன் வருசீத காத்திரன்
தொண்டை கீழ்புகு நேத்திரன் தோஷமாம்
அண்டொ ணாத வசாத்திய மென்றறி 576

### சன்னிமாத்திரை

ஈய மப்ரக மோடிரு நாபியும்
பாயும் பாரத மப்பதத் திட்டரை
நேயத் திப்பிலி சுக்கு மிளகு நீர்
காய நாளொன்று கட்டியோர் தோலையில் 577

நேய மாயிரு சாம மவித்தபின்
நாயின் வேளையி னன்றா யரைத்துவை
தோய வேவைத் தொருகுன்றி துய்த்திட
மாயுமந்தகன் மற்றதுந் தீர்ந்திடும் 578

### தோஷகுணம்

தோட மெட்டுக்குஞ் சொல்லுங் குணங்குறி
நாடி யேயறி நாவினி னால்வகை





பீடு சென்னிறம் பீதங் கருமையாம்
மூடு முள்ளாக மொக்குமுள் நாவினில் 579

அபத்தி யச்சுரஞ் சீத மதிகரித்
துபத்தி ரித்து விஷமு முதித்திடில்
நிபத்திற் றோடங்கள் நீடிய மூன்றதாம்
கபத்தி னாஞ்சங் கலிதமுந் தோன்றுங்காண் 580

விஷம சீதங் குளிர்ந்து மயங்குமே
விஷம பத்தியந் தாக மயக்குமே
விஷம மாஞ்சுரம் விட்டுப்பின் மேவுமே
விஷம சங்கலித மேலிது நாடியே 581

### தோஷத்தில் தவிர்க்கவேண்டியன

தோட மெட்டுக்குந் தள்ளுதல் சொல்லக்கேள்
வாடை கெந்த மலர்மாதர் கீதங்கள்
பாட லாடல் படித்தல் விழித்தலோ
டுடல் கண்ணீ ருகுத்த லுரப்பலே 582

### இலக்கணம்

உதர வன்னி யொடுங்கிய மேனியில்
சிதறித் தோலிற் செறிந்து கடுஞ்சுரம்
பதறி டாது பசித்திட லங்கணம்
இதம தாகுமே யெந்தச் சுரத்துக்கும் 583

சுரத்துக் காறுநாட் சென்றபின் றுய்க்கலாம்
மருந்து முன்னுப வாச மதற்குமேல்
பொருந்து மொன்பது நாட்போன பின்விடா
திருந்தி டிற்செ யிணங்கும் வயித்தியம் 584

### புனற்பாகம்

குடிக்கு நீர்க்குற்றங் காய்ச்சவே போங்கஞ்சி
வடிக்கச் சோற்றில் வருங்குற்றம் போமதை
விடுத்துக் காய்ச்சிய வெந்நீர் புனற்பாகம்
குடிக்கத் தோட குணங்களெல் லாமும்போம் 585

வாத மிஞ்சியே வந்திடுந் தோடங்கள்
கூதல் தோல்நரம் பந்தி வசைக்குடல்
மோதி யவ்வழி மூன்றுநாட் சென்றுளே
ஓது றாவுத ராக்கினி யுட்படும் 586

உந்தி வன்னி யுதிக்குமுற் றோடங்கள்
சிந்தி யோடவே செய்வ தவுடதம்
பந்த நெய் யெண்ணெய் பால்மாங் கிஷஞ்சுரை
நிந்தித் தேதள்ளி நீசெய் யவுடதம் 587

உதரத் தக்கினி யுண்டாய்ப் பசித்திடக்
கொதிகொள் கற்கங் கடுகங் குழம்புகள்

மதிமி குத்த வைத்திய னோடுசொல்
விதியை யாய்ந்துசெய் தீரும் வினையெலாம் 588

**கரசம்**

அவுரி வெள்ளை யழிஞ்சில் வசம்புவாய்
நவிலும் வேலிப் பருத்திநா ரத்தைவேர்
சிவதை திப்பிலி செவ்வியஞ் சித்திரம்
இவைய வித்த சுரச மகற்றுமே 589

இலங்கை சிக்குரு விஞ்சி யரத்தையும்
விலங்க விம்மி வெந்நீர்விட்டேயரை
துலங்க நன்றாய்ப் பிழிந்த சுரசத்தில்
கலந்து தேனுங் கடுந்தோஷந் தீர்க்குமே 590

சித்த ரத்தை சிறுதேக்குத் திப்பிலி
வைத்த புங்கு வசம்புள்ளி வச்சிரி
மெத்த வாட்டிப் பிழிந்தநீர் விட்டரை
பித்த தோடம் பிரமை யடங்குமே 591

தும்பை வேம்பு திராய் தூது பத்திரி
வம்பு முட்கா விளாய்மணித் தக்காளி
கம்பி யின்பிசின் காஞ்சுரை சாரடை
பம்பு காரங்க ளைந்தும் பகர்ந்ததே 592

கற்கம் பானங் கஷாயஞ் சுரசங்கள்
வைக்க லாகும் கறுவாத் தைலமும்
நிற்குங் கற்கங் கராம்புத் தைலநீர்
துய்க்க லாநறுங் கஸ்தூரி தேனுடன் 593

ஈச னிந்த வுயிர்கட் கிரங்கியே
கூசு நோயொன்றுக் கோர்கோடி மூலிகை
ஆசு தீர்க்க வமைத்தன னக்குணம்
ஈச னன்றியே யாவ ரறிகுவர் 594

**தேவவைத்தியம்**

தேவர் செப்பும் வைத்தியஞ் செய்விதி
ஆவல் கூரு மசுவினி தேவர்க்கும்
பூவு ளோர்க்கெலாம் போகமு மோட்சமும்
மேவ வேத விதிமுறை வாகடம்
தேவ தேவன் சிவனருள் செய்ததாம் 595

உபர சம்பத் துரைத்த மகாரசம்
கபமி லாப்பதி னாறு கரசன்னி
நிபமில் ராசராச னொன்றாய் நிறைந்
தபையஞ் செய்யு மதுவே சிவானந்தம் 596

சத்தி கெந்தகந் தண்டுள வோன்றுரி
சத்தி பொன்னரி தார மயன்முதல்





சித்தர் தேவர் தெயித்தியர் நாகருக்
கொத்தி டும்மறு பத்துநா லோதிடில் 597

அருஞ்ச ரக்கறு பத்துநா லாமதின்
மருவு தாது விளையு மறுவைப்பு
விரவு மேன்மை குணமதின் வேகமும்
தெரிவ னீசுரன் சித்திரிற் சிற்சிலர் 698

காய சித்தியுங் கற்பமுஞ்சாரணை
யாவு மட்டமா சித்தியு மாக்கிடும்
மாயை கன்ம மலமு மகற்றிடும்
ஆயு நல்ல குருமுறை யாலறி 699

விரிவு பார்க்கிற் கடல்போல் விரிந்திடும்
தெரிகி லிந்திரன் சேடனுந் தேர்கிலர்
அரிய தாயினு மாய்ந்து மனிதர்க்காய்
உரிய சிற்சில வோதுவ னுண்மையாய் 690

**இரசபூபதி**

இரச சிந்துரங் கர்ப்புர மீதிரண்
டரிது சத்தி சிவமென் றறைகுவர்
மருவு மீதின் மருந்து மனேகமாம்
தெரிகி லீதுசெகத்துக் கமுதமே 601

சூதங் கெந்தகஞ் சொன்ன தொருசரி
பாதிப் குப்பி யளவிடப் பார்த்தரை
ஈது ரண்டிரு சாமமீர் சாறுமே
ஓதில் வண்டிலை யோர்புள் ளடியிலை 602

இட்டுக் குப்பியு ளீரிரு மண்செய்து
சட்டிக் குண்மண றன்னி லதைவைத்துத்
திட்ட மாயெரி மூடித் தினமொன்று
சுட்டு மேலக் கனரச பூபதி 603

**காச** மூன்று கடுமந்த மந்தார
**காச** மாறு கடுந்தோட மேழும்போம்
**பேசுங்** குன்மங்க ளெட்டும் பெருஞ்சுரம்
**மோகச்** சன்னி பதின்மூன்று மோட்டுமே 604

**சூலை** யொன்பது சொல்வாத மெண்பது
**கால்கை** வீச்சுக் கருங்குட்ட மாதியாய்ச்
***சீல*** மில்லாச் சிறுதொந்த ரோகத்தைக்
**கோலி** நீக்குங் குலசூத பூபதி 605

**பூரண சந்திரோபதம்**

தங்க நாலு தகடாகத் தட்டியெண்
பங்கு கெந்தகஞ் சேர்த்துப் பரிந்தரை

பொங்கு பாரத மீரெட்டுப் போட்டெலாம்
அங்க மாக வரையொரு சாமமே 606

செம்ப ருத்திப்பூச் சாற்றிற் செறிந்தரை
வெம்ப வெய்யிற் படாமலே காயவை
பம்பு கற்றாழம் பாலிற் பரிந்தரை
நம்பு தெய்வத்தை நாடியத் தூளெலாம் 607

காசிக் குப்பிக்குக் கீழ்ப்பாதி கண்டிடு
ஆசில் சீலைமண் ணாலது மேலிடு
ஓசைச் சட்டி மணலினி னுள்ளிட்டே
ஏகி லாதெரி குப்பிமே லேறுமே 608

எரிக்கு நாழிகை யீரிரு சாமமாம்
நெருப்புத் தீப நிறைகம லாக்கினி
கருப்பக் காடாக் கினிமையுங் கண்டெரி
இருக்கச் சீதள மானபி னேற்றுப்பார் 609

குப்பி மேற்பற்றுஞ் சிந்துரங் குக்கிற்கண்
செப்பு மாணிக்கம் போலே சிவந்திடும்
சொற்ப மன்றிது சொல்லிற் சிவமயம்
பொற்பு மேவிய பூரண சந்திரன் 610

நாச யெச்சுமா வென்றே யுலகெலாம்
பேசுங் குட்டங் கயமுத லாம்பிணி
சூசி யோடுங் குதாகலங் சுட்டுமால்
ஆசி லாத லருஞ்சந்தி ரோதயம் 611

பாசந் தீர்க்கும் பரம குரவென
ஈசன் மாலய னாதி யிறைவரென்
றாசி லாம லருச்சித் திடிலவர்
தேசு நல்குவர் சிந்துர மாகியே 612

**லோகசிந்தூரம்**

கரும்பொன் காமாலை காசங் கயமுதற்
பெருமவி யாதி மகோதர வீக்கமும்
துரும்பு போலத் தொலைக்கு மருந்துகேள்
இரும்பி லெண்பல மிட்டே யராவிடே 613

தூளை யெண்ணெய் சுவற வவித்தபின்
மீள வெந்நீரை விட்டுக் கழுவவே
காளம் போங்கரு வேற்பட்டை காய்ச்சியே
மாளச் சாமலெந் நீராலேமத்தியே 614

நெல்லிக் காயினி னீடும் புளியிலை
வெல்லுங் கோமுத் திரத்தையும் வேறதாய்ச்
சொல்லுஞ் சாம மிரண்டரை தோமற
வில்லை தட்டிப் புடமிட்டு வெந்தபின் 615

தின்ன லாமிது தீர்த்திடு நோய்பல
இன்ன மித்தை யிரவி யுதயம்போல்





சொன்ன சிந்தூரந் தோமறச் செய்யவே
மன்னு நோய்களெல் லாத்தையு மாற்றுமே 616

முக்க னிக்குடி நீர்முதி ராலம்பால்
அர்க்கத் தின்பா லரைத்தொரு காற்புடம்
வைக்கச் சிந்தூர மாகுமே லோகமும்
துய்க்கச் சொர்ன மயமாகுந் தேகமே 617

காந்த மண்டூரங் கார்வங்க மிப்படிச்
சேர்ந்த கைமுறை யாற்சிந்து ரிக்கலாம்
மாந்த ருக்கு மருந்தாகு மீதெலாம்
சார்ந்தி டுங்குரு சன்னிதி வேணுமே 618

**இரசசிந்தாமணி**

இரச மிங்கு விரண்டுபா ஷாணமோ
டரியின் றார மனோசிலை நிர்விடம்
பொரிவெண் காரமுந் துத்தமு மிந்துப்பும்
சரிய தாகச் சதுரக் களியின் பால் 619

அரைத்து மாத்திரை யார்மிள கின்னள
வுரைக்கத் தேனிற் கஷாயங்கள் தோஷங்கள்
நெருக்கு மெண்பது வாதமு நீங்கிடும்
உருக்கு சேடத்தை யோட்டு முரைத்திடே 620

இந்த மாத்திரை யேரண்டத் தெண்ணெயில்
சந்திற் சூலை தடவியே காய்ச்சினால்
சிந்து வுண்ட சிறுமுனி கையினால்
விந்த மாமென வீக்க மடங்குமே 621

சன்னி வாதந் தனுவாத மாதியாய்த்
துன்னு சீதஞ் சுரதோ டத்திற்சில
வன்னி யுட்படு பஞ்சென மாறிடும்
இன்ன நீரு மிரதசிந் தாமணி 622

**சுராங்குசம்**

சுத்த சூதமுந் துத்தூர பீசமும்
பத்துக் கெந்தகம் பாஷாண நாலுக்கும்
ஒத்த சுக்கு மிளகு மொருசரி
வைத்தெலு மிச்சை வன்பழச் சாற்றினால் 623

ஆட்டுக் குன்றி யளவுசெய் மாத்திரை
ஈட்டு மிஞ்சியின் சாற்றி லிடச்சுரம்
மூட்டி விட்டு வருமுறைக் காய்ச்சலும்
ஓட்டு மீதோர் சுராங்குச மோதிடில் 624

**ஆனந்தவைரவன்**

இதர மொன்றுக்கு டங்கண மெட்டுப்பங்
கதிரு நாவி யரைப்பங்கு நிர்விடம்

முதிரு மூன்றொரு பங்குட னோதுநால்
இதஞ்செய் திப்பிலி யீரெட்டுப் பங்கையும் 625

இஞ்சிச் சாற்றி லிருசாமம் விட்டரை
குஞ்ச மாத்திரை யாகக் குளிகைசெய்
இஞ்சிச் சாற்றிற் கொடுக்க வெழுஞ்சன்னி
அஞ்சி யோடுமி தானந்த வைரவன் 626

குன்ம மெட்டுடன் சீத சுரங்குளிர்
கன்ம முன்மாதங் கம்பனங் காசமும்
வன்ம மாமதி சார வகையெலாம்
பொன்மு சுட்டை யனுபானம் போக்குமே 627

அஞ்ச னஞ்செ யகலும் பயித்தியம்
வஞ்சப் பூதம் வயமாகி யேமிகக்
கெஞ்சு மீளை யிரைப்புங் கிரந்தியும்
துஞ்ச றுக்க வைரவன் சொன்னதே 628

**தாம்பிரபற்பம்**

செம்பைச் சுத்தித் தரைபொடி செய்ததைப்
பம்பி டும்புளி மாதளை யின்பழம்
கொம்பில் வாங்கிப் பிழிந்துடன் கூட்டியே
நம்பி யூறவை நாலுநாட் சென்றரை 629

அரைபின் வில்லையை யாதபங் காயவைத்
தெருவி னிற்புட மிட்டெடுத் திப்படி
மருவப் பின்னுமச் சாற்றின் மகிழ்ந்தரை
எரியி னிற்செம்பு நீறாகு நிச்சயம் 630

தமரத் தம்பழச் சாற்றுக்கு மிப்படிக்
குமரி புள்ளடி கொள்காடி யாலம்பால்
அமிர்த வல்லி புரோசம்பூ வாவிரை
திமிரந் தீர்த்திடுஞ் செம்புளி மாதளை 631

நாகம் வங்கநற் றாம்பிரத் தோடயம்
ஆகும் பற்ப மரைக்கவிச் சாற்றினால்
வேக நாற்றங் களிம்பு விடமெலாம்
போகப் பண்ணும் புளிமா தளம்பழம் 632

**நாகற்பற்பம் வெள்வங்கபற்பம்**

நாக நாலுக் கிரதநன் றொன்றுசேர்
பாக மாயரை சாமம் பழச்சாற்றில்
வேக வேபுடம் போட வெளுத்திடும்
ஆக வெள்வங்க மப்படிப் பற்பமாம் 633

இதற்கு நாலுபங் கேற்கச் சிலாகத்து
மதிக்க வேயரை மாதின் பயத்தினால்
விதிக்க வெண்மையாம் வெந்த புடத்திலே
குதிக்கு மான்கொம்புங் கூட்டிப் புடமிடே 634





இட்டெ டுத்தெலா மொக்கத் தயிர்த்தண்ணீர்
விட்ட ரைத்து விராக னிடைவில்லை
தட்டி வைத்துப் பொடித்துணத் தாகம்போம்
கட்டு நீரழி வோடுநாக் காந்தல்போம் 635

அல்லி யத்தி யதிவிட யங்கொத்த
மல்லி பூளை குமரி பழம்பாசி
வில்வ மாவிரை வெண்குன்றி நெற்பொரி
சொல்லு சுண்டி தொலைக்குநீர்ப் பாட்டையே 636

முத்தக் காசு முசட்டை நறுவிலி
சித்த மட்டி செழுங்கழு நீர்கோட்டம்
சத்தி மாதளை தண்டுள தாமரை
நத்தைச் சூரி நரிப்பன்றி நாவலும் 637

கரிய வேம்பு நிலம்பனை கார்புகா
உரிய சீந்தின் மிளகுள்ளி யோரிதழ்
மரைசெவ் வாழைப்பூ மாற்றுநீர்ப் பாட்டையும்
கரிய வேலுங் கபித்தக் கனியுமே 638

**வாதராட்சதன்**

செம்ப ரைபொடி சேர்சரி பாரதம்
நம்பு கெந்தக நாலூசிக் காந்தமும்
பம்பு நீலப் பிரகம் பகரிரண்
டின்ப மாமரி தார மிரட்டியே 639

சீந்தில் சாரணை செம்முருக் கின்னிலை
போந்த சாற்றினிற் போலொரு நாழிகை
எய்ந்த நாலு மிடையற வேயரை
வாய்ந்த நெல்லுமி யிற்புடம் வைத்திடே 640

எடுத்த பின்னிஞ்சிச் சாற்றி விதையரை
அடுத்த திப்பிலி காயமு மானையின்
வடுத்த விர்ந்த பருப்புஞ் சரிவைத்துக்
கொடுக்கச் சாம மரைத்துக் குளிகையே 641

வாத ராக்கத னென்ற மருந்திது
ஒது சன்னி பதின்மூன் றுதரத்தின்
வாத வாயு முகவாத மைந்தரைப்
போது மாதர் பிணியையும் போக்குமே 642

**வீரபத்திர மாத்திரை**

இதர மேக மிரண்டுநற் கெந்தகம்
முதிர்பெ ருங்காய மூன்றுநேர் வாளமும்
இதுநன் றாய்ச்சுத்தி செய்துபி னிஞ்சியில்
இதம தாக வரையொரு சாமமே 643

கொடிய வேலி வேர் கோழி யவரைச்சா
றிடுக ரத்தரை யிஞ்நியஞ் சாற்றினிற்

கடுகி னேரள வாகக் கடுஞ்சுரம்
விடுமிம் மாத்திரைப் போ்வீர பத்திரன் 644

சுரங்கண் மூன்று சுரசன்னி பாதமும்
ஒருங்கு தீர்க்கு முரைபதி சாரத்தால்
நெருங்கு காய்ச்சலுக் காகாநோ் வாளத்தைப்
பொருந்தி டாவென்னிற் போக்கிடு மத்தையும் 645

பக்க வாதம் பகரண்ட வாதமும்
மிக்க வாதங்க ளெண்பதும் வாயுவும்
மிக்க சூலை வியாதியும்தீர்ந்திட
வைக்க வல்லவ னேசொல் வைத்தியன் 646

**சுரசிந்தாமணி**

இரும்புஞ் செம்பு மிருபங் கொருபங்கே
அரும்பு பாரதங் கெந்தி யதற்கெலாம்
பரம்பி ரட்டிப் படியப் பிரகமாம்
விரும்பு சிந்தூரம் வேர்க்கொம்பு நீரினை 647

விட்ட ரைத்தபின் வெள்ளைப்பா டாணத்தை
எட்டி லொன்று மிதனுடன் சுத்தித்துத்
சிட்ட மாங்கிரி கன்னியுந் தந்தியும்
விட்ட பூமத்தம் வித்துஞ் சரியிடே 648

பாகற் சாற்றிற் குளிகை பணவிடை
தாகக் காய்ச்ச றனின்மல பந்தமும்
போகக் காய்ச்சல்க ணாட்போன பின்கொடு
சோகந் தீர்சுர சிந்தா மணியிதே 649

**சுவர்ணரசம்**

தங்கம் பாரதத் தாலே தகர்ந்துபோம்
அங்க மாக வதுபத்துக் கொன்றுசேர்
பொங்க வெற்றிலைச் சாற்றிற் பொருந்தவே
துங்க வப்பிர கத்தோ டரைத்திடே 650

விசாலை கற்றாழை முண்டி விறல்முருக்
கசைமு ருங்கையை யான்றகரை யின்னிலை
பசையி லாது பதத்தினிற் காயவை
இசைய வேழு தரமெழு நாழிகை 651

இஞ்சிச் சாற்றி லரைத்தெடுத் தேயதைக்
குஞ்ச மாத்திரை மாத்திரை கூறிடும்
நஞ்சை யுண்ட சிவனார் நவின்றது
தஞ்ச மாஞ்சல ரோகமுந் தீர்க்குமே 652

**அகத்தியர்குழம்பு**

இரசம் வெண்கார மிந்துப்புத் திப்பிலி
அரியின் றாரங் கடுக்காய் மனோசிலை





கரிய சீரகங் காய மொருசரி
உரிய வாள மிவைக்கெலா மோர்சரி 653

சுத்தி பண்ணிட வாளத்தைச் சொல்லக்கேள்
மத்தக் காடியி லூறவை வாங்கிலை
பத்தப் பாலினில் வேகவை சுத்தியாம்
வைத்துச் சேரு மருந்துடன் வாளத்தை 654

கச்ச லில்லாக் கருஞ்சீர கத்தையும்
பச்சை பாதி வறுத்தது பாதியாய்
வைச்ச ரைக்க வரைக்க மருந்தெலாம்
இச்சை கூர விளகிக் குழம்பாகும் 655

அகத்தி யன்சொன்ன தாகு மருங்குழம்
பிகத்தி னோய்களெல் லாத்துக்கு மொத்திடும்
மிகுத்தி டாதொர் பணவிடை தின்னலாம்
அகற்று முந்தி மலக்கட் டனைத்தையும் 656

மிஞ்சிக் காணில் விரேசன மாற்றவே
கொஞ்ச மோருந்தண் ணீருங் குடிக்கலாம்
அஞ்ச லன்றி தகத்திய னார்குழம்
புஞ்சி டும்படி யோட்டு மனேகநோய் 657

சுரக்க யங்க டுரத்து நரசிங்கம்
கரைத்துக் கொள்ளதற் காங்குடி நீருடன்
பருத்த சன்னி பயித்திய மாம்பணி
வருக்க நீங்கிட வந்த வுவணமே 658

குன்ம வாத குலகெச கேசரி
சென்ம காச பனிக்குத் தினகரன்
புன்மை வாதமாம் பூளைக்குப் பொங்கழல்
நன்மை யாக நவின்ற குழம்பிதே 659

**விஷத்துக்கு ஏகமூலிகை**

பேய்கொம் மட்டிபேய்ப் பாற்சொற்றி பேய்ப்பீர்க்கு
நோய்க்கி லைக்கள்ளி மேனி பெருமருந்
தாய்க்கு மாடுதின் னாதவுரியுஞ் சின்னியும்
தீர்க்குஞ் சில்விடஞ் செம்பீரச் சாற்றுடன் 660

எருக்குப் பூவந்தி தேங்காய்ப்பா லின்புறா
முருக்க ரைப்பு முருங்கை பருத்திக்காய்
சருக்க ரைமஞ்சட் சாறு சடைச்சிவோ்
திருக்குத் தேள்நட் டுவக்காலி தீர்க்குமே 661

பிரண்டை தும்பை பெருமலை யாமணக்
கிரண்டு நொச்சி யவுரி யிலங்கையும்
திரண்ட கள்ளி சிவதையுத் தாமணி
இரண்டு வேலியு நாய்நரிக் கேற்குமே 662

கச்ச னாரத்தை கான்றையுத் தாமணி
மெச் செலீயா மணக்கம் விரையிலை
பச்சைப் பாலி லரைத்த முருங்கைவேர்
நச்செ லிக்கடி நாடாமற் றீர்க்குமே 663

குப்பை மேனி கொவிழ்ப்பட்டை குண்டையும்
செப்பு சின்னி சிவன்வேம் பனிச்சம்வேர்
அப்பை ராக்கு நிலவாகை யங்கோலம்
ஒப்பில் காணாக் கடியை யொளிக்குமே 664

நாயு ரிஞ்சிநாய் வேளை நரிக்கொன்றை
பேய்ப்ப லவன்பேய் முன்னைபேய்ப் பாகலும்
நாய்க்கொள் கோழி நரிபன்றி பூனைவேர்
காயக்குங் கொன்றை கடிக்கெலா மொக்குமே 665

## சரக்குச்சுத்தி

தெய்விக மென்று முன்னோர்
 கெப்பிய விரசங் கட்குக்
கவ்வையில் லாமற் சேர்ந்த
 கன்மிஷங் கழித்துச் சோத்தால்
செவ்வையாய்ச் சொன்ன வண்ணஞ்
 சித்தியா மென்ற வாற்றால்
இவ்விடத் தரிய சுத்தி
 செய்வது மியம்பா நின்றேன் 666

### இரசசுத்தி

பாரதந் தனக்குச் சுத்தி
 பண்ணிடா தருந்தி னோர்க்கு
மாரண மருந்தாமென்றே
 வாகட மனைத்துஞ் சொல்லும்
சோர்விலாச் சுத்தி யாலே
 யமிர்தமாஞ் சூத ராசன்
சேர்தரு மருந்துக் கெல்லாஞ்
 சித்தியக் கணத்திற் செய்யும் 667

ஆதலாற் கல்வந் தன்னி
 லாறேகாற் பலம தாகும்
சூதரா சனைய கோரஞ்
 சொல்லியே செபித்து வைத்துத்
தாதுவா மஞ்ச டானோர்
 பலஞ்சாம மிட்ட ரைத்தே
ஊதியொட் டடையுஞ் சேர்த்தே
 யுறுசீலைக் குட்பி ழிந்து 668

பிழிந்ததைக் கல்வத் திட்டுப்
 பின்னுஞ்சந் தனம்பி ளிச்சம்
வழிந்தநீர் வார்த்த ரைத்து
 மன்னுசிக் குருவின் பட்டை





இழிந்திடு கார வல்லி
 யிலைநிலப் பனைக்கி ழங்கும்
அழிந்திடா தறைக்கீ ரைச்சா
 றருமுத்தா மணிச்சாற் றோடும் 669

சாற்றிய புரொசம் பட்டை
 கொடுவேலி வேரின் சாற்றில்
ஆற்றரு மழிஞ்சி லின்வே
 ராசம்வே ரரிய சாற்றோ
டேற்றமின் மத்தங் கையான்
 சாரடை யிலைச்சா றீதில்
வீற்றுவீற் றாக ரண்டு
 நாழிகை விரைந்த ரைத்தே 670

அரைத்தபி னந்நீர் காய
 வங்குதித் திடுஞ்சூ தத்தை
மருத்துவர் கருடர் நாகர்
 மான்முத லான தேவர்
சிரத்தினா லேவ ணங்கச்
 சிவனெனச் செப்பும் வேதம்
விரித்திடுஞ் சுத்த சூத
 மேன்மையார் விளம்ப வல்லார் 671

### அரிதாரசுத்தி

விளம்புபொன் னரிதா ரத்தை
 விரிமட லாயு ரித்தே
வளம்பெறு சீலை ரட்டிற்
 கட்டியே தொங்க வைத்துத்
துளங்கவே கமுநீ ராவின்
 மூத்திரஞ் சொரிந்த விக்க
அளந்தநாண் மூன்ற தற்பி
 னரிதாரஞ் சுத்தி யாமே 672

சுத்தித்த வரிதா ரத்தைச்
 சொல்லுபூ நாகத் தோடே
குத்திநீர் வற்ற நன்றாய்க்
 கொதியிட்டுப் பின்ம ருந்தாய்
வைத்துரை முக்காற் சீத
 வாதநோய் வருத்தந் தீரும்
மெத்திய தேனி லிஞ்சிச்
 சாற்றினின் மீட்குஞ் சன்னி 673

### மனோசிலை

மீளவு மனோசிலைக்கு
 மேடமூத் திரத்தி னாண்மூன்
றூறுற முன்போ லாக்க
 வுத்தம சுத்தி யாகும்
கோளுறு கற்ப ரிக்குங்
 கொடுநர மூத்தி ரந்தான்

நாளிதொன் றவிக்கக் கட்டி
நல்லகற் பரிய தாமே 674

### நிமிளை

ஆகவே நிமிளை தன்னை
யரும்பொடி யாக்கிச் சீலை
வாகுற முடிந்து தோலா
யந்திர வகையி னாலே
தாகமில் கழுநீர் வாழைத்
தண்டுநீ ரதுநா ளொன்று
வேகவே யவிக்கச் சுத்தி
நிமிளையு மாகு மன்றே 675

### பொன்னிமிளை எலிப்பரடாணம்

அன்றுமாட் சிகம தாகு
மரியபொன் னிமிளை தன்னைத்
தின்றிடுந் தேனிற் கோமூத்
திரத்தினிற் சுத்தி செய்ய
நன்றதா மெலிப்பா டாண
நல்லசுண் ணாம்பு நீரில்
வென்றிட மீள மீள
விரைந்தவித் திடவி டம்போம் 676

### கெவுரி

பொருந்திடக் கெவுரி யாகும்
பொருவில்பா டாணந் தன்னை
மருத்தினிற் சேர்க்க வேண்டின்
மட்டிச்சுண் ணாம்பு நீரில்
எரிந்திடா தாக்கி யாக்கி
யெலுமிச்சம் பழத்தி லாக்க
விருந்தெனு மருந்திற் சேர்க்க
விடஞ்சிறி தகலு நன்றாம் 677

### பாஷாணங்களுக்குப் பொதுச்சுத்தி வெள்ளை வீரம்

நல்லபா ஷாண மெல்லா
நரிமுற்க மிளகு சாற்றல்
சொல்லுதேன் கருப்பஞ் சாறு
சுண்ணாம்பிற் சுத்தி யாகும்
மெல்லிதாம் வெண்பா டாணம்
மிளகுநீர் கார வல்லீ
எல்லையில் வீரஞ் சுண்ணாம்
பேரண்டத் தெண்ணெய் தன்னால் 678

### லிங்கம் வெண்காரம்

தன்னியந் தன்னாற் சாதி
லிங்கத்தை யரைத்து வைக்க





நிண்ணயஞ் சுத்தி யாகு
நிகர்வன்னச் சாதி லிங்கம்
சொன்னசெம் பீரச் சாற்றிற்
சுத்தியாம் வெண்கா ரத்தை
மன்னுதண் ணீரிற் றோய்த்துப்
வறுத்திடப் பொரிபோ னன்றாம் 679

### பொரிகாரம் மயிற்றுத்தம் வெண்துத்தம்

நற்பொரி காரந் தன்னை
நலமுறப் பொரித்தி டாமல்
சொற்படு பழத்தின் சாற்றிற்
சூழ்ந்தரைத் திடவே சுத்தி
கற்படு மயிற்றுத் தத்தைக்
தயிரினாற் கலந்த ரைக்க
அற்படு வெண்டுத் தத்துக்
கருங்கற்சுண் ணாம்புத் தண்ணீர் 680

### தொட்டி சலாசத்து

தண்ணறுந் தொட்டி தன்னைச்
சாரவே முடித்து தூக்கி
வெண்பசு மூத்தி ரத்தில்
விரைத்தவித் திடநாண் மூன்று
தண்சிலா சத்துத் தும்பைச்
சாற்றினா லரைத்துக் காயப்
பண்ணலாங் கர்ப்பூ ரக்கற்
பதுமகந் தத்தாற் சுத்தி 681

### போளம் துரிசு

சுத்தியாங் கரிய போளஞ்
சொல்பழச் சாற்று நீரால்
வித்திடா வெண்போ ளத்தை
விட்டரை கழுநீர் கன்னல்
வைத்திடுந் துரிசுக் கெண்ணெய்
வார்த்துறக் கொதிக்க வைத்தே
மெத்தவுண் மருந்துக் கானான்
மிகுத்தரை பழச்சாற் றாலே 682

### கெந்தகம்

பழுதிலாக் கரண்டி தன்னிற்
பலமொன்று கெந்த கத்தை
நழுவிடா துரக்கக் குத்தி
நல்லவா மணக்கி ணெண்ணெய்
தழுவுறச் சாய்க்க முக்காற்
சாகத்திற் பாலிற் சுத்தி
விழுமமாய்ச் சுத்தி யாக்கில்
வெல்லுநோ யல்ல றீர்க்கும் 683

### சவுக்காரம் முதலியன

தீர்க்கிலாச் சவுக்கா ரத்திற்
சேர்ந்திடு மெண்ணெய்க் குற்றம்
மாற்றிடு மாறு மாதக்
காடியான் மத்தித் தாட்டில்
ஆற்றிடா யெவச்சா ராதி
யாகிய தார னாளம்
சேர்த்திடிற் சுத்தி யாகும்
தின்றிடு மருந்துக் காமே 684

ஆமிந்தக் காடி தன்னா
லரியகா ரங்க ளெல்லாம்
தோமறச் சுத்தி யாகுந்
தோலாயந் திரத்தி லேனும்
காமுறச் சமைத்திட் டாலுங்
கலந்தரைத் தாத பத்தில்
ஏமுறக் காய்ந்திட் டாலுஞ்
சேர்க்கலா மருந்துக் கெல்லாம் 685

### நாபி

ஆகிய நாபி தன்னை
யரும்பொடி யாக வெட்டி
வேகம்போங் கோச லத்தில்
விரைந்திரு நாண்மூன் றூற
வாகதாய் வெய்யிற் காய
வைத்திடிற் சுத்தி யாகும்
ஏகவெள் ளாட்டு நீர்க்கு
மிப்படிச் சுத்தி யாமே 686

### உப்பைந்து

மேவிய வுப்பைந் துக்குள்
விரிகட லுவர்வ றுக்கத்
தாவது நாலுப் புக்குத்
தயிர்மோர்கோச் சாகத் தின்னீர்
பாவனை பண்ணச் சுத்தி
படுமதைப் பாகஞ் செய்யும்
நோவறு மலுந்திற் கூட்ட
நூதனக் குணமுண்டாமே 687

### குக்கில் சேங்கொட்டை பூமத்தைவிரை

குக்கிலைச் சுத்தி செய்யக்
கூட்டுதிப் பிலிக்க ஷாயம்
துய்க்கலாங் குண்டைக் கெள்ளுத்
துத்தூரக் கொட்டை தன்னை
நற்கிளி யெலுமிச் சஞ்சா
றதனினானா ளொன்ற தூற





வைக்கவே சுத்தி மற்றும்
வனசத்தின் வளையச் சாறே 688

### எட்டிவிதை

சார்பிலா வெட்டிக் கொட்டை
தனைவெட்டிச் சிறிய கீரை
வேரினீ ரூற வைத்து
வேகவை சமூலச் சாற்றில்
சாரமும் முறைய வித்தாற்
சாதன மாகுங் காஞ்சி
சேரலா மருந்துக் கெல்லாந்
தீர்த்திடுங் குட்டந் தன்னை 689

### நேர்வாளம்

தன்னிதாய் நேர்வா ளத்தைச்
சாருந்தோ லுடைத்துத் தள்ளி
மன்னிய பசுச்சா ணாக
மருவிட வவித்துக் காய்ந்து
பின்மடற் கற்றா ழுஞ்சா
றதன்பின்பு வெல்ல நீரில
துன்னுபா னெய்யி லாக்கிற்
சுத்தியாங் கழுவிக் கொள்ளே 690

கோதிலா வாளந் தன்னாற்
கூடிய மருந்து நன்றாம்
ஆதலாற் சுத்தி தானே
யதிகமா மனைத்தி னுக்கும்
சோதனை பண்ணிக் கண்டு
சொன்முறை வழாமற் செய்யில்
பூதலந் தன்னில் வேறு
புண்ணிய மிதன்மே லுண்டோ 691

### தாம்பிரம்

மேதகு தாம்பி ரத்தை
மெல்லிய தகடாய்த் தட்டிச்
சேதமி லுலைமு கத்திற
சிவந்திடக் காய்ச்சிக் காய்ச்சிக்
கோதிலா வெழுகாற் கொள்ளை
யவித்தநீர் குளிரத் தோய்த்தே
ஓதகற் றாழுஞ் சாறு
புளிப்பிலை புளித்த மோரே 692

மோரினி லாற்றி யிந்த
முறைமையாற் பொன்னாங் காணி
நீரினி லாற்ற வாற்ற
நிமலமாந் தாம்பி ரந்தான்
சேரதன் பின்பு பற்பஞ்
சிந்தூரஞ் செய்ய நன்றாம்

ஆரியப் பிடக நூலி
லறைந்திடு முரையி தாமே 693

## இரும்பு

அரத்தினா லராத்தி ரும்பி
னரியதூ ளதனை யள்ளி
அரைத்திடு மெள்ளி லெண்ணெ
யதிலவித் தலம்பிப் பின்பு
நருக்கிய கருவேற் பட்டை
நீரினி லவித்து நன்றாய்
வருத்தம்போஞ் சாமங் காய
வைத்திடிற் சுத்தி யாமே 694

## வங்கம் நாகம் முதலியன

அயமலா லங்க நாக
மாதிய தாது வெல்லாம்
நியமமா யுருக்கிச் சாய்க்க
வெண்ணெயி னிறைந்த மோரில்
பயமிலாக் காடி யாட்டின்
பால்சல மிவைக ளொன்றில்
நயனுறு பொன்வெள் ளிக்கு
நற்படஞ் சுத்தி தானே 695

## சுத்திவேண்டாதன

சுத்திபண் ணாமற் சேர்த்துத்
துர்ய்த்திடு மருந்து முண்டால்
வித்தகத் ததவே தென்னில்
வெம்பணி விரிய னாதி
குத்திய வுடத்துக் கெல்லாங்
கூடிய மருந்து மற்றும்
நத்தரி திராவ கங்க
ளாதிக்கு நன்ற சுத்தம் 696

சரக்குச்சுத்திமுற்றும்.

●

## அண்டவாதமுதலியவற்றிற்கு எண்ணெய்

பேரா மணக்கி னெண்ணெயுடன்
பிரமி கழற்சி முடக்கொற்றான்
காரார் மத்தம் பெருநெரிஞ்சி
கடிய பிரண்டை காக்குறட்டான்
நீரா முள்ளி நிலவாகை
நீலி வீழி நிகழ்மேனி
ஊரார் கையா னின்பூற
லொன்றா யிடித்துப் பிழிசாறாய் 697





சாற்றி லரைக்குஞ் சரக்கொடுவேர்
சாதி லிங்கஞ் சதகுப்பை
காற்றம் பெரிதா முக்காய
நல்ல கடுக்கா யுரொகிணியும்
சாற்றுங் கழற்சி சதாவேரி
தகரந் தேற்றா மரமஞசள்
ஊற்ற மிகுத்த வெண்கார
முயர்முக் கடுகோ டுறவரையே 698

அரைக்கு மிவைக ளரைக்கழஞ்சா
மானை குதிரைக் கிழங்கினுடன்
எருக்கு வேலிப் பருத்தியுட
னிரண்டு நெரிஞ்சி யேரண்டம்
கருக்கு காய்ச்சி கவிழ்தும்பை
கான்றை வேளை கழற்சியின்வேர்
பெருக்குஞ் சிவனார் பெருமருந்து
பெருந்தேங் காய்ப்பால் பிழிந்துவிடே 699

விட்டே யெரித்து வடித்தவெண்ணெய்
விரதம் போலுப் பிலிபிடித்து
மட்டாய் வயிறு கழிந்திடவு
மாத மொருநா ளாழாக்கு
வட்டே குடிக்கிற் பெரும்பீச
மிகமு மண்ட வாதமுடன்
எட்டாங் குன்மஞ் சூதகக்கட்
டெல்லாந் தீர்க்கு மென்றுரையே 700

உக்கிரகாண்டம் நைமித்தியம் முற்றும்.

●

## தேவவைத்தியம்

தேவர் சொன்ன வைத்தியஞ் செய்முறை
மூவ ரிந்திர ராதியர் முக்குணம்
தாவ ருஞ்சித்தர் தானவ ராதியோர்
ஏவ ருக்கு மிதுபெறு மேற்றமே 701

## சுராங்குசம்

பச்சை நாவி பசுவின் சலத்தினில்
மெச்ச மூன்றுநாண் மேவ வவித்தபின்
செச்சை மூத்திரந் தன்னிற் கொதியிட்டு
வைச்சுக் கொண்டபின் வைக்கு மருந்துகேள் 702

இரசங் கெந்தக நேர்வாள மீதெலாம்
சரிய தாக வெருக்கம்வேர்ச் சாற்றினில்
அரையி ருபத்தி ரண்டரை நாழிகை
பருவ மாயதைக் கட்டி யவித்திடே 703

எருக்கம் வேரிட் டவித்த கஷாயத்தில்
பெருக்க விட்டொரு சாம மவித்தபின்

இருக்கக் குன்றி யவாவு குளிகையீ
துரைக்கக் காய்ச்ச புரத்துமோ ரங்குசம் 704

வாத வன்சுரம் வாய்வலி சன்னிகள்
காது கம்பனங் கைகா லிழும்புடன்
ஓது நாவசை யாவலி யோட்டுமால்
சாதித் துண்ண வனுபானந் தன்னிலே 705

### விசுவம்பரம்

சுத்த நாபி யரிதாரஞ் சூதமும்
மெத்து மப்பிர கஞ்சாதி லிங்கமும்
வைத்த ரைக்கச் செருப்படிச் சாறுவார்
ஒத்த வில்லை யுலர்த்திடு மூன்றுநாள் 706

உமிப்பு டம்மிட் டெடுத்ததை யூறுதேன்
சமுத்தி ரத்தின்மீ னெண்ணெப்பித் தாகுதல்
அமைத்த ரைத்துக் குழம்பிரும் பாரவை
நிமித்த மாஞ்சுர சன்னிக ணீக்குமே 707

விசுவங் காக்கும் விரிகுழம் பீதொன்றால்
அசுவ தேவ ரளித்தன ராகுயிர்
நசியம் பானங் கலிங்கமு நண்ணவே
பசையில் சன்னி பதின்மூன்றுந் தீருமே 708

வாத பித்த கபத்தில் வருஞ்சுரம்
பேதந் தீர்க்கு மனுபான பேதத்தால்
சீதரஞ்சொல் செயவிசு வம்பரம்
ஈது வைத்திரா னென்ன வைத்தியன் 709

### காருடம்

இரதங் கெந்தக மிந்துப் பிலிங்கமும்
மதுரஞ் சுக்கு மிளகு மனோசிலை
சிதைவி லப்பிர கந்திப்பிலி யக்கறா
கதகந்திப்பிலி மூலங் கராம்புடன் 710

சேர நன்றாய்ச் செருப்படிச் சாற்றினால்
சார விட்டரை சாம முலர்ந்தபின்
போர்செய் குக்குடம் போலே புடமிடு
காரு முந்தள வுண்ணித காருடம் 711

விடத்துக் கேற்ற வனுபானம் வீக்கமும்
தடித்த கெப் டன் றாக மினநீரில்
குடிக்க விக்கல் குடல்வலி குன்மமும்
நடுக்க னாலா முறைச்சுரந் தீர்க்குமே 712

### திரிமூர்த்திரசம்

வாளங் கெந்தகம் பாரதம் வைத்தரை
நாள ரைக்கரை நல்லர சம்பட்டை





மீளு நீரின் மிகத்தொங்க விட்டெரி
காளந் தீர்க்குங் கவிக்கோ ளுரைத்ததே 713

தொந்திக் கும்விட தோடஞ் சுரமெலாம்
நித்தித் தோட்டு நிலைபர மீதொன்று
மந்த வாந்தி மலபேதந் தீர்த்திடும்
இந்த மாத்திரை யேற்குஞ் கரத்துக்கே 713

### சுரகேசரி

கடுகு ரோகிணி கெந்தி கடுகமூன்
றட்கு மப்பிர கத்தோ டரிதாரம்
தொடரு மஞ்சுவேர் சொல்லுங் கஷாயத்தில்
கடுக வேயரை காய வறுத்தபின் 715

குன்றி மானக் கொடுக்க விடுஞ்சுரம்
நன்று பித்த நடுக்க நற்சீரகம்
துன்று வாந்திக்குச் சொல்பசு மோரினில்
நன்று சேட மிருமனல் லாட்டுப்பால் 716

### மேகசுரத்துக்குளிகை

சாதி லிங்கம தொன்றுக்குச் சாருநால்
ஏத மில்சுக்குத் திப்பிலி யின்கறி
கோதி லாம லரைகொடு வேலிவேர்
ஒது நீரி லுலர்த்திக் குளிகைசெய் 717

மேகக் காய்ச்சல் விடுங்குன்றி மேதிமோர்
தாகந் தீர்க்குந் தயிர்த்தண்ணீ ரிஞ்சிநீர்
ஆகு மத்தி சுரத்துக்கு மாவிரை
பாசம் பன்னிரு நாளுணப் பற்றறும் 718

### சிவகாமசுந்தரம்

ஒன்று கெந்தகந் தூத்த மொருமூன்று
நன்று வெண்கார நாலு சதுர்ச்சாதம்
துன்று சாரடை வேர்ச்சாறு சுத்திபாம்
என்று ரைத்திடு வீக்கநீர் வாங்குமே 719

ஒட்டுக் காய்ச்ச லுவர்நீர்க் கடுப்புடல்
இட்ட வாயு வெரிகுன்ம மீதெலாம்
விட்டு நீங்கும் விலாவலி சூதகம்
பட்டு டற்கட்டும் பற்றறு மென்னவே 720

ஈது சத்தி யியம்பிய மாத்திரை
தீதி லாத சிவகாம சுந்தரம்
மாதர் கொர்ப்பம் வளர்விக்கு மாதலால்
ஓதி லீதொன் றுயிருந் கமுதமே 721

### நாராயணிரசம்

இந்த வண்ண மரிதார மிட்டிதில்
சுந்த ரஞ்செய் துளபநீ ராலரை
நந்த லிலலா நாராய ணீசரம
சிந்த நீக்கிடுஞ் சேட சுரமெலாம் 722

### இரணியகற்பம்

பொன்னும் வெள்ளி புகல்சுத்தத் தாம்பிரம்
இன்ன நீர்க்கு மிரச மிரட்டியே
சொன்ன தற்குப் பவள மதிகமாம்
மன்னுங் கெந்தி மனோசிலை மால்தாரம் 723

எட்டி லொன்றித னோடிடு ரோகணி
விட்ட ரைத்திடு வெள்ளாட்டின் பாலினால்
சட்டி வாலுகத் திட்டெரி சாமநால்
இட்ட மாமி திரணிய கற்பமே 724

மூன்று தோடமு மோடு முடக்கம்போம்
தோன்று சன்னி சுரதோட துர்க்குணம்
ஏன்ற வீளை யிரும லெழுங்கயம்
ஆன்ற நெல்லிடை யார வகலுமே 725

### கமலாசனம்

போகக் கட்டிபின் போடுபொற் சூரணம்
லோகந் தாம்பிர மப்பிரகம் லோத்திரம்
நாக சிந்துர நாலு மொருசரி
பாக நாலுக் கதிகமாம் பாரதம்
வேக வேப்பிலைச் சாறவிட் டேயரை
சாகங் காயவை சாரத்தூ ளாகவே 726

அரைத்த பின்பித னோடிர தத்தைக்
கரைத்த காசியிற் குப்பியிற் கண்டடை
நிரைத்த வாலுகத் திட்டெரி நீடுநாள்
உரைத்த பேர்கம லாசன மென்றுரை 727

குன்மங் குட்டங் குடல்வாதம் வீக்கமும்
சென்ம வாதமுஞ் சேடமுந் தீர்த்திடும்
முன்னு ரோகமெல் லாத்துக்கு மொன்றதே
கன்ம பாக மெனப்பிணி தீர்க்குமே 728

### பீதாமகம்

பழைய கிட்ட முலொகத்திற் கத்திலொன்
றழலு மப்ரக மிலிங்க மரிதாரம்
கழலெ ருக்கம்பால் வேர்ச்சாறு சூழ்ந்தரை
நீழலி னூறுநா ணீடி யரைத்தபின் 729

மேருப் போலப் புடமிட்டு மேதினிக்
காரு நன்மருந் தாகுமி தொன்றுகாண்





பேரி தற்குப் பிதாமக மென்றுரை
தீரு நோய்பல செய்யனு பானத்தால் 730

### பாரதி

பார தத்துட னப்பிரக பற்பமும்
சாருந் தாமிரம் வெள்ளை சரிசிலை
நேரு மால்தார நீடுஞ்சம் பீரச்சா
றார வேயரை யார வசம்புநீர் 731

கோவின் ரோசினை குந்திருக் கம்பிசின்
மேவு திப்பிலி வெண்காரச் சூரணம்
தேவு மாங்கடுக் காய்நீரிற் சேர்த்தரை
தாவு திப்பிலி யக்கராத் தன்னுடன் 732

மிளகு மாத்திரை மேதித் தயிரினால்
இளகி டாம லரைத்துண்டை யிட்டுவை
துளபச் சாற்றிடிற் சொற்பிழை தீர்த்திடும்
பளித மாகிய பாரதி மாத்திரை 733

இஞ்சி வாத மகற்று மிளநீரில்
மிஞ்சு பித்தம் விலக்கு மிளிர்சுக்குத்
தஞ்ச மில்சுர சன்னி பயித்தியம்
அஞ்ச வோட்டு மருமருந் தின்வகை 734

கரிய குட்டங் கசஞ்சல ரோகமும்
பிரிவி லாத பிரமேகம் பீனிசம்
தெரிவி லாமலுட் கண்டத்திற் சேரும்புண்
அரிய குன்மமு மாற்று மருந்திதே 735

### கலியாணி

சங்கு கெந்தக முப்பொடு தாளகம்
பொங்கு சாராயம் போதவிட் டேயவி
அங்க மாக வரைபழச் சாற்றினால்
பங்கு சாதிக்காய் மத்த மவின்பலம் 736

நடுக்கற் காய்ச்ச நரம்பிழுப் பாதியாம்
கடுப்புத் தாகக் களை சோரும் வாதமும்
அடுக்கு மந்த வசதியிலா வலி
விடுக்கு மேகலி யாண வினோதமே 737

### சரபம்

கரிய நாவி சிவஞ்சத்தி காரமும்
அரிய லிங்க மரிதார மப்பிரகம்
உரிய கன்மத மொண்பெருங் காயமும்
எரிய வைத்தெடு வெம்மது நீரிலே 738

வேலி வேரவி நீரால் விரைந்தரை
நாலு சாமங் குளிகைநற் குன்றியாம்

சீத மில்சனி யந்தகஞ் சீதளம்
நீல னாஞ்சிங்க நீக்குஞ் சரபமே 739

**வீரபத்திரன்**

எட்டிக் கொட்டை யிருசிவ சத்தியும்
தொட்டி நாபிவெண் காரந் துரிசுடன்
கட்டு மிந்துப்புக் கலநா ரதின்மதம்
இட்ட காய மிருங்கொடு வேலிவேர் 740

அவுரிச் சாற்றி லரையறு சாமமே
சிவனைப் பாசு பதமனுச் செப்பியே
அவமி லாத வடுகர் மனுவுடன்
நவமி தாகிய நல்வீர பத்திரம் 741

கண்ட குச்சி கனரத்த விட்டியும்
சண்ட கெம்பீர சன்னி குத்தண்றிநீர்
கொண்டு ரைத்துக் கொதம்பாய் பணவிடை
அண்டி டாம லகன்றிடுஞ் சன்னியே 742

**செயவிக்கிரமம்**

சூத நாபியுஞ் சொல்லரி தாரமும்
சாதி லிங்கமுந் தாம்பிர முஞ்சரி
பாதி கர்ப்புரம் பங்கொன்று நாகமும்
காது காந்தங் கரும்பொன் னிரண்டித்து
வாதி யாதரை வண்டிலைச் சாற்றினால் 743

குக்கு டப்புட மிட்டிதிற் கூட்டுவாய்
அக்கரா விந்து வஞ்சனக் கல்லுடன்
சுக்குத் திப்பிலி சொன்மிள கிட்டரை
திக்க டங்குஞ் செயவிக் கிரமமே 744

தாந்தி ரீகமுந் தண்டுமுன் மாதமும்
மாந்த ரஞ்சு மகோதர வீக்கமும்
சாந்தி யில்லா தலட்டிய சன்னியும்
தேய்ந்தி டுந்திரி விக்கிர மார்க்கனே 745

**உருத்திரம்**

தாள கஞ்சிவஞ் சத்தி மனோசிலை
மீளுங் காரம் விடம்விண்டு நாகமும்
நாளி ரண்டரை நற்பழச் சாற்றினால்
மீளக் காடிக்குண் மீட்டித்தீ மூட்டியே 746

எரித்தி றக்கி யிதில்வீரம் பூரமும்
வருத்தி யேயரை வன்னிப் புடமிட்டுத்
திருத்தி யிஞ்சிநீர் சேர்த்துக் குளிகைசெய்
அருத்து மெள்ளிடை யந்தகன் றீக்குமே 747

ஈன்ற மாதர்க் கெழும்வலி யேர்ப்புடன்
தோன்று புண்வலி தோலாத வில்வலி
தான்றதாட் கட்டுப் கட்டிப்பற் கிட்டியே
ஊன்று சன்னி யொழிக்கு முருத்திரம் 748





**வாமனாவதாரம்**

சத்தி சம்பு சரோருகன் றாம்பிரம்
பத்துக் கொன்றிடு பாடாண வெள்ளையே
வைத்த ரைத்திடு வன்னிவேர் நீரினால்
மெத்த வேகவை வேலிவேர் நீர்க்குளே 749

அந்த கத்தோ டதோமுக சன்னிக்கும்
எந்த நோய்க்கு மிடுவாய் கடுகிடை
சிந்தை விப்ரமஞ் செய்கறை யிட்டியும்
பிந்த வோட்டும் அமரும்பூத வாமனம் 750

**விசய வைரவம்**

ஈசன் வீரிய நாபி யிருவங்கம்
மோசத் தாமிர மப்ரக மோரயம்
ஆசி னாக மரைகடு நீர்த்தினம்
கூசி டாத புடங்குக் குடமிட்டே 751

எடுத்தெ டுத்தரை யெண்புட மானபின்
கொடுக்கச் சன்னி பதின்மூன்றுங் கும்பிடும்
விடுக்கு மீது விசய வயிரவம்
தடுக்கு மாருயிர் சாகாமற் சன்னியில் 752

கருப்பஞ் சாற்றிடக் கண்டகுச் சீதம்போம்
சுரும்புண் டேனிற் றொலையு மதோமுகன்
குரும்பைத் தெங்கிநீர் கொள்ளப்போ மந்தகன்
விரும்பு மிஞ்சிநீர் மற்றதை மீட்டுமே 753

தோட மேழுக்கும் வெவ்வேறு சொன்மருந்
தோடு முக்கா லுரைத்திட வோடுமென்
றாடு ருத்திர னன்பர்க் கருளிய
தேடு மீதொன்றுந் தீர்த்திடு நோயெலாம் 754

**காளவைரவம்**

லோகந் தாமிரங் காந்த மொருசரி
தாகம் பாரதந் தானதிற் பாதிசேர்
வேக வையைஞ்சு வேரிநீர் சாரங்கள்
ஆகு மைஞ்சு மதிற்சேர்த் தரைத்திடே 755

மாட மாத்திரை மாத்திரை யொன்றினால்
ஓடுந் திப்பிலி நீரினி லுத்தாகன்
நாடுஞ் சந்திகன் றேனி லகன்றிடும்
காடு காள்சொன்ன காளி வைரவம் 756

**வைரவம்**

தாமி ரத்திற் சரியாகக் கெந்தகம்
வேமி திற்றயிர் வேளைநீர் விட்டரை

போம லம்புட மிட்டபின் போடிந்து
தோமில் பாரதஞ் சுத்தித்து மத்தியே 757

முக்க னிக்குடி நீரின் முதிர்ந்தரை
நிக்க வேயிள நீரினி னெல்லிடை
தூய்க்க விப்பிர முத்தாகமுந் தோமறும்
வைக்க வீது வைரவன் சொன்னதே 758

பித்தம் வாந்திக்கும் பீனிச மீழைபோம்
சத்தி குன்மந் தவிருந் தலைவலி
மெத்தின் மோருண்ண வீக்கமும் போகுமே
கத்தி யம்புளி பாகற்காய் தள்ளவே 759

வாயு வுக்கெலாம் வைக்கக் கடுமுன்றில்
ஓயு மந்த மிளகுநீ ரோடுண
நாயு ருஞ்சியி னண்ணதி சாரம்போம்
மாய வன்சுர மாற்று மவுரிவேர் 760

இந்த வண்ண மனுபான மேற்றிடில்
அந்த வண்ண மகற்றிட நோயெலாம்
சிந்தி யாமற் செலுத்தனு பானத்தால்
இந்த லோகத்துக் கீதொன் றமிர்தமே 761

**ஆனந்தவைரவம்**

வங்க மோடு வளர்நாகந் தாம்பிரம்
சங்கு வெண்காரஞ் சாருங் கருவங்கம்
இங்கு லீக மிருப்பு மனோசிலை
பொங்கு பாரதங் கெந்தகம் பொன்மகள் 762

ஈதெல் லாம்பொடி செய்திட்டுக் கல்வத்தில்
தாது மாதளை தான்கரு வேலிநீர்
ஓதெ லுமிச்சை யொண்புளி யம்பழம்
சீத ளைபழஞ் சேர்த்தரை நாலுநாள் 763

வில்லை தட்டியே வெய்யிலிற் காய்ந்தபின்
வெல்லெ ருக்கம்பால் வீரமேற் பூசியே
அல்ல கற்குள்வை நாலுமண் சீலைசெய்
புல்ல வேபுட மேருப்போற் போட்டிடே 764

எடுத்த பற்பத்தி லெட்டொன்று நிர்விடம்
அடுத்த நாபி யதிலிட் டரைத்திடு
கடுக்காய் தான்றி கருநெல்லிக் காயினீர்
விடுத்த ரைமுக் கடுகநீர் விட்டரை 765

நல்ல பாம்பி னதுபித்துச் சேர்த்திடில்
வல்லி டத்தால் மரித்து துயிர்த்திடும்
கொல்லு மோவிட மிப்பேரைக் கூறினும்
அல்ல றீர்க்குமா னந்த வயிரவம் 766





தோட மேழு தொடர்சன்னி யேழாறு
தேடு காய்ச்சல் செறிகுன்ம மெட்டுடன்
சேட மைம்பது சேர்வாத மெண்பதும்
ஒடு மானந்த வைரவ மொன்றினால் 767

சீத காத்திர மென்றிடு சன்னிக்கும்
ஓது மிம்மருந் துத்தம மாகிலுண்
மாதர் நெஞ்சடை வாத மயக்கமும்
தீதி லாம லகற்றிடுந் திண்ணமே 768

**சங்காரவைரவம்**

எவத்திற் சார மிதிற்சத்தி சாரமும்
நவத்திற் சாரமு நல்லவுப் பைந்துடன்
அவமி றாமிரத் தாக்கிய பம்பமும்
சுவைசெய் சூதமுந் தொந்திபத் துக்கரை 769

வெள்ளெ ருக்கம்பால் விட்டரை நாழியொன்
றுள்ளு றக்கட்டி யவ்வேரி னாலரைத்
தெள்ளு மாத்திர மீந்திடத் தாந்திரம்
தள்ளு மீதொரு சங்கார வைரவம் 770

நிறுவி டத்தொடு நேர்வாள மிட்டிதில்
சிறுப யற்றள வோாவேளை தின்னவே
உறுவ யிற்று வலிக்கொரு மூன்றுநாள்
மறுவில் சங்கார வைரவம் மாற்றுமே 771

சங்க ணத்திற் சகத்திர வேதியும்
வங் பற்பமும் வைத்து வைரவம்
திங்க ளீரடை யோடு செறிசிலை
பங்க மாங்கள்ளிச் சாற்றிற் பரிந்திடே 772

**சித்திரபானு**

தாம்பி ரத்தினிற் சங்கமு *லிங்கமும்
பாம்பும் பற்பம தற்குப் பழத்தினீர்
தேம்ப விட்டுத் திரிகடு கிட்டரை
ஒம்பு மந்தத்தை யோட்டு மொருகுன்றி 773

வாயு விக்கல் மலசல பந்தமும்
ஒய்வி லாத வுவாந்தி யுதரத்திற்
காயும் வாயு விரைச்சல் கழிச்சலும்
தீயுஞ் சித்திர பானுக் குளிகைக்கே 774

**சீதசந்திரன்**

தொந்தி வங்கமுஞ் சூதமு நாகமும்
நிந்தி யாதண்டத் தோடுட னேகவே
முந்து சாமமோர் மூன்றரை யுப்பிலி
தந்த நீரினிற் றட்டிப் புடமிடே 775

* வங்கமும் - என்றும் பாடம்.

வெண்சி லாசித்து வேறே புடமிட்டுத்
தண்க லைக்கொம்பு சந்தனம் போலரை
பண்மு லைப்பாலி லப்பிரக பற்பமும்
உண்ண முத்தக்கா சொன்பது பங்குவை 776

வைத்த ரைத்ததில் வண்சீந்திற் சர்க்கரை
பத்துப் பங்கதிற் பால்வார்த் தொருதினம்
துத்தி யாவிரை சொல்லில் வம்பிசின்
உய்த்துக் காய்ச்சுநீ ராலொரு நாளரை 777

இப்படிப்பதத் தோடே யரைத்தபின்
தப்பில் தாளிச பத்திரி சார்ந்தரை
ஒப்பி லோர்கழஞ் சோர்வேளை தின்னவே
செப்பி டாவெகு மூத்திரந் தீருமே 778

வடக மீது வளர்சீத வங்கமாம்
உடல்வ ளர்க்கு மொளிர்சீத சந்திரன்
கடலிற் போடினுங் கட்டுநீர்ப் பாய்ச்சலை
அடரு நீரதி சாரமுந் தீர்க்குமே 779

எலும்பு ருக்கி பெழுங்கா வற்றுநோய்
விலங்க நாளும் விடாச்சுரந் தாகமும்
துலங்க நீக்கிடுஞ் சொல்லனு பானத்தால்
கலங்கு மேகம் பெரும்பாடுங் கட்டுமே 780

### அப்பிரகசிந்தூரம்

அப்பிர கத்துக் கருஞ்சத்தி தானியம்
மெய்ப்ப டத்தினிற் றோய்க்க விழுந்ததை
ஒப்பில் காடியா லூறிய வெண்ணெய்போல்
செப்பின் மூடியே செய்யுட மேருவே 781

அரியின் றார மதிலாறி லொன்றுற
எருக்கம் பாலிட் டிளக வரைத்ததை
நெருப்பி னிற்புட மானபின் னீறிடும்
உருக்க வேண்டில்வன் மீகத்தே னுற்றரை 782

சிந்து ரத்திடச் சேரும்வெண் காரமும்
அந்தி மல்லிகை யாலம் விழுதினீர்
வெந்தி டப்புடம் வேண்டின்மென் மேலிடு
சிந்து ரிக்குஞ் சிறுபுள் ளடியினும் 783

**உக்கிரகாண்டம் முற்றிற்று.**





## சௌமியகாண்டம்

திருமகள் கணவ னாதி
தேவர்க ளுய்ய முன்னாட்
பரவையி லெழுந்த நஞ்சைப்
பாலென நுர்ந்தோன் றந்த
கரிமுகன் றன்னை யுன்னிக்
கற்பவா கடத்திற் சொன்ன
அருமருந் துரைக்குஞ் சௌமிய
காண்டத்தை யறைகின் றேனே 1

உக்கிர காண்டந் தன்னி
லோதிய மூலி தானே
பக்குவந் தன்னாற் சௌமியம்
படுப்பய னேயா னாற்போல்
அக்குண மறிந்த வீச
னருளுமா ரியத்தின் வண்ணம்
நித்தமு மருந்து செய்யு
மிலேகிய மாதி தன்னை
மிக்கசெந் தமிழி னூலால்
வெளிற்றுரை யாகச் சொல்வேன் 2

## சௌமியத்தினியல்பு

தூமமு நசியந் தானுஞ்
சொன்னவஞ் சனமு முக்கிர
மாமெனு மாயுள் வேத
மதனுளே சவுமி யந்தான்
நாமமூன் றாகு நான
பானலே பனமா மத்தைத்
தோமறத் தெரிந்து செய்யிற்
றொலைந்திடு நோய்க ளெல்லாம் 3

சிசுக்கணோ யுறினுங் கொப்பத்
தெரிவைநோ யுறினும் புல்லார்
பசுக்கணோ யறினும் காளைப்
பருவம்போய்க் காலைக் கையை
அசைக்கவும் வலிமை யில்லா
வறமுதிர் விருத்த ருக்கும்
பொசப்பிலா தொடுங்கி னோர்க்கும்
புரிவது சவுமி யந்தான் 4

துயித்திடும் விருப்பந் தோன்றத்
துய்னடைக் கிடையூ றின்றிப்
பத்திய மற்ப மாகப்
பருவர றோன்றா வண்ணம்
வித்தக நிருபர் தாமும்
விரும்பு நன்மருந்தா மன்றே 5

**சுகவிரேசன மூலிகைப்பொது**

சுகவிரே சனத்துக் கென்று
சொல்லுமூ லிகைக டுக்காய்
அகமுடக் கொன்றான் பாக
லகத்திபொற் கொன்றை கையான்
தகரநற் பிரமி தான்றி
தண்ணிலா வாரை நெல்லி
மிகைபடு கள்ளி தும்பி
மேனியா மணக்கின் பேதம் 6

கறுத்தப்பூக் காக்க றட்டான்
கடுகுரோ கணிகற் றாழை
மறுப்படா மணலி வேலிப்
பருத்திப்பூ மணித்தக் காளி
நறும்பிசின் சிவதை நாக
வல்லிமூக் குறட்டை கின்னி
சிறுகுமிழ் களிப்பாக் கிந்து
சீயக்காய் பேதிக் காயே 7

## மலக்கட்டுக்கு கற்கம்

கடுக்களிப் பாக்குச் சுக்குக்
கருதுமிந் துப்பு நேராய்
அடுத்திடு நாலு மூன்று
மிரண்டொன்று மளவாய்ச் சேர்த்து
விடுத்திடுங் கழுநீர் தன்னில்
விரைந்தரைத் துண்பீ ராகில்
கடுப்புடன் மலக்கட் டெல்லாங்
கழிந்துடற் சுத்தியாமே 8

**சாறு**

சிவதைசா ரடைக்கி ழங்கு
சேர்த்தரை மிளகு மஞ்சள்
நவமிலாப் புளிக ரைத்து
நல்லவிந் துப்பப் போட்டே
அவமிலாக் சடுகிங் குள்ளி
யாமணக் கெண்ணெய் தாளித்
துவருறு சாறு காய்ச்சி
யுண்ணவே மலங்கள் போமே 9

**பித்தபேதி**

பித்தத்தான் மலத்தைக் கட்டிற்
பெருங்கடுக் காயோ டிந்துப்
புத்தம மகத்தி நெல்லி
யார்க்குடன் பிரமி சுக்கும்
ஒத்திடச் சேர்த்து நீர்நா
லொன்றுறக் காய்ச்சி வாங்கிக்





குத்தியா மணக்கி னெண்ணெய்
குடித்திடக் கழியு மன்றே 10

**காமாலைவீக்கத்தின் மலக்கட்டுக்கு**

காமாலை தன்னால் வீங்கிக்
கனத்துடன் மலமுங் கட்டில்
தோமறு சீயாக் காயைத்
தூள்பண்ணி நீரிற் போட்டுச்
சாமமூன் றாத பத்திற்
சார்ந்திட வூற வைத்துக்
காமுறு வெல்லஞ் சேர்த்துக்
குடித்திடக் கழியு மன்றே 11

**சுரத்தின்மலக்கட்டுக்கு**

சுரத்தினில் வாயு வாலே
சூலையாய் மலத்தைக் கட்டில்
*அரத்தைரோ கணிநீர் முள்ளி
யருநிலா வாரை வேலிப்
பருத்திவேர் கடுக்காய் கண்ட
திப்பிலி பாகல் வீழி
எரித்திநீர் குடிக்க வீக்க
மிளகிடுஞ் சுரமுந் தீரும் 12

சலமல மறித்து மந்தஞ்
சார்ந்துமேல் வெப்பங் கொண்டால்
இலந்தையின் கனிக ளோடு
மிருநிலா வரையுஞ் சுக்குக்
கலந்துநீர் காய்ச்சி யுண்ணக்
கடுமந்த மெல்லாந் தீரும்
உலர்ந்துவாய் கைப்புண் டானா
லுற்றசர்க் கரைசேருத் துண்ணே 13

அத்தியிற் சுரத்தி னோடே
யங்கமு மெலிந்து வாயு
மெத்தியே வலித்து நாளு
முண்டியில் வெறுப்பு மேவில்
சத்திசா ரடைக்கி ழங்கு
தான்றிமா சிக்கா யிஞ்சி
வித்தகக் குமரிச் சாறா
மணககெண்ணெய் வெதுப்பிக் கொள்ளே 14

வெற்றிலை வாட்டி வாங்குஞ்
சாற்றுக்குச் சரிவெள் ளுள்ளி
உற்றிடுஞ் சாறுங் கூட்டி
யொன்றதா யுழக்கே ரண்டம்
பற்றிடக் காய்ச்சிச் சேர்த்துப்
பருகிட வாயு வெல்லாம்
அற்றிடு மலமு நீங்கு
மருஞ்சுர பேதி யாமே 15

* அரைத்த என்றும் பாடம்.

**கெர்ப்பனிமலக்கட்டுக்கு**

குமரியின் சாற தன்னிற்
    கூறுரோ கணியி ரண்டு
அமைவுறத் தூளா யிட்டே
    யழுந்துறப் பிசைந்தந் நீரில்
அமரியுஞ் சேர்த்துட் கொண்டா
    லாயிழை கெர்ப்ப காந்திச்
சுமைலெகு வாகுங் கெர்ப்பச்
    சிசுவுடல் வளரு மன்றே 16

**கிரந்திமலக்கட்டுக்கு**

கள்ளியின் கொழுந்து தன்னைக்
    கனலுற வரகு வைக்கல்
உள்ளுறு புகையில் வாட்டி
    யுறப்பிழி நீரி னோடும்
அள்ளுமா மணக்கி னெண்ணெய்
    யழலுறக் காய்ச்சிச் சேர்த்துக்
கொள்ளவே கிரந்தி வெட்டை
    குடல்வலி குத்தும் போமே 17

**குன்மமலக்கட்டுக்கு**

கறுத்தக்காக் குறட்டை வேரு
    மிலையுமொன் றாய்க் கசக்கி
இறுத்தசா றதனிற் றேங்கா
    யிரும்பயஞ் சேர்த்துட் கொண்டால்
வெறுத்திடு குன்ம வாத
    விரோசன மென்பர் மேலோர்
அறக்கழிந் திடவும் வேண்டி
    லாமணக் கெண்ணெய் கூட்டே 18

**குட்டாங்கிரந்திமலக்கட்டுக்கு**

ஆமணக் கெண்ணெய் தன்னி
    லரிந்துசேங் கொட்டை யிட்டுத்
தோமறக் காய்ச்சி வாங்கித்
    தூய்திடிற் றோட மீள
காமவெப் பரிப்புக் குட்டங்
    கரப்பனிற் பேத மெல்லாம்
போமென முனிவர் சொன்னார்
    புசிக்கலாஞ் சிசுக்க ளுக்கும் 19

பாகலி னிலைச்சாற் றோடே
    பாலையுங் கலந்து கொண்டால
ஆகநோ யுடனே வாயு
    வபானத்தி லரிப்புந் தீரும்
நாகவல் லியையும் வாட்டிப்
    பிழிந்ததீ னல்லே ரண்டம்





ஓசையாற் சேர்த்துட் கொண்டாற்
    சுரவெப்பு மொழியு மன்றே 20

**உட்காய்சலுக்கு**

கற்கட சிங்கி யிந்து
    கடுகுரோ கணிக டுக்காய்
சர்க்கரை சாதிக் காய்தற்
    கோலமு மேலந் தானும்
மிக்கரோ சனைகர்ப் பூரம்
    விளங்குகுங் குமப்பூக் கோட்டம்
ஒக்கவா மணக்கி னெண்ணெ
    யுண்ணவுட் காய்ச்ச றீரும் 21

**பித்தத்துக்கு**

குமரியின் வயிற்றி னுள்ளே
    குறுஞ்சிறு பயறிட் டுப்பின்
அமைவுற வொருநாள் வைத்தே
    யப்பய றதனை வாங்கி
நிமிர்வுறத் தின்பீ ராகி
    னெஞ்சினிற் பித்த நீங்கும்
சுமையற வரைந்து மூழ்கிற
    சுழறலைப் பித்தந் தீரும் 22

**குண்டைக்கற்பம்**

எள்ளையும் பருப்ப தாக்கி
    யிதனிற்சேங் கொட்டை யிட்டுத்
துள்ளுற விடித்து நன்றாய்த்
    தோமில்சர்க் கரையுஞ் சேர்த்துக்
கொள்ளுவீ ராகில் வாதங்
    குடல்வலி குன்மங் குட்டம்
உள்ளநோ யனைத்துந் தீர்க்கு
    முயர்குண்டைப் கற்ப மாமே 23

**இருமல்ஈழைக்கு**

ஈரவெண் காயந் தன்னை
    யிளநீரி லிட்டுக் காய்ச்சிக்
சேரவே கண்டுத் தூளுஞ்
    சேர்த்ததி லேல மிஞ்சி
கார்புகா வக்க ராவான்
    மிளகுடன் கராம்புங் கூட்டிச்
சேரவே நெய்யிற் றின்னத்
    தீர்ந்திடு மிரும லீழை 24

**மூலவாய்வுவாந்திக்கு**

பாலினெற் பொரியைச் சேர்த்துப்
    பக்குவ மாகக் காய்ச்சும்

வேலையி லேலஞ் சுக்கு
வெள்ளைவெண் காயங் கண்டு
நாலுமொன் றாகச் சேர்த்து
நறுநெய்யோ டருந்த நன்றாம்
மூலமாம் வாய்வு வாந்தி
முதிர்குட லெரிவுந் தீரும் 25

முசுக்கைவா ராகி வேளை
முளியிலை முடற்கொற் றானோ
டகப்பில்வெள் ளுள்ளி யிந்து
வகுங்கறி யிஞ்சி சேர்த்துப்
பொசிந்திட நாளும் வரையும்
பொருமலும் வருவ தில்லைப்
பசித்திட வேணு மென்றாம்
பருகுதூ துவளை சேர்த்து 26

**நீர்க்கோவைக்கு முதலியவற்றுக்குச் சாறு**

தூதுபத் திரிச மூலந்
துணக்கதா யரிந்து நீரில்
பாதம்வற் றளவுங் காய்ச்சி
வடித்திடு படிநீர் தன்னில்
ஓதிடு மிஞ்சி மஞ்ச
ளுவர்மிள கரைத்துச் சாறு
வேதுறக் காய்ச்சி யுண்டால்
மேனிநீர்க் கோவை போமே 27

அகத்தியி னிலைச்சாற் றோடே
யரும்புளி மிளகுப் பிட்டு
மிகத்தினங் குடிக்கிற் பித்த
மேம்படா தடங்கும் வாதம்
அகத்திட வேலி வேளை
யமுக்கிரா நொச்சி தூது
மிகக்கடு மூன்றுங் காய்சிக்
குடித்திடின் மெலியு மையும் 28

**சூலைமுதலியவற்றிற்குப்பால்**

பால்சரி தண்ணீர் விட்டுப்
பருங்கொடு வேலி வேரும்
நாலுற நருக்கிப் போட்டுக்
காய்ச்சியே நாண்மூன் றுண்ணச்
சூலையும் வாயு மேகச்
சுரந்தொலை வெய்தும் பாலில்
சீலமாஞ் சிறுகாஞ் சோன்றி
வேருக்குச் சிதையும் காசம் 29

**வெண்ணெய்**

பால்படி கொடிய வேலி
பலமொன்றை யரைத்துப் போட்டுச்





சீலமாய்க் காய்ச்சித் தோய்த்துச்
செறிதயிர் கடைந்த வெண்ணெய்
நாலுநாட் கொருகாற் செய்து
நாற்பது நாளுட் கொண்டால்
பாலுறு மேக ரோகம்
பற்றறத் தீருமன்றோ 30

**தயிர்**

இப்படிச் சிவதை தன்னை
யிருநிலா வாரை பாலில்
தப்பறக் காய்ச்சித் தோய்த்துத்
தயிருண்ண மலம்போ மேதி
ஒப்பறு தயிர்தோய்த் துண்டா
லுட்டணக் கட்டி தீரும்
மைப்படு தயிர்செய் துண்ண
மருவுசே டத்துக் காமே 31

**பால்வகை**

வெள்ளையாம் பசுவின் றீம்பான்
மேன்மையா மெவர்க்கு மேற்கும்
கள்ளமில் கபிலை யான்பால்
கனத்திடுந் தெய்வங் கட்காம்
எள்ளலில் காராச் செம்மை
யிருமையான் பயமி னிப்பாம்
உள்ளுறு தொந்த ரோகிக்
கொழித்திட வேண்டு மன்றே 32

மேதியின் பால்க ரப்பான்
மிகுவிற்கு மருந்தோ டன்றி
நீதியிற் புசிக்க லாகா
நிறைதயிர் சீத மிஞ்சும்
ஓதுறு மோரெந் நாளு
முண்ணலா நீர்ரோ கிக்காம்
மாதரைச் சேர வெண்ணெய்
வலுக்குஞ்சா திக்காய் கூட்டில் 33

வெள்ளையான் பாலி லுள்ளி
முருக்கம்பூ வெச்சிட் டுண்டால்
தள்ளுமுட் குத்தும் வாய்வும்
சதைநெரி வோட வாதம்
கொள்ளுறு மிரும னீங்குங்
குடிக்கலாம் வியாதி கண்டு
தள்ளுசெம் மறியின் றீம்பால்
சார்ந்திடற் பாண்டு வாக்கும் 34

கழுதையின் பாலி லேலங்
கறுவாக்கச் சோலமிட்டே
அழல்படா துண்கின் மாதர்க்
கழிகொர்ப்பம் விருத்தி யாகும்

விழுமமாங் கர்த்த பப்பால்
மேம்படும் வியாதி யெல்லாம்
பழகினாற் றேச காலப்
பருவத்தா லேற்கு மன்றே 35

**நீர்ச்சோறு**

நீரினிற் போட்ட வன்ன
நிறையவோர் தினஞ்சென் றாற்பின்
ஆருவர் பித்த தேகி
யரிவையர் காளை யர்க்கும்
சேர்பரு வத்தி னோர்க்குஞ்
செய்குண மதுவோ டொக்கும்
ஈரவெண் காய மிஞ்சி
மிளகிடிற் பிணிக்கு மேற்கும் 36

**பஞ்சகௌவிய ரசாயனம்**

பஞ்சகௌ வியத்தி னாலே
ரசாயனம் பண்ணச் சொல்வன்
மிஞ்சுகோ மயத்தைக் கோமூத்
திரத்தினின் மிதக்க ரைத்துத்
துஞ்சற வடித்தோர் பங்குத்
கிருமைநெய் தயிர்ப்பால் தொந்தித்
திஞ்சிநீ ரிளநீர் வாழைக்
கிழங்குநீர் மீட்டா னின்டு 37

குமரியா வாரை கோவை
குதம்பைமா தளைவல் லாரை
கமரிநெய்ச் சிட்டி குன்றி
கருவேம்பு கையான் றாளி
அமிர்தமாம் வல்லி சின்னி
யழற்கம் புள்ளடி முசுக்கை
இமையமாங் கன்னி கஞ்ச
மிதன்சாறு நாலத் தொன்று 38

கொதியிட்டு வடித்த நெய்யிற்
கூட்டுமோ டதிகள் சொல்வன்
முதிர்கனி மூன்று முக்காய்
முந்திரி கோட்ட மேலம்
அதிகமாஞ் சாதி மாயா
வரத்தையோ டன்ன பேதி
சுதைமலர் கராம்பு தாளி
சீரகஞ் சமனாய்ச் சொல்லே 39

இடித்ததூட் கிரட்டி யாக
வினியசர்க் கரையுங் கூட்டி
வடித்தநெய் யோடு சேர்த்துக்
வற்றிடாப் பதத்தில் வாங்கி
நடத்தையாய் நாளுங் கொள்ள
நலந்தரு முதர வன்னி





உடற்குறு வியாதி யெல்லா
மொன்றறத் தீரு மன்றே 40

கௌவிய மைந்து சேர்த்துக்
கிருதத்தி லிரட்டி வார்த்துச்
செவ்வையாய் முன்னஞ் சொன்ன
சரக்குச்சா றெல்லாஞ் சோத்துப்
பவ்வமாய் வடித்த நெய்யைப்
பருகிடிற் றோடம் மூன்றும்
எவ்வமில் லாமற் றீர்க்கு
மிதுபஞ்ச கவ்ய நெய்யே 41

**மதுரநெய்**

மதுரமா நெய்யைச் சொல்வேன்
மாதுளம் பழத்தின் சாற்றில்
இதமுறு பறங்கிப் பட்டைக்
செட்டொன்று சதுர்ச்சா தந்தான்
புதியதா யூற வைத்துப்
பொடித்தத னோடே யிஞ்சி
சிதையவே சாறு வாங்கிச்
சிறுநள்ளிக் கொழுந்தும் வாட்டி 42

சாற்றினைப் பிழிந்து நெய்யிற்
சாரவே விட்டுக் காய்ச்சி
மாற்றரும் பதத்தி னெய்யை
வடித்தபின் றேனும் பாதி
தோற்றுகற் கண்டுத் தூளுந்
துகளிலாத் திராட்சை மோசை
ஏற்றியே நாளெட் டுண்ண
விரும்பசி யுண்டா மன்றே 43

**புளியாரைநெய்**

ஆரைநெய் யதனாற் காய்ச்ச
லக்காக் கடுப்புத் தீரும்
சேரவோர் படிய தாகுஞ்
சிறுபுளி யாரைச் சாற்றில்
சாரவே சதுர்ச்சா தத்திற்
றண்கனி மூன்றுங் கூட்டி
வாருள்ளே வடித்தா லீது
வல்லாரை நெய்ய தாமே 44

ஆவரைநெய்

ஆகமிக் கிருத மாவ
தரியமே கங்கட் காகும்
தாகமோ டெரிவு கைகால்
சத்தியுந் தவிதுத்து மாதர்
போகமுந் தருமுன் சொன்ன
படிநெயயிற் சரக்கைப் போட்டு

வேகவா வாரைச் சாற்றில்
விரைந்துநெய் வடித்துக் கொள்ளே 45

### இஞ்சிநெய்

இஞ்சிச்சா றிருப டிக்கு
நெய்யுமோர் படிய தாகும்
அஞ்சலி லர்க்கம் வேளை
யருநொச்சி கான்றை முள்ளி
மிஞ்சுபொன் முசட்டை வட்டை
பிரண்டையா தண்டை வேலி
மஞ்சட்சா றுழக்குச் சேர்த்து
மறுபடி வேருங் கேண்மோ 46

அவுரிமா லிலங்கை வேலி
யாவரை யாடா தோடை
சுவையுறு கீழ்காய் நெல்லி
தும்பைநா யருவி யின்வேர்
சிவையள வாகு நீரைச்
செறிபடி காய்ச்சி வாங்கி
அவமிலா தரைச ரக்கி
னளவையு முரைக்கக் கேண்மோ 47

ஏலமோ டிலவங் கப்பூ
வேற்றசீ ரகமி ரண்டு
பாலைவெள் ளுள்ளி சாதி
பத்திரி சாதிக் காயும்
மேலிது செவியஞ் சித்திரஞ்
சிறுதேக்கு மிளகு சுக்கு
வாலிதாய் வறுத்த ரைத்துக்
சரைத்துநெய் வடித்துக் கொள்ளே 48

இஞ்சிநெய் வடித்துக் கொள்ளி
லெழுமந்த நாலுந் தீரும்
மிஞ்சிய கழிச்சல் வாயு
வுண்முட்டு மெலிவுந் தீரும்
அஞ்சுறு வயிற்றிற் புண்பா
டேவறை யனைத்துந் தீரும்
துஞ்சலில் பசியுண்டாகுந்
துய்த்தது சுவைக்கு மன்றே 49

### பிரண்டைரசாயனம்

பிரண்டைமோ ரினில் வித்தே
யுலர்த்திப்பின் றூள தாக்கித்
திரண்டதோ ருள்ளி யிஞ்சி
சேர்த்துவான் மிளகோ டேலம்
புரண்டநெய் தேன்கற் கண்டு
பொருந்தவே காய்ச்சி வைத்துத்
திரண்டபாக் களவு தின்னச்
செறியுடல் வாதை தீரும் 50





### வில்வாதிலேகியம்

வில்வவேர் பட்டை போக்கி
வயிரத்தை விரைந்து சீவிச்
சொல்லிய பலமோர் நூறு
சுத்தமண் பாண்டத் திட்டு
நல்லநீர் துரோண நான்கு
நாலொன்றா யிருக்கக் காய்ச்சி
வெல்லவே வற்று நீரை
வேறதாய் வடித்து வாங்கே 51

வாங்குநீ ரதனி லிஞ்சி
கடுமூன்று காயோர் மூன்று
தேங்கிய கனியோர் மூன்று
செழுங்குளிர் சார மூன்று
தாங்கிய பலமோ ரொன்று
சதுர்ச்சாத மதற்குப் பாதி
நீங்கலில் வெல்லம் பத்துப்
பலமிட்டு நெய்தேன் சேரே 52

அரைபொடி காந்தஞ் சுத்தித்
தகனுடன் சேர்த்தெள் ளெண்ணெய்
மருவிடக் கொஞ்சம் வார்த்து
மத்தித்துக் கடுக மாக்கி
விரவிடப் பதமாய்ச் செய்தால்
வில்வாதி யென்று மேலோர்
பருகநன் மருந்தா மென்றே
பகர்ந்தனர் நோய்னகட் கெல்லாம் 53

விடாச்சுர வெதுப்பு மேனி
வெளுப்புவெண் பாண்டு ரோகம்
விடாவலி குன்ம வாயு
வசீரணம் விக்கல் வெப்பு
விடாவுட லழற்ற லன்ன
வெறுப்பொடோங் காளங் ணெண்டு
விடாப்பிணி யனைத்துந் தீரும்
வில்வாதி லேகியந்தான் 54

### நறளைப்பாகு

நறளைகர்ப் பூர வள்ளி
நன்மரல் கான்றை சூரை
மறுவறு மமுக்கி ராசெம்
மாதளை பெதரி யீந்து
சிறுவழு தலைவெண் டூது
செப்பிடு மிவைக்க ளின்காய்
உறுகனி நீரிற் காய்ச்சி
யோரள வாக வாங்கி 55

தேனெய்பால் கல்லக் காரஞ்
சேரவே பாகாம் போதில்

ஈனமில் சாதி சாதி
பத்திரி யிலவங் கப்பூ
ஊனமில் கடுகு மூன்று
முறுதூளோர் கழஞ்சா மீது
மானமா மெவர்க்கும் வாக
கமப்பித்தஞ் சமனாய் வைக்கும் 56

**நெல்லிக்கற்கம்**

நெல்லியின் கனியி டித்து
நெரிகொட்டை தள்ளித் தெள்ளி
நல்லமட் கலத்தில் வைத்து
நாண்மூன்று சென்ற பின்பு
சொல்லிய பலம தொன்றுக்
கிந்துப்பு மிளகுஞ் சுக்கும்
மல்லவே யரைக்க ழுஞ்சு
மருவுதூ ளாக்கிச் சேர்த்து 57

கருவேம்பி னிலைவெண் காயங்
கடுகுசீ ரகநற் காயம்
உருகுறப் பொரியும் போதோ
ருழக்குநல் லெண்ணெய் வார்த்து
மருவிட நெல்லிக் கற்க
மதித்தலே கியம தாக்கிப்
பருகிட வன்னத் தோடு
பயித்திய மனைத்துந் தீரும் 58

**திரிபலைப்பாவனை**

முற்றிய நெல்லி தான்றி
கடுக்காயிம் மூன்றும் பச்சை
வற்றிடா முன்னம் வாங்கி
வளமுறு மூசி தன்னால்
உற்றிடக் குத்தி யிந்துப்
பூறவே நீரிற் போட்டுக்
குற்றமில் தேனி லூறிற்
கொடியவெப் பெல்லாம் போமே 59

**இஞ்சிப்பாவனை**

இஞ்சியை மெல்ல வாட்டி
யெழும்புறோ ணியையு நீக்கிக்
கொஞ்சமா யரித்துந் துப்புக்
கூரவே யூற வைத்து
மிஞ்சிய மந்தத் துக்கு
மென்குடல் வலிக்கும் வாயு
நெஞ்சுறு புளித்தேப் புக்கு
நீதந்தின்ச் செரிக்கும் மன்னம் 60





**நாரத்தங்கா யூறுகாய்**

கச்சல்நா ரத்தக் காயைக்
கருவியால் வளைய மாக்கி
மிச்சமா யுப்புத் தூளில்
மிளிர்மஞ்சள் வெந்த யத்தை
நச்சவே வறுத்து நன்றா
யத்தூள்நா ரங்கத் திட்டே
அச்சமி லூறு காயா
யருந்தவே செமிக்கு மன்னம் 61

**உப்பிலாப்பத்தியத்திலும் சேர்க்கத்தக்கன**

உப்பிலாப் பத்தி யத்துக்
கொன்றுமா காதென் றாலும்
செப்பிடு முள்ளிக் காய்தேன்
சிறியதா முருங்கைப் பிஞ்சு
திப்பிலி யிஞ்சி தூதுந்
திரிதோடந் தனக்கு மொக்கும்
ஒப்புறா நெய்மந் தித்தா
லுப்பும்வெந் நீருங் கொள்ளே 62

**பால்முதலியன மந்தித்தால்**

பால்மந்தம் வெல்லஞ் சுக்குப்
பகரன்ன மசம தாகம்
சீலமில் தயிர்மந் தித்தாற்
றின்னலா முப்போ டிஞ்சி
வால்மிள குழுந்து மந்த
மாமந்தங் காயந் தீர்க்கும்
ஞாலமே லெண்ணெய்க் கெல்லா
மவுரிநா யுருவி யாமே 63

**கோடைக்காலப்பானம்**

ஏலமுஞ் சுக்கு முப்பு
மிசையவே மோரிற் போட்டு
மேலுயர் கரிய வேம்பி
னிலையெலு மிச்சை கூட்டிக்
காலமாங் கோடைக் குண்ணக்
கற்கண்டு வெந்நீ ரோடு
சாலநெய் கூட்டி யுண்ணிற்
றாகம்போஞ் சாரு மின்பம் 64

**நோய்க்கேது**

பசியிலா துண்ண லாலும்
பலதண்ணீ ரருந்த லாலும்
கசிவிலா விலைமின் னாரைக்
காமித்துக் கூட [illegible]

இசைவிலா மலத்தை நீரை
யிடரினா லடக்க லாலும்
அசைவிலா திருத்த லாலு
மணுகிடு நோய்கள் வந்து 65

**பசித்தபின் உணவுகொள்ள**

எரிவளர்த் திடுவோ ரெவ்வா
றிந்தன மிடுவர் பற்றி
அரிவளர்த் திடுநெய் தானே
யவித்திடு மதிக ரித்தால்
பருவமா யதைய றிந்து
பசித்திடப் புசித்தா நோய்கள்
வருவது மில்லை வந்தான்
மருந்தினாற் றீரு மண்றே 66

**பாண்டுவுக்கு ஊறுகாய்**

பாண்டு வுக்குப் பகர்ந்திடு மூறுகாய்
வேண்டி யேசெய் விதியை யுரைக்குவன்
மாண்ட கிட்ட மரைபொடி காந்தமும்
மூண்ட ரைக்க மொழிந்திடுஞ் சாறுகேள் 67

சாற்றெ லுமிச்சை தன்கனி பத்துச்சா
றூற்றி வெய்யி லுறவே யதையரை
சாற்றுங் காட்டினின் மல்லிகை சாறடை
யேற்றுங் கையான் றகரைநீர் விட்டரை 68

அரைத்த தூளி லடுத்ததிற் சேர்சரக்
குரைக்கிற் சீரகஞ் சிங்கி யொளிர்மஞ்சள்
கரைத்த வேலங் கருஞ்சிர கத்துடன்
அரைத்த யோமங் கனிமூன்று முக்கடு 69

மதுரஞ் சாதிக்காய் மல்லி கராம்புடன்
இதுக ளோரோர் விராக னிடையிடு
பதரி யித்துப்புப் பத்து வராகனாம்
சிதறி டாதுதூ ளெல்லாமொன் றாக்கியே 70

இருப தாமெலு மிச்சம் பழத்தினில்
உருவ வூறுகா யுள்ளுட னிட்டுவை
கருவேப் பிங்கு கடுகிட்டு வெந்தயம்
மருவத் தாளிக்க வாருழக் கெண்ணெயே 71

ஊறி நன்றா யுருகும் பதத்தினிற்
கீறு கீறாய்க் கிளர்மண் டலந்தின்ன
மாறும் பாண்டு மகோதர வீக்கமும்
தேறுங் கண்கை சிவக்குங் கறுக்குமே 72

**சரபங்கவில்வாதி**

வில்வமா வாரை சிற்றா
முட்டியிம் மூன்று வேரும்





சொல்லிய பலமோர் பத்துத்
துளிதமா யிடித்துப் போட்டு
நல்லநீர் மரக்கா னாலு
நாண்மூன்று காய்ச்சிப் பின்பு
மெல்லவே வடித்தந் நீரின்
மிளிர்கோட்ட மரத்தை சுக்கு 73

முத்தக்கா சொடுதக் கோல
முக்கடு நெல்லி சாதி
வித்தக விளங்க மேலம்
வான்மிள கசம தாகம்
ஒத்திடு நாகந் தாளிச
பத்திரி யுங்க ளிப்பாக்
கத்தொடு காசுக் கட்டி
யருங்குரா சாணி யோமம் 74

சீரகங் கொத்த மல்லி
வெவ்வியஞ் சிறுதேக் கோடு
சாருமஞ் சிட்டி வன்னி
மதுரஞ்சா திப்பூக் கூகை
கோரதி விடயம் பச்சை
செவ்வள்ளி கராம்பு மஞ்சள்
நேர்வருங் குங்கு மப்பூ
நிறுத்தொரு கழஞ்சு தூளாய் 75

சர்க்கரை பலமீ ரொட்டுச்
சாரவே முன்போ னீரில்
ஒக்கவே கரைத்துப் பாகு
பதத்தினி லுறுதூ ளிட்டு
மிக்கதாந் தேனெய் மட்டாய்
விட்டுநற் கடுக மாக்கித்
துய்கவு மதுர மாகுஞ்
சொல்கின்ற சரபங் காதி 76

சரபங்க மென்று மேலோர்
சாற்றுவில் வாதி தன்னை
உரிசையாய்ப் புசிக்கி னாளு
மோர்நெல்லிக் காயின் மானம்
மருவிடாக் கிராணி வாயு
மலஞ்சலஞ் சமனா முண்டி
தெரிகிலா தேற்றத் தாழ்ச்சி
யாயினுஞ் செரிக்கு மன்றே 77

**ஏலாதிகடுகம்**

ஏலாதி யென்று சொல்லுங்
கடுகத்தை யினிதாய்ச் செய்யச்
சாலவே யேலம பத்துக்
கொன்றதாஞ் சரக்கை யெல்லாம்
பாலினி லவித்துக் காய
வைத்துத்தூள் பண்ணிச் சேரும்

கோலமா முயிர்க்கீ தொன்று
குதாகலங் கொடுக்கு மன்றே 78

மதுரநற் கடலை மாஞ்சி
மலர்தேமாம் பருப்பு மாயா
அதிகமாஞ் சாதிக் காய்தக்
கோலத்தோ டக்க ராவும்
புதுநெல்லிக் கனிவெட் பாலை
சீரகஞ் சிறுநா கப்பூ
அதிகச கசால வங்கஞ்
சுக்குவான் மிளகு கோட்டம் 79

இதுவெலா மிடித்துத் தூளி
லினியரோ சினைகர்ப் பூரம்
புதியகுங் குமப்பூத் தூளைப்
போடுபின் முன்னி தாகக்
கொதியுறு மானெய் வற்றிக்
கற்கமா மிறக்கிக் கொண்டு
சிதைவில்கஸ் தூரி கண்டு
தேனிட்டுக் கடுகஞ் செய்யே 80

தின்றிடி னாளு மீது
சேட்டும வாத பித்தம்
ஒன்றுக்கொன் றுயர்ந்து தாழ்ந்தும்
ரூட்சையொன் றுறவொட் டாது
நன்ற தா மருந்துக் கெல்லா
நாயக மென்று சொல்வர்
அன்றியு முண்ட வாயு
மமிர்தமா மெவர்க்கு மாகும் 81

**அமிர்தசக்கரை**

அமிர்தசர்க் கரைய தொன்றே
யதிகமா மருந்துக் கெல்லாம்
முதியநற் சீந்தில் நன்றாய்
முற்றிய போது வெட்டி
அதிகமா மாத பத்தி
லக்கொடி வாடும் போது
சிதையத்தோ லழித்தி டித்துத்
தெளிந்திட நீரிற் போடே 82

ஊறுநீர்க் குள்ளே யப்புப்
படுவபோ லமிர்த மூறும்
வேறதா யிறுத்து வைத்து
வெயிலுற வெளுத்துத் தூளாய்க்
காறுத லின்றி நல்ல
கற்கண்டுத் தூளோ டொக்கும்
மாறில்லாப் பூமிக் கீசன்
வைத்தநல் லமிர்த மாமே 83





அமுதுண்ட தேவர் போல
வகங்குளிர்ந் கிளமை பூப்பான்
சவுமிய மான சீந்திற்
சர்க்கரை யுணவி ருத்தர்
தமையுறு பித்த வேகந்
தலைப்பட ததனால் வாதம்
அமைவுறு மதனா லையும்
அதிகரித் திடாது நிற்கும் 84

**கொவ்வை**

நறுங்கொவ்வை காய்கை யாது
நாடியே சமூலந் தூளாய்
மறுவிலா திடித்துப் பானெய்
தேன்மற் றேதுடனுங் கூட்டி
உறுதியாய் நாளுந் தின்னி
லுட்டண வெட்டை தீரும்
இறுகியே மெய்யும் பல்லு
மிளமையும் பிறக்குமன்றே 85

**தாளிசபத்திரி வடகம்**

தாளிச பத்தி ரிக்குச்
சாற்றிட வடகந் தானும்
கேளுநீ பாலிற் சுத்தி
கெட்டியாய்ச் செய்த தோடே
நாளுநன் றாகத் தேர்ந்து
நாடிவா லுலகுத் கொக்கக்
கோளிலாச் சரக்குச் சேர்த்துக்
கொள்ளெனச் சொல்லு நூலே 86

**பொற்றலைக்கற்பம்**

பொற்றலைக் கையா னோடே
பொடுதலை காக்கு றட்டான்
அற்றமில் சமூல மொன்றா
யருநிழ லுலர்த்தித் துகளாய்க்
குற்றமில் கடுகு மூன்றில்
வேண்டிய கூட்டித் தேனில்
உற்றநா ளனைத்துந் தின்னி
லுறுநரை வராது டற்கே 87

**செங்கொடுவேலிக்கற்பம்**

செங்கொடு வேலி பாலிற்
சேர்த்தவித் திடித்த தூளை
அங்கமா மமிர்த மூன்றி
லாகிய தோட ருத்த
வெங்கண்மா நாகந் தீண்டில்
விடமவர்க் கில்லைத் தூர்த்த

மங்கையர் பலர்சேர்ந் தாலு
மருவிடா மேக ரோகம் 88

### கலப்பைக்கிழங்கு

கலப்பையின் கிழங்கு தன்னைக்
காராவி னெய்யிற் சேர்த்தே
உலக்கைப்பூ டுடனே தண்டி
லுறப்பூசிப் புணர்வீ ரானால்
கலக்கமி லிருவ ருக்குங்
கரிசன மொழியா தென்றும்
விலக்கிடார் மாதர் மைந்த
ரொருவருக் கொருவர் விட்டே 89

இறுகிய வல்கு லார்க்கே
ஏரண்டத் திடுவெண் காரம்
சிறகுற விரித்த யோனி
சேர்முருக் கிலையின் சாற்றில்
மறுவிலாப் பாலைப் பாலு
மாதர்க்கே தோற்கின் மைந்தர்
பெறுவதும் பெறாத வாறும்
புணர்ச்சியின் பேதந் தன்னால் 90

### பகபெந்தம்

பகபெந்த மெனுநோய் குண்டை
பாலிலே ரண்டத் தெண்ணெய்
மகிழ்நறுந் தாளி யோடு
மஞ்சள்மாச் சேலை தக்கை
புகலுறு பூப்புக் கண்ட
நாளல்குற் புரையுள் வைத்த
அகலிடு மப்போ தாக
வாடவன் புணர்ச்சி செய்யில் 91

மாதரு மைந்தர் தாமு
மதன் நூன் முறைய றித்தும்
ஓதுறும் போகத் துக்கு
முறுமுறை யறிந்துஞ் சேர்ந்தால்
சேதம்வா ராது விந்துத்
திவலையாற் கெர்ப்பந் தங்கும்
ஈதுபொய் யன்று காட்சி
யிருடிகள் புதல்வர்ப் பேறே 92

### ஆம்பிர சூரணம்

மாம்பழப் பருப்பு நாலு
மருவுசேர் நிறுத்துக் கொண்டு
தீங்கற வறுக்கும் போது
சேரெண்ணெய் நெய்யீ தொன்று





பாங்கதாய்த் தூள தாக்கிப்
பலம்பஞ்ச தாரை கூட்டி
ஓங்கிய விடயத் தோடு
முண்ணப்போங் கிராணி யெல்லாம் 93

### *சிவசிருங்கம்*

தண்கலைக் கோடு தன்னைத்
தன்னியந் தனிலு ரைத்து
வெண்ணெய்போ லாத பத்தின்
வில்லையாய்க் காய்ப தத்தில்
நண்ணுறு கின்ற சீந்திற்
சர்க்கரை நாலந் தொன்று
வெண்ணிறஞ் சேர்த்து வைத்தே
யிதிலிடும் வகையைக் கேளே 94

புள்ளடி சீதை காந்தி
பூளைவல் லாரை நெய்தல்
கள்ளமில் சிற்ற மட்டி
கூவிளஞ்சி றுகாஞ் சோன்றி
வெண்ணிறப் பூலா வெட்சி
யிலாமிச்சை வெட்டி வேரோ
டள்ளுமா வாரை நாரி
யரிபன்றி கீழ்க்காய் நெல்லி 95

இதுகளி னிலையை வேரி
லினிதாய்ச் சேர்த்துப் போட்டுப்
பதமுற வற்றக் காய்ச்சிப்
படிகஷா யத்தி லேலம்
மதுரமஞ் சிட்டி நாக
மலர்முத்தக் காசு மாஞ்சில்
புதியகுங் குமப்பூக் கோட்டம்
பத்திரி சாதிக் காய்பூ 96

அரைக்கழஞ் சோரொன் றாகு
மதையெல்லாஞ் சேர்த்த வித்தே
துரித்தவா தபத்திற் காய
வைத்தெலாந் தூள தாக்கி
விரைத்தசெங் கழுநீர் நெய்தற்
கிழங்கையு மவித்து வேறாய்
அரைத்துத்தூ ளாக்கி யெல்லா
மதிற்சரி யாகச் சேரே 97

நெய்யினோ டிளகச் சிற்றா
மணக்கெண்ணெய் காய்ச்சி நேராய்த்
துய்யவீ தெல்லா மொன்றாய்த்
தூவியே கிளறி வைத்துப்
பையவே நாளுங் கொள்ளப்
பழஞ்சுர நீருந் தீரும்
ஐயமில் லாமன் மேனி
யழகுற விரத்த மூறும் 98

சீவியாஞ் சிருங்க கற்கந்
    தேகத்தை வளர்க்கு மீதே
ஆவியா மெவர்க்கு மாத
    ரனுபோகந் தனக்கு மொக்கும்
மேவுமுட் காய்ச்சல் வெட்டை
    பெரும்பாடு மேலெ ரிப்புக்
கோபியாங் கயச்சூ டாதி
    கொடியநோ யனைத்துந் தீரும் 99

சீந்திற் சர்க் கரையி னோடே
    திப்பிலி வறுத்த தூளை
ஆர்ந்திடத் தேனிற் கண்டத்
    தையுட னடைப்பு நீங்கும்
காத்திரு வேலி மூலக்
    கஷாயத்தில் வாயு தீரும்
சேர்த்தசீ ரகத்திற் பித்தஞ்
    சீந்திற்சர்க் கரைசி தைக்கும் 100

விக்கலோ டக்க ரத்தால்
    வெந்திடு முடற்சூட் டுக்கும்
குக்கலாற் கண்பி துக்கிக்
    குடித்தபா லெல்லாம் மீளக்
கக்கிடுங் குழந்தை மாதர்
    காளையர் முதிய ரான
மக்களெல் லார்க்கு மேற்கு
    மான்கொம்புச் சீந்திற் கற்கம் 101

**சுக்குககற்பம்**

சுக்குடன் கடுக்காய்த் தோலுஞ்
    சமனாகத் தூளாய்ப் பண்ணிச்
சர்க்கரை வெல்லஞ் சீனி
    யிதிலொன்று சாதித் துண்ண
மிக்கநோ வுடற்க டுப்பு
    விலகும்வெள் ளறுகுத் தூளும்
ஒக்கவே கூட்டின் மேகம்
    நிலப்பனைக் கொழியுந் தாகம் 102

**கரும்பின்கற்கம்**

செங்கரும் பாலைச் சாற்றிற்
    சீந்திற்சர்க் கரையுஞ் சுக்கும்
செங்கழு நீர்க்கோட் டத்தூள்
    செம்பீரப் பழச்சாற் றோடும்
அங்கமா யன்ன முண்ட
    பின்னெட்டு நாளருந்த
மங்கையர் மைந்தர் தாமு
    மிரதியு மதனு மாவர் 103





இயக்கம்வேர் வெல்லஞ் சுக்கு
    மிட்டிதுண் முடங்கந் தீரும்
மயங்கிய கஞ்சா வெல்ல
    மனத்தயி ரியத்தைப் பண்ணும்
நயம்பெறு மழுக்கி ராய்நா
    கரம்வெல்லங் கிரந்தி நாடாப்
பயம்படு சீந்தில் கோவை
    நிலப்பனை பாண்டு போகும் 104

**உளுந்தப்பம்**

உளுந்துதோல் போக்கிக் கொண்டே
    யொருசரி யுலவாக் கூட்டி
அளந்தபச் சரிசி ரட்டித்
    ததனுட னரைத்து மோரில்
இளந்திடா விந்துப் பேலஞ்
    சுக்குமிட் டெண்ணெ யப்பம்
வளம்பெற நாளுந் தின்ன
    வலிமையுண் டாமு டற்கே 105

சிவதையைப் பிரண்டை தன்னைச்
    சிவந்தசா ரடைக்கி ழங்கை
அவமிலா வழுக்கி ராமுள்
    ளங்கியின் கிழங்கு தன்னைச்
சுவறவே யாட்டுப் பாலிற்
    சுடவைத்தே யுலர்த்தித் தூளாய்
அவமிலாக் கடுக மூன்று
    மத்துடன் கூட்டிப் பின்னும் 106

இந்துவோ டெவச்சா ரந்தா
    னிதுபத்துக் கொன்று மிட்டு
நித்தியாச் சூர ணந்தா
    னினைவுட னருந்து வெந்நீர்
புந்தியா யருந்தக் குன்மம்
    போய்விடு மதுவு மன்றிச்
சொந்தமா யெவட்சா ரந்தான்
    றுய்க்கவக் கணம்போந் துன்பம் 107

கருணையின் கிழங்கு வெள்ளைக்
    காக்கணஞ் சமூலம் பாலில்
உறுதியா யவித்தி டித்தே
    யுறகனி மூன்றிற் றூளும்
அறியவே யிரட்டி யாக
    வருந்திட மூல ரோகம்
மறுவிலா தகலு மிந்த
    மருந்துநா டோறு முண்ணே 108

**பிள்ளைபெற்றவளுக்கு**

சுக்குட னசம தாகஞ்
    சுண்டிவெண் காயங் காயம்

நற்கறி மஞ்ச ணன்றாய்ப்
பொடிசெய்து தேனிற் பிள்ளை
பக்குவந் தன்னிற் பெற்ற
பைந்தொடிக் கருத்த வேனும்
மிக்கதா முதிரை பிள்ளைப்
பெற்றவ ளுடற்கு நன்றே 109

நிம்பத்தி னெண்ணெ யுண்ண
நெறியுடற் புரட்சி நீங்கும்
வெம்புகஸ் தூரி யோர்காற்
பணவிடை வெற்றி லைக்குள்
நம்பியே மென்று தின்கி
னரம்புதாள் விறைப்பு வாதம்
கம்பிடா தீன்ற மாதைக்
கேள்குண மதற்பின் செய்யே 110

உள்ளியுங் கடுகு மூன்று
முறபனங் கட்டி தன்னில்
கொள்ளவே குடற்புண் ணாறுங்
குத்தியே துவாலை தங்கில்
தள்ளுறுங் கராம்பு சுக்குச்
சதகுப்பை தாகந் தன்னைப்
பிள்ளைகாண் கன்னல் நூற்றோ
டிருபதிற் பின்னா மன்னம் 111

நொச்சிவேம் பாடா தோடை
நுவலுமா விலங்கை யொன்றின்
பச்சிலை வேகக் காய்ச்சிப்
பருவமாய்க் குளித்தந் நீரில்
அச்சமின் மஞ்ச டன்னை
யரைத்தரும் புதல்வர்ப் பெற்ற
மைச்செறி குழலார் மார்பு
வயிற்றினும் மருவப் பூசே 112

இப்படி யீன்ற மாதர்க்
கியற்றிடுஞ் சிகிச்சை தன்னில்
தப்பினுங் குற்றம் வாராச்
சதகுப்பை பெருங்கா யந்தான்
துய்ப்பதோர் வேளை பத்து
நாண்மட்டுந் தோடம் வாரா
தப்பறா தச்ச மில்லை
யதன்பின்னே யெண்ணெ யாமே 113

மேனிவே ரரைத்துப் போட்டு
வேப்பெண்ணெ யெரித்துக் குத்தில்
ஊனமில் சிசுவின் கண்டத்
தூறிய வழலை தீரும்
மேனியிற் கருக்கி ரந்தி
மேவிடா தேரண் டத்தில்
ஈனமி லெண்ணெய் தன்னிற்
குண்டையிட் டெரித்துப் போடே 114





**துவாலையிறைத்தால்**

மடந்தைக்குத் துவாலை மிஞ்சி
வருந்தவே யிறைக்கு மாகில்
பொடிசெய்து சுக்கைக் குப்பை
மேனிச்சா றதனிற் போட்டே
எடுகரண் டியிலெள் ளெண்ணெய்
காய்ச்சியே வெல்ல மிட்டுக்
கடுகமாய்க் கிளறித் தின்னக்
கட்டுமத் துவாலை தானே 115

**பிட்டு**

பச்சைநெல் லரிசி செங்கத்
தாரியின் பட்டை தும்பை
அச்சமி லிலையுங் கூட்டி
யிடித்தெல்லாம் பிட்ட வித்தே
வெச்சொடு மெள்ளி லெண்ணெய்
வெல்லமு மிட்டுத் தின்ன
நிச்சயந் தீரும் தூமை
நீங்குமுட் குத்து மன்றே 116

**களி**

கதலியின் கந்த நீரி
லத்திக்கா யவித்த பிட்டும்
பதமுறு மத்திப் பட்டை
யவித்தநீ ராட்டுப் பாலில்
இதமுறு மரிசி மாவி
லின்கனி யெண்ணெ யோடும்
நிதமருந் திடநாண் மூன்றி
லிதம்பநோய் துவாலை தீரும் 117

சர்க்கரை வள்ளி யல்லி
சதாவேரி வாழை நன்னி
மிக்கபுல் லரிசி சீந்தி
நிலப்பனைபக் கிழங்கு நெய்தல்
பக்குவத் துடரி காரை
யிலைமகிழ் பாணா சங்கு
நற்கனி துவரை நாவற்
கனிகளுந் துவாலை கட்டும் 118

**நோவக்கு**

நடனத்தாற் சிலம்பந் தன்னா
னவிலுமற் பிடியா லங்கம்
குடல்வகை குலங்கி நொந்தாற்
குடித்தநீ ரெடுக்குந் தத்திக்
கடலெனக் கழித்தா லத்திப்
பட்டைகா யெண்ணெய் தூது
மடல்வரி வாழை மஞ்சண்
மருக்காரை மகிழு மாமே 119

சன்மலி பாளை வெள்வேல்
சாரடை சிறுகு றிஞ்சா
புன்னைபுங் கசம தாகம்
பொருந்தவே யிவைக ளொன்று
வன்னியிற் காய்ச்சி நீரால்
வலிவீக்கங் கழிச்சல் வாந்தி
இன்னதென் றில்லா திந்த
நோவெலா மெடுக்கு மன்றே 120

### அதிசாரத்துக்கு

முத்தக்கா சேல மோம
மொருசரி பலமோர் மூன்றும்
சுத்தமாய் வறுத்த தோடே
சொல்குறா சானி சுக்கு
வித்தக விடயந் தேற்றா
விரையரைக் கழஞ்சு தூளாய்
ஒத்திட வறுத்துச் சேர்க்கி
லொழிந்திடு மதிசாரத்தை 121

காரமோர் மூன்று நீரிற்
கரைத்ததிற் றோல்போஞ் சுக்குச்
சாரவே யூற வைத்துக்
காய்ந்தபின் சதுரக் கள்ளி
வேரினீ ரதில வித்துக்
காய்ந்தபின் வெள்ளாட் டிற்பால்
சேரவே யவித்தி டித்துத்
தின்றிடத் தீரும் வாயு 122

## அமுக்கிராச்சூரணம்

அமுக்கிராக் கிழங்கு தன்னை
யாவின்பா லதில வித்து
நிமித்தமாஞ் சாதி சாதி
பத்திரி லவங்க நெல்லி
அமித்தமாங் கடுக்காய் தான்றி
யதனுடன் சமனாய்த் தூளைச்
சுமத்தியாய்ச் சேர்த்துத் தின்னச்
சுரமல்லாந் தொலையு மன்றே 123

### சீரகப்பாகு

கரும்பின்சா றிரண்டொன் றாகக்
காய்ச்சிய பாகு தன்னில்
அரும்புசீ ரகமோர் நாழி
பாலினில் வித்துச் சோத்து
விரும்பிய மாட்டாய் வெண்ணெ
யுருகிடும் வேளை பாகில்
சுரும்புண்குங் குமப்பூச் சாதி
சுக்குவான் மிளகுந் தூவே 124





தூவிய பாகு தன்னைத்
துய்த்திடத் துடர்ந்து நாளும்
ஆவியை வாட்டு கின்ற
வத்தியிற் சுரமுந் தீரும்
பூவினி னறவற் றோடே
பொருந்திடிற் சேடத் தாலே
மேவிய சுரமுந் தீர்க்கும்
விரும்புசீ ரகத்தின் பாகே 125

சீரகப் பாகி னோடே
சேர்சரக் கொன்றென் றாலே
பேரும்வே றாகிப் பேசும்
பலன்களும் வெவ்வே றாகும்
கார்புகா விடய மோமங்
கிராணியைத் தவிர்க்குங் காயம்
ஆரவே வாயுக் குத்தை
யகற்றிடு மறிந்து கொள்ளே 126

கராம்பொடு கறுவாக் கஞ்சாக்
கசகசாக் காமப் பூவும்
நிரம்பிய கழஞ்சி ரண்டா
மாமிவை நினைத்துச் சேர்த்து
விரும்பிய மாதர் மைந்தர்
வேண்டிய போது துய்க்கக்
கரும்பினீர் சீர கத்தாற்
காமனோ டிரதி யாவார் 127

சீரக நெய்ய தாகுஞ்
சேர்த்திடி னெய்யி ரட்டி
ஆரவே பேதை யர்க்கு
மணிமுலை யரும்பு மங்கம்
மாரனைக் காட்டுங் கண்ட
மாதவர் தமக்கு மண்மேல்
நாரியர் தமக்கு மேனி
நலந்தரும் புதல்வ ருண்டாம் 128

பச்சைவெண் காய நெய்யிற்
பலமிரண் டவித்துத் தின்னில்
குச்சித மிரத்தஞ் சிந்துங்
குதக்கடுப் புடனே தீரும்
அச்சமில் காயம் பேரா
மணக்கெண்ணெய் பனங்கட் டிக்குத்
துச்சமாங் குன்மம் வாயுச்
சொருகுத லுடனே தீரும் 129

### கறிவடகம்

மும்மையாங் காயமாதி
மொழிந்திடு வடகந் தன்னை
இம்மைவா லுகநா லோது
மியல்பினா லியற்றிச் சேர்க்கில்

கைமுறை யறிதா மாதர்
மடையர்செய் கறிப தார்த்தம்
நன்மணஞ் சுவையு நன்றா
நளபாக மென்று சொல்வர் 130

காருமுந் திருசேர் தோலைக்
கழற்றியே தேங்காய்ப் பாலில்
ஓர்கழஞ் சிங்கி ரண்டுப்
பொருமூன்று கழஞ்சு மஞ்சள்
சேரவே யரைத்த மாவிற்
சேர்த்திடும் வகையைக் கேளாய்
ஈரவெண் காயஞ் சேரெட்
டீர்ந்ததி லிட்டுப் பின்னும் 131

நறுங்கரு வேம்பின் பச்சை
யிலைகொத்த மல்லி நன்றாய்க்
குறுகவே யரிந்து மட்டாய்க்
கூட்டுசீ ரகம்வெள் ளுள்ளி
சிறுகடு குலுவா வெந்த
யம்பலஞ் சேர்த்துப் பாக்குப்
பெறுமிடை வெவ்வே றாகப்
பேணியே காய வைத்தே 132

மூன்றுநாட் காய்ந்த பின்பு
மொழிந்தபா சனத்தில் வைத்தே
தோன்றுவா துவர்கள் வேந்தர்
துய்த்திடப் பாகஞ் செய்யில்
ஊன்றநெய் காய்ச்சி யுண்டை
யுடைத்துத்தா ளித்தால் வாசம்
கான்றிடுங் கறியைத் தேவா
மிர்தெனக் கருது வாரே 133

பின்றையும் வடகஞ் செய்யும்
பேதங்கள் பலவு முண்டு
தின்றிடார் காய மென்றே
சிற்சில சமயச் சாரார்
நன்றதாங் கடுகெள் ளெண்ணெய்
நயனுறச் சேர்த்த லாலே
என்றதை யறிவா மாந்த
ரிகழ்வரிவ் வடகந் தன்னை 134

மோக்குமுக் காய மின்றிச்
சரக்கெலா முன்போற் சேர்த்து
நாய்க்கடு கதித மாக
நறுக்கறி வடகந் தேங்காய்
மீக்கிளர் வடகம் வேம்பிள்
மிளிர்மலர் வடகஞ் சீத
மாக்குறு பூசி னிக்கா
யப்பையும் வடக மாமே 135





வேகவைத் திடும்ப தார்த்த
மேன்மையாம் வடகந் தன்னால்
ஆகையாற் பாகந் தானே
யதிகமா மருந்துக் கெல்லாம்
ஓகையா லுற்றுப் பார்க்கி
லுறமல மாயை கன்மம்
பாகமே நித்யா னந்தம்
பலமென மறைகள் கூறும் 136

இந்தவா றீசன் முன்னா
ளிரங்கியிவ் வுயிர்கட்காய்த்தன்
வந்திரி யென்னு நாம
வரன்முனிக் கருளிச் செய்தான்
நித்தியாச் சவுமி காண்ட
நிகழ்த்துலே கியங்கள் சொல்லி
முந்துநா னத்துக் காக
மொழிந்தது முரைக்கின் றேனே 137

**எண்ணெய்ப்பதம்**

வெந்திடும் பதம தாகில்
விண்டுவிண் டுடைத்து தூளாம்
அந்தநற் பதத்திற் பாகு
வரிப்புடன் புண்ணைத் தீர்க்கும்
மந்தமாம் பதம தாகில்
வழுவழுத் திளகு மெண்ணெய்
சிந்தியாச் சிரசில் வைக்கச்
சேட்டும பித்தந் தீரும் 138

வடியெண்ணெய் கற்கஞ் சேர்த்துக்
கொதியிட்டு வைத்து நாண்மூன்
றிடையிட்டு வடிக்க வேண்டு
மெரிதயி லங்க ளாதி
திடமுற வேண்டும் போதுஞ்
செய்யலாம் பாகந் தப்பில்
கடுவிட மதுவே யாகுங்
கருத்ததில் வைத்துச் செய்யே 139

கொதியெண்ணெய் வடிக்கு மெண்ணெய்
கொளுந்திரி கொளுத்து மெண்ணெய்
மதிமிகு பூப்பு டத்தில்
வாய்கிய தாகு மெண்ணெய்
இதுமுறு மெந்திர வெண்ணெ
யென்னவை வகையா மெண்ணெய்
.............................................................. 140
..............................................................

சந்தன மாதி யாசச்
சாற்றுசீ தளமா மெண்ணெய்
வெந்திறற் காளை யர்க்கமாம்
விருந்தர்க்குச் சற்று மாகா

மைந்தராஞ் சிசுக்கட் காகா
வருகுணந் தேச காலம்
சிந்தையி லெண்ணி மூழ்கிற்
றேகத்தை வளர்க்கு மன்றே 141

## சந்தனாதிதைலம்

சந்தனக் கட்டை யைம்பான்
பலந்தனைப் தளிர்போற் சீவி
வெந்தமட் கலத்தி லிட்டு
விடுபடி பதினாறு றப்பு
முந்துநா ளெட்டு மூற
முறைமையா லெரித்தெட் டொன்றாய்
வந்தநீ ரதில ரைக்கு
மருந்தையு முரைக்கக் கேண்மோ 142

கோட்டஞ்செண் பகப்பூ நீபக்
குசும்பைப்பூச் சிறுநா கம்பூ
வாட்டமில் சாதிப் பூக்காய்
மகிழ்வில்வம் பாதி ரிப்பூ
மூட்டிய கடுக்காய் தான்றி
முதிர்நெல்லி மாயாக் காயும்
தீட்டிய மதுரஞ் சுக்குச்
சிறுதேக்குத் தேவ தாரம் 143

சீரக மிருதார் சிங்கி
சேருங்கற் கடக சிங்கி
கூர்மிள கோர்தக் கோலம்
குளிர்ந்தவான் மிளகுக் கேலம்
பார்நறு மணப்புண் மஞ்சள்
பழுதில்கஸ் தூரி மஞ்சள்
கார்புகாத் தகரம் பச்சை
கமழ்சமுத் திராப்பேர்ப் பச்சை 144

நறும்பிசின் லவங்கப் பட்டை
நற்கிளி யூறற் பட்டை
அறுகுசெங் கழுநீ ரல்லிக்
கிழங்கொடு கொத்த மல்லி
மறுவில்கோ ரைக்கி ழங்கு
மாஞ்சில்பூ லாங்கி ழங்கு
சிறியல வங்கப் பத்திரி
செப்பிடுந் தரளிச பத்ரி 145

இதுக்கொவ்வோர் கழஞ்ச தாகு
மிளகவே யரைக்கச் செய்யும்
புதியதாங் கஷாயத் துக்குப்
பொருந்துமூ லிகைக டம்மில்
அதிகமாந் துளசி கீழ்காய்
நெல்லியா வாரை யத்தி
பதுமத்தின் வளையஞ் சாத்தா
வாரிபற் படகஞ் சீதை 146





ஏகுவல் லாரை சீந்தின்
மெதுக்குப்புல் லாந்தி ரண்டு
நாகமல் லிகைநெய்ச் சிட்டி
நெருஞ்சிநா ரங்கத் துத்தி
சாகினி சிற்ற மட்டி
சிறுகுமிழ் தண்ணீர்ப் பாலை
வேகமி னெல்லி வில்வ
மிலாமிச்சு வெட்டி வேரும் 147

புள்ளடி மொசுக்கை பூளை
பேய்ப்புடோல் கரந்தை கையான்
எள்ளலில் குதம்பை தேற்றா
விண்டுசெம் புளிச்சை கன்னி
வெள்விடத் துவரை நாரி
வேலமுக் கிராய்கு றிஞ்சா
தள்ளலி னிலவேம் பிந்து
நிலப்பனை தகரை தாளி 148

இதுகளிற் சமூலந் தன்னி
லேற்றதோர் பலமு தாகும்
புதியசால் தன்னி விட்டுப்
புனல்படி முப்பத் தாறும்
கொதியுறும் படிநா ளாறிற்
குறைந்திடக் காய்ச்சி யாற்றி
அதைப்பிழிந் தெடுத்த நீரி
லரைகரை சரக்கை யெல்லாம் 149

நல்லெண்ணெய் படிநா லுக்கு
நறியசந் தனக்க ஷாயம்
சொல்லுமா தளம்ப ழம்பால்
திராட்சையுந் தொகுத்துச் சேர்த்து
மெல்லவே கரைத்துக் கற்கம்
விட்டெரி விக்கி னத்தை
வெல்லுநல் லோரை தன்னில்
விநாயகன் பாதம் போற்றி 150

மூன்றுநாட் கொதியிட் டப்பான்
மொழிந்திடு மமிர்த யோகம்
தோன்றிட வடித்த வெண்ணெய்
சொரிந்தபா சனத்தில் வாசம்
கான்றிடு புழுகு பச்சைக்
கர்ப்பூரங் குங்கு மப்பூ
மான் றரோ சனைக முஞ்சு
மருவவே தூவி வையே 151

எண்ணெய்மூழ் கிடுந்தி னத்தி
லின்புளி கைப்பா காது
கண்முதற் கரபா தங்கள்
கமலம்போற் குளிரு மேனி
விண்ணவர் மாதர் கூட
விரும்புவ ரழகு ண்டாகும்

எண்ணரு மேக ரோக 152
மெட்டியும் பார்த்தி டாதே

இந்தநற் சந்த னாதி
யெண்ணெயை யபிடே கிக்கும்
மந்திர முறைமை யாலே
மகாலிங்க மூர்த்திக் காட்டில்
தந்தைதாய் சுற்றத் தோடுஞ்
சதகோடி கற்ப காலம்
இந்திர லோகந் துள்ள 153
வின்பங்க ளனைத்துந் துய்ப்பார்

**சிறுசந்தனாதியெண்ணெய்**

சந்தனம் பலமோ ரைம்பான்
றண்ணீரி லூற வைத்தே
அந்தநாள் போகப் பின்னா
ளவையாறப் பிழிந்த நீரில்
இந்துவோ டேலங் கோட்ட
மின்மிள கிரண்டு மாஞ்சில்
வெந்தயம் லவங்கப் பட்டை 154
பத்திரி நிலத்தில் வேம்ப

நிலப்பனை முத்தக் காசு
நிசியிரண் டரிய சிங்கி
பலசூய மதுரஞ் சுக்குப்
பலமரை யரைபால் விட்டே
கலப்பிலெள் ளெண்ணெய் நாற்சேர்
கற்கமுங் கரைத்துக் கூட்டி
உலப்பிலா ததனிற் சேர்க்க 155
வுரியசா றனைத்துங் கேண்மின்

தாமரை வளையச் சாறு
தண்ணறுந் துளசிச் சாறு
ஏமமாங் கன்னிச் சாறு
மின்மொசு மொசுக்கைச் சாறு
தேமலர் நந்திச் சாறு
சிறுகீரை சீந்திற் சாறு
கோமளக் கொவ்வைச் சாறு 156
கொழுங்கொட்டைக் கரந்தைச் சாறு

சதாவேரிக் கிழங்கின் சாறு
தண்புளி யாரைச் சாறு
பிதாமகி பிருங்கிச் சாறு
பேய்ப்புடோல் பிச்சிப் பூச்சா
றுதாரமா தளங்காய்ச் சாறோ
டுர்நரி முற்கச் சாறு
இதுகளி லிரண்டொன் றேற்றத் 157
தாட்சியென் றெண்ண வேண்டாம்





அதிகத்துக் கதிக மாகுங்
குணமென வருநூ லோதும்
மதியினாற் கிடைத்த மூலி
மட்டினுஞ் செய்ய லாகும்
விதியென வொன்று தப்பின்
வேணுமென் றெண்ண வேண்டாம்
பொதியுறு முனிவ னிவ்வா 158
றுரைத்தனன் பொருந்து மாறே

நறியநன் னாரி வேரும்
நாரங்கம் வெட்டி வேரும்
மறுவிலா வில்வம் வேரும்
மயிலடிக் குருத்தின் வேரும்
சிருகுறிஞ் சாவின் வேரும்
சீதளை தேக்கின் வேரும்
உறுமிலா மிச்சின் வேரு 159
முயரெலு மிச்சை வேரும்

ஒரிதழ்க் கஞ்ச வேரு
முரியநெய்ச் சிட்டி வேரும்
பார்விளாப் பன்றி வேரும்
படகம்வெட் பாலை வேரும்
கார்கவிழ் தும்பை வேரும்
காந்தியின் கணையின் வேரும
........................................ 160
........................................

வெண்கணப் பூட்டின் வேரும்
வெறுநில வேம்பின் வேரும்
தண்வறட் பூலா வேருந்
தணிவிடத் துவரை வேரும்
வெண்ணிறப் பருத்தி வேரும்
வீரையா வாரை வேரும்
மண்ணுறு பூளை வேரு 161
மருக்காரை சூரி வேரும்

இதுகளைச் சமனாய்ச் சேர்த்தே
யிடித்தெரி கஷாய மேனும்
இதுகளைத் தண்ணீ ராலே
யினிதரை கற்க மேனும்
மதியினா லெண்ணெ யோடு
மருவிடக் கொதியிட் டோதும்
விதியினால் வடித்த வெண்ணெய் 162
மேம்படு சந்த னாதி

சிறுசந்த னாதி யென்று
செப்புவ ராயுள் வேதர்
குறுகவே சத்திக் கொக்கக்
கூட்டினுங் குற்றம் வாரா

மறுவிலா தாய்ந்து நோய்செய்
வருத்தத்துக் கேற்கச் சேர்க்கக்
குறுமுனி தானுஞ் சொன்ன
வாகடங் கூறு மாதோ 163

சயமுதற் பித்தத் தாலே
சார்ந்தநோ யனைத்துந் தீரும்
புயல்பொழி பனிக்கா லத்திற்
பொருத்திவைத் திருத்த லாகா
நியமமாய் மூழ்கி லெண்ணெய்
நீட்டிக்கு மாயு வங்கம்
இயல்வுறு கோடைக் கெண்ணெ
யிதுவலா லின்ப மில்லை 164

## பிருங்காமலகத்தைலம்

பிருங்கமா மலகந் தன்னாற்
பேசுமோ ரெண்ணெ யென்ப
அருங்கல மெக்கா லத்து
மாரவே முழக லாகும்
நிரம்பிய வாத பித்த
கபத்தையும் நேர தாக்கும்
விரும்பிய மாதர் போகம்
விடவேணும் முழுகு நாளே 165

சீதமைந் தென்பர் பொன்னாங்
காணியே சிறிய கீரை
ஓதநெய்ச் சிட்டி யூசிப்
பாலைவல் லாரை தம்மை
ஈதனைத் தினையு மொன்றா
யிடித்தசா றொருப டிக்குத்
தாதுறு மொசுக்கை கையான்
றகரைச்சா றிரட்டி கூட்டே 166

கூட்டந்தப் படிநெல் லிக்காய்
குத்திவாங் கினிய சாரம்
தீட்டுநல் லெண்ணெய் சேர
நான்குமொன் றாக விட்டு
மீட்டதிற் சேருங் கற்க
மெழுகுபோ லரைக்க வின்னும்
மூட்டிய கஷாயத் துக்கு
மொழிந்த வேரனைத்துங் கேளே 167

கேள்சிறு காஞ்சி சீந்தில்
சிறுமயி லடிக்கு ருந்து
காமுறு வில்வ நாரி
களப்பன்னை வெட்சி காந்தி
ஊமுறு மறுகு முத்தக்
காசுயர் முட்டி ரண்டு
நாளுறு நளினஞ் சுட்டி
நரிகீழ்க்காய் நெல்லி வேரே 168





வேரெலாஞ் சமனாய்ப் போட்டு
விடும்படி யெட்டொன்றாகும்
நீரினி லரைச ரக்கு
நிதானமோர் களஞ்ச தாகும்
சேர்கடு மூன்று செப்புஞ்
சீரக மிரண்டு சிங்கி
கார்புகாக் கனிகண் மூன்று
கச்சோல மேலங் கோட்டம் 169

கோட்டமில் கொத்த மல்லி
செவ்வள்ளி கூகை நீறு
தீட்டுகஸ் தூரி மஞ்சள்
சிறுதேக்குத் தேவ தாரு
வாட்டமில் செண்ப கப்பூ
வலம்புரி சிறுநா கம்பூக்
கூட்டியே வடித்த வெண்ணெய்
குதுாகுலங் கொடுக்கு மன்றே 170

என்றுமிவ் வெண்ணெய் மூழ்க
வெரிகுன்மம் பாண்டு ரோகம்
துன்றிய வீக்கங் கைகால்
சோருத நாச ரிப்புக்
கன்றிய சொறிசி ரங்கு
குட்டங்கண் டுய மாதி
நின்றிடா தகலு மீதே
நிறைபிர்ங்கா மலக மாமே 171

### அருநெல்லியெண்ணெய்

அருநெல்லி யிம்பி லிக்கா
யார்தம ரத்தஞ் செங்காய்
மருவிய நெல்லி யின்காய்
மாதளை புளித்த செங்காய்
வரிசையா லைந்து சாறும்
வகைக்கொரு கொத்த தாக
இருமையாஞ் சேரெள் ளெண்ணெ
யித்துடன் சேர்த்துக் காய்ச்சசே 172

காய்ச்சிடும் போது சுக்குத்
திப்பிலி கறிகச் சோலம்
வாய்ச்சவிந் துப்பு வள்ளி
வலம்புரி மதுர மாஞ்சில்
பூச்செறி லவங்க மஞ்சள்
போனகம் வசம்ப ரத்தை
வாய்ச்சதாம் வராக னொன்று
வார்த்தரை தயிரி னோடே 173

தயிரெண்ணெய் தன்னை மூழ்கிற்
றலையெரி வனைத்துந் தீரும்
மயிர்முளை யாமற் சீந்தின்
மகிழ்குமிழ்ப் பழமுஞ் சேரும்

நியமமாய்த் தலையெ ரிக்கு
நிம்பத்தி னெண்ணெய் சேராய்
பயில்பழங் காய்ச்ச லுக்குப்
பலையொடு லாட்சை சேரே 174

பாலுட னெண்ணெய் சேர்த்துப்
பகர்சதுர்ச் சாதத் தோடு
சீலமாஞ் சீத மஞ்சின்
சாற்றையுஞ் சமனாய்ச் சேர்த்துக்
கோலமாய் வடித்து மூழ்கக்
குடலெரிப் புவாந்தி யாதி
சீலமில் பித்தமெல்லாந்
தேகத்தை விட்டுப்போமே 175

அஞ்சுநா லிருமூன் றொன்று
சாகமுஞ் சரக்கு மாவின்
விஞ்சிய பாலோ டெண்ணெய்
மேவியே யெரித்து மூழ்கில்
நெஞ்சுறு பித்த நீங்கும்
வலுவுமா மழகுண் டாகும்
வஞ்சியர் மதன னென்ன
மாந்தர்மெய் விளங்கு மன்றே 176

## மேகசஞ்சீவியெண்ணெய்

மேகசஞ்சீவி யென்ன
மேம்பட வுண்டோ ரெண்ணெய்
வேகநன் னாரி கான்றை
வேட்பாலை வில்வஞ் சீந்தில்
பாகமா வாரை பன்றி
யிதினோடு பஞ்ச சீதம்
ஓசையோ டிந்தச் சாக
மொருசரி யாகக் கூட்டே 177

வெட்டிவேர் பொன்னா வாரை
யிலாமிச்சை கொன்றை காயா
மடடுறு சிவதை நாரி
மயிலடிக் குருந்து துத்தி
விட்டவெள் ளறுகா வாரை
வேரெலாஞ் சமனாய்ப் போட்டு
விட்டுநீ ரெரிக ஷாயம்
விரைந்துநா லொன்றாய் வற்ற 178

எரித்தசீர்க் கஷாயந் தன்னி
லிளகவே யரைச ரக்குப்
பொருத்தமா நாகம் பூவோர்
பலமுக்கால் கோட்டம் பாதி
அரத்தையாங் காலில வங்க
மரைத்தெலாங் கரைத்து விட்டு
விரைத்தசெவ் விளநீர் பாலும்
[illegible] ணெய்க்கு நோரய் 179





வடித்திடு மெண்ணெய் மேக
வாதகுத் தகற்றுங் கைகால்
பிடித்திடு மடங்கா மேகக்
கடுப்பையும் பேதித் தோட்டும்
தொடுத்திடு மேகக் காய்ச்சல்
தொலைத்திடும் தோடம் வாரா
மடக்கொடி மாதர் மைந்த
ரனைவர்க்கு மருந்தி தாமே 180

## முக்கூட்டிலெண்ணெய்

ஏரண்டத் தைலத் தோடே
யினியநெய் யெள்ளி லெண்ணெய்
ஓர்சரி யாகக் கூட்டி
யுயர்சீத மஞ்சுங் கூட்டிக்
கார்புகா வரிசி யேலங்
கடுமூன்று காய்கண் மூன்றும்
ஓர்சரி வடித்த முக்கூட்
டுடலுக்குச் சுகம தாமே 181

கண்வலி கபாலம் வாயு
கண்டத்தி லிருமல் விக்கல்
நண்ணுறு நாவ ரட்சி
நடுங்கிய தலையிற் பித்தம்
திண்ணமாய் மூழ்கத் தீருந்
தின்கிலு மிரும றீர்க்கும்
விண்ணவ ரமிர்த மொக்கும்
விரித்தமுக் கூட்டுத் தானே 182

இடித்திடு தண்ணீர் விட்டான்
கிழங்குச்சா றிரும டங்காம
விடுத்திடு மெண்ணெய் தன்னில்
விடுசரக் கொடுவேர்ச் சாறும்
எடுத்துரைத் திடுவஞ் சீத
மஞ்சதா மிலையு மொன்றாய்
இடித்தொரு படியெண் ணெய்க்குச்
சரக்குவே ரிருக முஞ்சே 183

சமுத்திராப் பச்சை யிட்டி
சதுரநா கப்பூக் கோட்டம்
அமிர்தமாங் கடுக்காய் தான்றி
யருநெல்லி கடுகு மூன்றோ
டமிர்தமாம் வல்லி செச்சை
யருஞ்சிற்ற மட்டி தேவி
குமரிவேர் கூட்டு மெண்ணெய்
கொடும்பிணி யெல்லாந் தீர்க்கும் 184

இதுசந்த னாதிக் கொக்கு
மெனப்பெரி யோகள் சொல்வர்
அதனமா மெண்ணெய்க் கெல்லா
மரியதாஞ் சாத்தா வாரி

பதமுறை தப்பி னாலும்
பழுதுவா ராது மூழ்கில்
கதமுறு பித்த மேகக்
காமாலை கண்ணோய் தீரும் 185

## தாழையெண்ணெய்

தாழையின் விழுதிற் சாற்றிற்
சதகுப்பை பலம ரைத்தே
................................நாளி கேர
மிளிர்சீதஞ் சூர மைந்தாம்
தாழ்வட்டுக் கண்டங் காரி
சங்குசெம் முள்ளி தூது
முழ்கிடு மெண்ணெய் சேட
முடம்வாத முற்றுந் தீர்க்கும் 186

எள்ளெண்ணெய் தனக்குப் பாதி
யினியநிம் பத்தி னெண்ணெய்
தள்ளலில் மோசுக்கை கையான்
றகரைகாற் றோட்டிச் சாறும்
உள்ளவேம் பாடல் தான்றி
கடுக்காயூர் மிளகு கம்பி
தள்ளுறாக் கதிரமே செஞ்
சந்தன மமுக்கி ராவேர் 187

கரியசீ ரகம்பீ நாறி
மரமஞ்சள் கடவுட் டாரு
அரியசெண் பகப்பூ வீதி
லகப்பட்ட சரக்கை கூட்டி
வரிசையால் வடித்த வெண்ணெய்
வாயினிற் பல்லிற் காதில்
அரியதாஞ் சிலந்தி முற்றும்
பிளவையு மகற்று மாதோ 188

நொச்சியா தண்டை கான்றை
நுணாக்கனி மணிப்பா வட்டை
செச்சையானதில்வேர் பூக்கா
யிலையிரண் டெண்ணெய் சேர்க்கில்
உச்சித மாகுங் கட்டுக்
கரப்பன்புண் ணொடுக பாலத்
தச்சமாம் பீனி சாதி
யனேகநோ யகற்று மன்றே 189

## நாரங்கத்தைலம்

நாரங்கப் பழத்தின் சாற்று
ளவில்பெரு மெண்ணெய் சொல்வன்
சூரமஞ் சென்று சொன்ன
மூலிகை சாறும் வேரும்





சீரிதாஞ் சீத மஞ்சுஞ்
செம்பீரப் பழந்து ழாயும்
கூரிய வூசிப் பாலை
குமிழ்நறுந் தாளிச் சாறும் 190

கடுமுன்று கொத்த மல்லி
கருதிரு சீர கங்கள்
படுநாகப் பூல வங்கப்
பட்டைகாய் மூன்றும் பாலும்
விடுமிலா மிச்சை நாரி
வெட்டிவேர் நறிய சந்தும்
படுமெண்ணெய் சுவாச காசம்
பறந்திடத் துரத்து மன்றே 191

நாரங்கத் தைலந் தன்னி
னற்சதுர்ச் சாதத் தோடு
சீரிதாங் கெந்த மைந்தாய்ச்
செப்புகுங் குமப்பூக் கோவின்
பாரும்ரோ சினைகஸ்தூரி
பளிதநற் புழுகு சட்டம்
சேரவே கண்ணிற் காசம்
படலமுந் தீர்க்கு மூழ்கின் 192

## நெய்ச்சிட்டியெண்ணெய்

நெய்ச்சிட்டி துளசி கீழ்காய்
நெல்லியோ ரிதழே வில்வப்
பச்சிலை யெண்ணெய் காய்ச்சிப்
பருவத்திற் போட்டு மூழ்க
அச்சமாங் கண்ணோ யெல்லா
மகற்றிடு மாவா ரம்பூ
நொச்சிகாற் றோட்டி கான்றை
நூதன மிளகு மஞ்சள்
பிச்சநற் பழமு முந்து
புளிதலைப் பிணிக்கு நன்றே 193

## மிளகெண்ணெய்

மிளகினை யிடித்துப் போட்டெள்
ளெண்ணெயை மிதக்க விட்டுத்
துளபமு மிட்டு மூடிச்
சொன்னதா னியப்பு டத்தில்
வளமையாய்ப் பன்னி ரண்டு
நாள்வைத்து வாங்கி மூழ்க
உளமுறு பீளை மூச்சுப்
பீனிச முவாந்தி தீரும் 194

இதினுட னேய றிந்தே
யிடுவென் விட்டு வைத்துப்
பதமுறை வாங்கி மூழ்கப்
பண்ணெடு முறையு முண்டு

விதமுறு பூப்பு டத்தும்
வெய்யிலி னெற்கு வைக்குள்
கதகத்தி லிடுநல் லெண்ணெய்
கலப்பது முசித மாமே 195

## கடுகெண்ணெய்

இனியருட் டங்கள் தீர்க்க
வியற்றிட மெண்ணெய் சொல்வன்
பனிமிகு நாட்டி னன்றாங்
கடுகெண்ணெய் பதத்திற் செய்யில்
துனியறுங் கராம்பு கறுவாத்
தோன்றிய வெண்ணெ யத்தி
மனிதர்மான் கவரி காண்டா
மிருகத்தின் மயிரி னெண்ணெய் 196

இதுவெல்லாந் தேச காலத்
திடரினுக் கேற்கச் செய்யக்
கதமுறு காய்ச்ச நீரா
தத்தியிற் கனன்று பற்றில்
பதமுறு மசுவ கந்தி
பலாலாட்சை யென்னு மெண்ணெய்
இதமுற வைத்து மூழ்க
வெழுஞ்சுர மெல்லாந் தீர்க்கும் 197

பலையெனும் பேர மட்டி
பலமைப்பான் பானை தன்னில்
நிலையதாய் மரக்கா னாலு
நீரினி லட்டே ரித்தே
உலைவிலா லாட்சை யென்னு
முயர்தில்லை மெழுகோர் சேரை
அலைவிலா முன்போ னீரி
லவித்தொரு படியாய் வாங்கே 198

அமுக்கிராக் கிழங்கோ ரைம்பா
னரைத்ததி லாட்சை நீருஞ்
சுமதியாங் கடுக மூன்றுந்
துவரறு தான்றிக் காயும்
கமழ்சிறு தேக்குக் காந்தி
கஸ்தூரி மஞ்சள் தாரு
அமிர்தமா முலைப்பா லாலே
யரைத்தெலா மொன்றாய்ச் சேர்த்து 199

ஆட்டின்பால் படியி ரண்டோ
டப்படி யெண்ணெய் வார்த்து
மூட்டுதீ யடுப்பி லேற்றி
முதிர்ந்திடா மெழுகு போலக்
காடடிய பதமாம் வாறு
கமலம்போ லெரித்துக் கிட்டி
யூட்டியே வடித்த வெண்ணெய்
பொருத்தவே சுரங்கள் போகும் 200





### வெருகெண்ணெய்

கெசகன்னித் தைலந் தன்னைக்
கேளடா முறைக்காய்ச் சற்கும்
அசைவுறு நடுக்கக் காய்ச்ச·
லகற்றிடும் பொருத்தி மூழ்கில்
பசையுறு வெருகின் பச்சைக்
கிழங்கினைப் பழமோ ராலே
இசையுறு கறிகஸ் தூரி
மஞ்சளிட் டெரித்துக் கொள்ளே 201

## முலைப்பாலெண்ணெய்

தன்னிய தயில மென்னச்
சாற்றுவ ரதைப்பொ ருத்தில்
மன்னிய சேடம் விக்க
லீழையு மாற்று மாதர்
பொன்முலைப் பாலோ டெண்ணெய்
சரிவிட்டுப் போடு மூலி
இன்னலில் சதுர்ச்சா தத்தோ
டினியருங் குமப்பூக் கோட்டம் 202

ஆதபந் தன்னில் வைத்து
மரியநெற் புடத்தில் வைத்தும்
ஓதநாண் மூன்று செல்ல
வுண்ணலா மூழ்கி னாலும்
கேதம்போஞ் சேடம் விக்கல்
கிளத்திடு சுரமுந் தீரும்
நாதனார் சொன்ன தார்க்கு
நலந்தரு முலைப்பா லெண்ணெய் 203

ஆமணக் கெண்ணெய் நெய்யி
லணிமுலைப் பால்சா ரித்துக்
காமுகர் கையி லுள்ளங்
காலிலே பனத்தைச் செய்யத்
தோமுறு மேகத் தாலே
தோற்றுகண் ணோய்க ளரும்
தாமுறு தலையிற் றேக்கச
சர்வாங்க முறுத முற்போம் 204

### பஞ்சகற்பம்

மிளகொடு கடுக்காய் நெல்லி
மிகுவேம்பின் பருப்பு மஞ்சள்
அளவுறப் பசுவின் பாலி
லரைத்ததைச் சிரசிற் றேய்க்கில்
இளகிடா திறுகுந் தேக
மேற்றிடுங் கற்பத் திற்கும்
வளமையாய் நாளு மூழ்க
வலுப்படு மாதர் போகம் 205

### காதுநோய்க்கு

இஞ்சிநீர் கொணணீர் மாடங்
கடுகினி லெரித்த வெண்ணெய்
விஞ்சையா மிளகு காயின்
பழம்வெடித் திடவெ ரித்தே
கொஞ்சமாய்க் காதிற் குத்தக்
கொடியகுத் துடனே மாறும்
துஞ்சலின் மயிலின் றோகை
தொலைத்திடுங் காத டைப்பை 206

கடனுரை வலம்பு ரிக்காய்
மாடமுங் கடுகுங் கூட்டி
உடனெரித் துடனே குத்த
வொழிந்திடுங் காதி ரைப்புப்
படலிகை குடுச்சி யெண்ணெய்
பகர்ந்தசா ரணைக்கி ழங்கில்
கெடலரு மெண்ணெய் குத்த
மூழ்கிடக் கேட்குங் காது 207

## தாழங்காயெண்ணெய்.

நறும்பிசின் சதுர்ச்சா தந்தா
னறும்பச்சை கோட்டங் குப்பை
மறுவிலிந் துப்பு ரட்டி
மற்றதோர் கழஞ்சு சந்து
குறுதாரு குக்கின் மாஞ்சில்
கூறகி விடயத் தோடு
பெறுமதி மதுர மற்றும்
பேசிய வேருங் கேளே 208

அதிபல நாரி கோரை
யிருவேலி யாடு தின்னாத்
துதிபெறு சிற்றா மட்டி
கண்டகி தோற்றுங் காய்ச்சா
றிதில்விடு பாலோ டெண்ணெ
யிளநீருஞ் சமனாய் விட்டே
விதியினில் வடித்த வெண்ணெய்
வலக்கிடு மேகந் தன்னை 209

இப்படி நோயொன் றுக்கா
வெண்ணிலா மருந்து சொன்னார்
தப்பற வீச னென்றுந்
தயவுள னாத லாலே
கைப்பட வரிதாய்க் காட்டின்
மலைகளிற் காணா தெல்லாம்
செப்பினன் குணமுஞ் செய்யுங்
கிரியையுஞ் சிவனே கண்டாய் 210

பொசிப்பென வீசன் சொன்ன
பொருவிலா வசனந் தன்னால்





பசித்திட லொழியு நோய்போம
பழுதிலாக் கற்பந் தின்றால்
அசுப்பிலாக் காய சித்தி
யாமென மனித ராய
பசுக்களுக் குரைக்கு மிந்நூ
லாதலாற் பசுநூ லாமே் 211

பாற்கடற் பிறந்த தன்வந்
திரியெனும் பகவான் சொன்ன
நூற்கட லரிதென் றெண்ணி
நுவன்றனன் றமிழா லித்தை
வாக்கினாற் சொல்வார் கேட்பார்
வயித்தியஞ் செய்வார் யார்க்கும்
ஆக்குறு மருத்தங் காம
மோட்சமு மதனா லாமே 212

அணியுருத் திராக்க நீறோ
டஞ்செழுத் தான்ம லத்தைத்
துண்செயுங் குரவ னென்றே
சொல்பதி நூல்க டக்க
மணிமந்தர மருந்தி னாலே
மாறிடுங் கவிகண் மாந்தர்
பணிபடு விடத்தை நீக்கப்
பகர்ந்தவா கடம தாமே 213

சௌமியகாண்டம் முற்றிற்று.

●

**சொக்கநாதர் தன்வந்திரியம் முற்றுப்பெற்றது.**

# நன்றியுரை

எமது சித்த - ஆயுள்வேத வைத்திய சம்பந்தமான நூல்கள் பல இலங்கையில் தோன்றி உள்ளன. எமது நாட்டின் தட்ப வெப்ப சூழ்நிலைக்கும், மக்களுக்குமேற்ப சில தனித்துவங்களை கொண்டு தோன்றியது இயல்பு ஆகும்.

எமது நாட்டில் தோன்றிய நூல்களில் பல கால மாற்றததுல அழிந்திட சில நூல்கள் அங்கொன்று, இங்கொன்றாக உயிர் வாழ்ந்தன. கிடைத்த நூல்களும் சரிவர பேணப்படாவிட்டால் காலவோட்டத்தில் அழிந்துவிடும் என உணர்ந்த நல்ல உள்ளங்கள் மருத்துவ சுவடிகளை சேகரித்து பாதுகாத்தன. சிலர் அதனை அச்சு வடிவில் நூல்உரு ஆக்கினர். அப்படி அச்சு வடிவில் வெளியிட்ட நூல்களும் இன்று எமக்கு கிடைப்பது அரிதாயிற்று.

மருத்துவ நூல்களை பதிப்பித்து வெளியிட்டு வைத்தவருள் மருத்துவர் ஐ. பொன்னையாபிள்ளை என்பவர் போற்றத்தக்கவர் ஆவர். இவர் பரராசசேகரம், செகராசசேகரம் மற்றும் சொக்கநாதர் தன்வந்திரியம் போன்ற முக்கிய நூல்களையும் வேறு நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார் என அறியமுடிகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுதேச மருத்துவத் திணைக்களம் தாபிக்கப்பட்டதும் அதன் முதலாவது சுதேச மருத்துவ மாகாண பணிப்பாளராக கடமையாற்றியவர் வைத்திய கலாநிதி. பூ. உரோமகேஸ்வரன் ஆவார். அவரின் காலத்தில் ஆயுள்வேத வைத்திய பாதுகாப்புச் சபையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து வைத்தியர்கள் பல கோரிக்கைகள் விட்டனர். அதில் ஒன்று வைத்தியப் புத்தகங்களை மீள் பதிப்புச் செய்து வெளியிடுதல்





வேண்டும் என்பதுமாகும். இதனை கவனத்திலெடுத்த சுதேச மருத்துவத் திணைக்களம் அதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடு களை தொடங்கிவைத்தது.

இதற்கான பலதிட்டங்களைதீட்டி ' அதற்கான அனுமதியையும் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், தலைமைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் இருந்தும் பெற்றதுடன் ஆலோசனையையும் பெற்று புத்தக பதிப்புக்கு என ஒரு குழுவையும் அமைத்து, பணிப்பாளர் அவர்களே அதற்கு தலைமையும் ஆனார்.

இந்த நிலையில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ. உரோமகேஸ்வரன் அவர்களின் பதவிக்காலம் முடிய, புதிய பணிப்பாளராக பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி அவர்கள் கடமையேற்றார்கள். அவரும் புத்தக மீள் பதிப்பின் முக்கியத்துவம் உணர்ந்து, அதற்காக பாடுபட்டு முதற்கட்டமாக சில புத்தகங்களை மீள்பதிப்புக்கு கொடுத்தார். அதன் பேறாக இன்று சில புத்தகங்கள் எமக்கு கிடைக்கக் கூடியதாக உள்ளது. ஆகவே வைத்தியர்கள் ஆகிய நாம் சுதேச மருத்துவத் திணைக்களத்துக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம்.

இன்று இப் புத்தகங்கள் வெளிவருவதற்கு, சகலவிதத்திலும் உதவியும், அனுமதியும் அளித்த வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

புத்தகங்கள் வெளிவர சகல உதவிகளும் ஆலோசனைகளும் அளித்து ஊக்கப்படுத்திய தலைமைச் செயலாளர் அவர்கட்கும் நன்றி கூறுகின்றோம்.

புத்தகங்களை வெளியிட நாளிலும் பொழுதிலும் ஊக்கமுடன் உழைத்த சுதேச மருத்துவத் திணைக்கள பணிப்பாளர், சுகாதார அமைச்சு செயலாளர் ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்னும் புத்தக வெளியீட்டில் ஒத்துழைத்த சுதேச மருத்துவத் திணைக்கள ஊழியர்கள், சிறப்புற புத்தகத்தை அச்சிட்டு உதவிய பதிப்பகத் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் ஆகிய சகலருக்கும் நன்றி கூறுகின்றோம்.

முக்கியமாக புத்தகங்களை பதிப்பிக்க உதவியாக, தமது பழைய புத்தகங்களை தந்து உதவிய வைத்தியகலாநிதி. ஸ்ரீபதிசர்மா அவர்களுக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம்.

நன்றி.

இ. தர்மராஜா, D. A. M. S.
புத்தக குழு உறுப்பினர்,
தலைவர்,
ஆயுள்வேத வைத்திய பாதுகாப்புசபை,
திருகோணமலை.